# மன்னா

# மன்னார் மறைசாட்சிகளின் 475ஆவது ஆண்டு நிறைவு விழா சிறப்பாக நடைபெற்றது

## இலங்கைக்கான திருப்பீடத்தின் திருத்தூதுவர் பங்கேற்பு.







மன்னார் மறைசாட்சிகளின் 475ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி திருத்தலத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.15 மணியளவில் சிறப்பாக நடைபெற்றன.

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி. பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இலங்கைக்கான திருப்பீடத்தின் திருத்தூதுவர் பேராயர் கலாநிதி பியரே நியான் வன்ரொட், மன்னார் மறைமாவட்ட முன்னைநாள் அப்போஸ்தலிக்கப் பரிபாலகர் ஆயர் பேரருட் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை மற்றும் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்டங்களின் குருமுதல்வர்கள், குருக்கள் இணைந்து திருவிழாத் திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். இத் திருப்பலியில் மன்னார் மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான இறைமக்கள் பங்குகொண்டு இம்மறைசாட்சிகளுக்கு பக்தி வணக்கத்தைத் தெரிவித்து இறைவனுக்கு நன்றி கூறினர்.

14







# மன்னார் மறைமாவட்ட செபமாலைப் பேரணி மிக அருட்சியாக நடைபெற்றது







மன்னார் மறைமாவட்ட மரியாயின்சேனை ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட செபமாலைப் பேரணியானது 13.10.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று மடு மறைக்கோட்டத்தில் நடைபெற்றது. ஒவ்வொரு ஆண்டும் மறைமாவட்ட செபமாலைப் பேரணியானது வெவ்வேறு மறைக்கோட்டங்களில் மறைமாவட்டம் ரீதியாக நடைபெற்று வருகின்றது.

இச் செபமாலைப் பேரணியானது மடு மறைக்கோட்டத்தைச் சேர்ந்த அடம்பன் பங்கின் நெடுங்கண்டல் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட பவனியானது மாந்தை புனித லூர்து அன்னை ஆலயத்தை வந்தடைந்ததுடன் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அன்னையின் திருச்சுரூப ஆசீர் வழங்கப்பட்டது. செபமாலை அன்னையின் மாதமாகிய இவ் ஐப்பசி மாதத்தில் இச் செபமாலைப் பேரணி இடம்பெற்றுள்ளது மிகச் சிறப்பான விடையமாகும். பல பங்குகளிலிருந்தும் குருக்கள், கன்னியர்கள், இறைமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# புனித மரிய பவுஸ்ரீனாவின் முதற்தரப் புனித பண்டம் மீண்டும் மன்னாரில்





இறை இரக்க அப்போஸ்தலியான புனித மரிய பவுஸ்ரீனாவின் முதற்தரப் பண்டமானது (First Class Relics) இரக்கத்தின் மாதாவின் கன்னியர் சபையின் உலகளாவிய முதல்வியினால் மன்னார் மறைமாவட்ட குரு அருட்பணி. ஜெஸ்லி ஜெகானந்தன் அடிகளாரிடம் 15.10.2019 செவ்வாய்க்கிழமை அன்று போலந்து நாட்டின் கிராக்கோ நகரிலுள்ள புனித மரிய பவுஸ்ரீனாவின் கல்லறை சிற்றாலயத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டது.

அருட்பணி. ஜெஸ்லி ஜெகானந்தன் அடிகளாரின் முயற்சியினால் முதல் தடவையாக புனித மரிய பவுஸ்ரீனாவின் புனித பண்டம் போலந்து நாட்டிலிருந்து மன்னார் மறைமாவட்டத்திற்கு இறை இரக்க ஆண்டாகிய 2016இல் கொண்டு வரப்பட்டு வவுனியா மறைக்கோட்டத்தின் பம்பைமடு பங்கின் இறை இரக்கத் திருத்தலத்தில் 28.09.2016 புதன்கிழமை அன்று ஸ்தாபிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இறை இரக்கப் பக்தியை மன்னார் மறைமாவட்டத்தில் ஆன்மீக வாஞ்சையோடு பரப்புவதற்காக எடுக்கின்ற அனைத்து முயற்சிகளுக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக அருட்பணி. ஜெஸ்லி ஜெகானந்தன் அடிகளாரை மன்னா பாராட்டி மகிழ்கின்றது.

# மன்னா

பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

## புதுப்பித்தல் காலத்தின் தேவை

**அன்பிய வாழ்வினூடாக கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சி**

இந்த உலகத்தில் அனைத்து ஜீவராசிகளும் அடிப்படையில் நேரத்திற்கு நேரம், காலத்திற்குக் காலம் மாற்றங்களைக் கடந்து செல்கின்றன. அதாவது படைப்பின் மிகச் சிறிய ஜீவராசியான நுண்ணங்கியிலிருந்து படைப்பின் சிகரமான மனித இனம் வரையிலான அனைத்து உயிர்களும் இம் மாற்றத்தைச் சந்திக்கின்றன. மாற்றம் ஒன்றே மாறாதது. அந்தவகையில் காலத்திற்குக்காலம் சூழலுக்கேற்ப மாறுகின்ற வாழ்வியலில் கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கி மன்னார் திரு அவையின் தனிநபர், இளைஞர், குடும்பம், அன்பியம் இவையனைத்தும் புதுப்பித்தலுக்குள்ளாக ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கருப்பொருளை முன்வைக்கின்றது. ஒரு சமுகத்தின் அடிமட்ட அலகு குடும்பமே. அந்தக் குடும்பங்கள் ஒன்றாக இணையும் பொழுது உருவாவது அன்பியம். "அன்பிய வாழ்வினூடாக கிறிஸ்தவ வாழ்வின் முதிச்சியை நோக்கி" இதுவே மன்னார் திருஅவையின் இலக்காகும்.

**புதுப்பித்தல் ஆண்டு - 2019**

கடந்த 2018ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் கடந்த ஆண்டு அமுல்படுத்திய திட்டங்களை மீளாய்வு செய்து புதிய வருடம் 2019ஆம் ஆண்டின் தனிநபர் புதுப்பித்தல், இளைஞர் புதுப்பித்தல், குடும்பம் புதுப்பித்தல், அன்பியம் புதுப்பித்தல் போன்ற விடயங்களை ஆய்வு செய்து திட்டங்களை முன் மொழிந்தோம். ஆகவே மன்னார் திருஅவையாகத் புதுப்பித்தல் ஆண்டு 2019இல் நாம் தனியாக, குடும்பமாக, ஆலயமாக, பங்காக கிறிஸ்தவவாழ்வில் அடைந்தவை என்ன? தவறியவை எவை? என சிந்திக்கின்ற காலம் இது.

**புதுப்பித்தல் - சிறப்புக் கவனம் அன்பியம்.**

இந்த உலகம் மாற வேண்டும் என்றால் தனி மனிதன் மாறவேண்டும். தனிமனிதன் மாற வேண்டும் என்றால் அவன் தனியாக மாறமுடியாது. அவனோடு சேர்ந்த சமூகமும் மாறவேண்டும். ஆகவே கிறிஸ்தவ சமூகத்தின் தனி மனித மாற்றம் என்பது ஒரு வகையில் அன்பியத்திலிருந்து பெறுவது எனலாம். புதுப்பித்தல் தேவை அவசியம். இந்தப் புதுப்பித்தல் ஒவ்வொரு மனிதனுடைய விசேடமாக கிறிஸ்தவனுடைய வாழ்க்கையிலும் பிறப்பிலிருந்து அவன் இறக்கும் மட்டும் அவனுடைய சமூக பொருளாதார கலை கலாசார அரசியல் அனைத்தோடும் பின்னிப்பிணைந்ததாகும்.

புதுப்பித்தல் சிறப்புக் கவனம் அன்பியம் 2020ஆம் ஆண்டுக்குள் காலடி பதிக்க எமது கிறிஸ்தவ வாழ்வைத் திட்டமிட ஆரம்பிக்கின்ற வேளையில் மறைமாவட்ட இந்த சிறப்புக் கவனத்திற்காக நான் ஒரு குரு, துறவி, பெற்றோர், பிள்ளைகள், தாய், தந்தை, சிறுவன், இளைஞன், யுவதி என்ற வகையில் தனிப்பட்ட ரீதியான எமது தனிநபர் புதுப்பித்தலை எவ்வாறு உறுதி செய்யப்போகின்றோம். ●

**அதற்கான எனது அணுகுமுறைகள் என்ன?**

*அன்புடன் அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா,*
*மன்னா பதிப்பாசிரியர்.*

## மன்னார் மறைமாவட்ட திட்டமிடல் மாநாடு – 2020

மன்னார் மறைமாவட்ட 2020ஆம் ஆண்டிற்கான வருடாந்த திட்டமிடல் மாநாடு வருகின்ற கார்த்திகை மாதம் 21,22,23ஆம் திகதிகளில் மன்னார் புனித யோசேவ்வாஸ் பொதுநிலையினர் ஆணைக்குழு நிலையத்தில் (குடும்ப பணியகம்) நடைபெறும். ஒவ்வொரு ஆண்டும் மன்னார் திருஅவை காலத்தின் தேவைக்கேற்ப "அன்பிய வாழ்வினூடாக கிறிஸ்தவ வாழ்வின் முர்ச்சியை நோக்கி" என்ற இலக்கை அடைய பொருத்தமான கருப்பொருளை மையமாக கொண்டு இறைமக்களை கிறிஸ்தவ வாழ்வில் ஆழப்படுத்தி வருகின்றது. அந்த வகையில் நடைமுறை ஆண்டின் தொடர்ச்சியாக வருகின்ற 2020ஆம் ஆண்டை "புதுப்பித்தல் - அன்பியங்களின் மீதான சிறப்பு கவனம்" என்ற கருப்பொருளில் சிந்தித்து தியானித்து, தற்கால சமூக சமய கலாச்சார பொருளாதார அரசியல் நிலைக்கேற்ப திட்டங்களை வகுத்து பயணிக்க மன்னார் திருஅவை அனைத்து இறைமக்களையும் அன்போடு கேட்டு நிற்கின்றது. இம் மறைமாவட்ட திட்டமிடல் மாநாடு இறை ஆசீரோடு அர்த்தமுள்ள வகையில் சிறப்பாக அமைய எம் தனிப்பட்ட குடும்ப செபங்களில் இக் கருத்துக்களுக்காக செபிப்போம். ●

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்
-மன்னா நிர்வாகம்-

"வாழ்வால் மற்றவர்களை எவ்வாறு புனிதப்படுத்தமுடியும் என சிந்தித்து செயற்படுவோம்"

## மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பேர்னாண்டோ ஆண்டகை



பரிசுத்த பாப்பரசரின் வேண்டுகோளுக்கிணங்க 2019ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தை மறைபரப்பு மாதமாக நாம் அனுசரிப்போம். நாம் எமது மன்னார் மறைமாவட்டத்தில் புதுப்பித்தல் ஆண்டில் பயணிக்கும் வேளையில் எமது வாழ்வால் மற்றவர்களை எவ்வாறு புனிதப்படுத்த முடியும் என சிந்தித்து செயற்படுவோம் என மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பேர்னாண்டோ ஆண்டகை தனது மறையுரையில் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மறைசாட்சிகளின் 475வது ஆண்டு நிறைவு விழா கடந்த 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று மன்னார் மறைமாவட்ட திருஅவையினால் பெருவிழாவாகக் கொண்டாடியபோது பெருவிழா திருப்பலி வேளையில் மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பேர்னாண்டோ ஆண்டகை தனது மரையுரையில் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர், அனைவருக்கும் வேதசாட்சிகளின் 475வது ஆண்டு விழாவில் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றேன். மறைசாட்சிகளின் உயிர்த்தியாகம், நம்பிக்கை ஒவ்வொருவரையும் இறை அருளால் நிரப்புவதாக. இவ் ஆண்டை மறைமாவட்டத்தில் புதுப்பித்தல் ஆண்டாகப் பிரகடனப்படுத்தி அதை வாழ்ந்து வருகின்ற இவ்வேளையில் இந்த யூபிலி ஆண்டு எமது கிறிஸ்தவ வாழ்க்கைக்குப் புதுப்பித்தல் பெறுவதற்கு பெரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என நான் ஆசித்து நிற்கின்றேன். புனித பேதுருவின் திருமுகத்தில் நீதியின் பொருட்டில் துன்புற வேண்டியிருப்பினும் நீங்கள் பேறுபெற்றவர்கள் எனக் கூறப்படுகின்றது.

இறை இயேசுவின் வார்த்தை, மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக் கொள்ளுபவரே விண்ணுலகில் இருக்கும் என் தந்தையின் முன்னிலையில் நானும் அவர்களை ஏற்றுக் கொள்வேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தைகள் மூலம் எமக்கு எவ்வாறான அழைப்பைத் தருகின்றார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். உடலை கொன்றாலும் ஆன்மாவை கொல்லாமல் இருப்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம் என்று கூறுகின்றார். இன்றைய திருப்பலி வாசகங்கள் எம்மை ஒரு சாட்சிய வாழ்வுக்கு அழைக்கின்றன. சாட்சியம் திருச்சபையில் ஆரம்பத்திலிருந்தே தொடர்ந்து வந்துள்ளது. கிறிஸ்தவத்தில் முதல் மூன்று நூற்றாண்டிலிருந்து வந்தது என்னவென்றால் கிறிஸ்துவுக்காக உயிரைக் கொடுப்பது மறைசாட்சிகள் ஆகும். உரோமை அரச மயமாக இருந்தவேளையில் பலர் கிறிஸ்தவத்தை பின்பற்றியபோது உரோமை ஆட்சியாளர்களுக்குப் பயத்தைக் கொடுத்தது. எனவே கிறிஸ்தவத்தை முடக்குகின்ற முயச்சியில் இறங்கியதால் வேத கலாபனை உருவானது. கிறிஸ்தவர்களை முழுமையாகக் கண்டித்த அரசர்களில் ஒருவன் நீரோ. இவன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதற்காக பல கொடுமையான வழிகளை கையாண்டதாக வரலாறு தெரிவிக்கின்றது. கிறிஸ்தவர்களின் மீது காட்டு மிருகங்களின் தோல்களைப் போட்டு அவர்களை வேட்டை நாய்களுக்கு முன்பு விடுவார்களாம். வேட்டை நாய்களோ மிருகங்கள் வருகின்றன என எண்ணி இவர்களைச் சாகடிக்குமாம். அத்துடன் கிறிஸ்தவர்களைச் சிலுவையில் அறைகின்ற பழக்கமும் இருந்திருக்கின்றது. உயிரோடு இவர்கள் எரிக்கப்பட்டிருக்கின்றார்கள். கை கால்கள் வெட்டப்பட்டு கொடூரமாகச் சாகடிக்கப்பட்டுள்ளனர். மின் கம்பங்களில் கட்டப்பட்டு தீப்பந்தமாய் எரிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இவர்கள் தங்கள் சொந்தக் குடும்பத்தாலும் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் எதிர்ப்புக்களையும் இவர்கள் சந்திக்க நேரிட்டுள்ளது. இவ்வாறு மறைசாட்சிகளாக மரித்தவர்கள் அனுபவித்த துன்பங்கள் பல பல இவ்வாறு பல துன்பங்களையும், வேதனைகளையும் இறை அன்பின் காரணமாக இவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். பலவேறுபட்ட துன்பங்கள் மூலம்தான் நாம் இரட்சிக்கப்படுவோம் எனத் திருத்தூதர் பணியில் நாம் பார்க்கின்றோம். உண்மையில் நாம் கடவுளுக்கு எம்மை விதையாகக் கொடுப்பதன் மூலம் நாம் அவரிடம் பல அருங்கொடைகளைப் பெற்றுக் கொள்ளுகின்றோம். இதைத்தான் இயேசு எமக்கு வெளிப்படுத்தியிருக்கின்றார். சாகத் தயாராக இருப்பவர்தான் பல வருட வாழ்வை பெற முடியும் யோவான் நற்செய்தியில் கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலைக் கொடுக்கும்.

➡ 14

## மன்னார் மறைமாவட்டம்

### திருவழிபாட்டு நாட்காட்டி - 2019

### ஒக்ரோபர்

01. குழந்தையேசு ஆலயம் - பறங்கிகமம் (இலுப்பக்கடவை), பாவிலுப்பட்டான் கட்டிகுடியிருப்பு
 - ஆரோக்கிய அன்னை - அடம்பன் வைத்தியசாலை
02. புனித செபமாலை அன்னை திருவிழா - பெரியநீலாசனை
05. பௌஸ்ரினா திருவிழா - பம்பைமடு
06. புனித சதாசகாய அன்னை திருவிழா - பாவற்குளம்
07. புனித செபமாலை அன்னைத்திருவிழா - தலைமன்னார், மனல்மோட்டை
10. குழந்தையேசுவின் சின்னத்திரேசா - முள்ளிக்குளம்
12. மடுமாதா சிறிய குருமட விழா -
13. பற்றிமா அன்னை திருவிழா - பற்றிமாநகர் (ஒமந்தை)
20. மன்னார் ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஆயராக அபிசேகம் செய்யப்பட்டது (1992)
 - உலக மறைபரப்பு தினம்
21. வேளாங்கண்ணி - தலைமன்னார் (பியர் - பீச்)
27. புனித அமைதியின் அரசி - முறியாகுளம்
 - புனித யூதாததேயு - மெனிக்பாம், இரட்டைகுளம், மடுக்குளம்
31. அடைக்கல அன்னை திருவிழா - தட்டாங்குளம்.

■ வியாழக்கிழமைகளில் மாலை 4 மணி தொடக்கம் 7 மணி வரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்

## மன்னாரில் மூத்த குருக்களுக்கான இல்லம் அமைக்க ஏற்பாடு

எம் மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற எம் மூத்த குருக்களுக்கான இல்லம் அமைக்கப்பட்டு வருகின்றது. இவ் இல்லத்திற்கான பெருந்தொகையான பண உதவியை சுவிஸ் ஆன்மீகப் பணியக இறைசமூகம் அன்பளிப்பு செய்துள்ளது. முதல்கட்ட உதவிகளை தாராள உள்ளத்தோடு வழங்கிய சுவிஸ் ஆன்மீகப் பணியகத்திற்கும், இயக்குனர் தந்தைக்கும் மறைமாவட்டம் நன்றி கூறுவதோடு இவ் இல்லம் அமைக்க உங்கள் தாராள உதவியை மறைமாவட்டம் எதிர்பார்க்கின்றது. உதவ விரும்பும் உள்ளங்கள் ஆயர் இல்லத்தோடு தொடர்பு கொள்ளவும். ●

**"நீங்கள் கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள் என்பதால் உங்களுக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவர் கைம்மாறு பெறாமல் போகார்"**

## அருட்சகோதரி மரிய கிளாறா இறைபதம்

வங்காலையைச் சேர்ந்த திருக்குடும்பக் கன்னியர்சபை அருட்சகோதரி மரிய கிளாறா அவர்கள் கடந்த 22.10.2019 அன்று இறைபதம் அடைந்தார்.



இவருடைய பிரிவால் துயருறும் உறவினர்கள், சக துறவிகள் அனைவருக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆன்மா இறைவனில் நித்தியவாழ்வுபெற செபிக்கின்றோம். ●

### உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மடுமாதா சிறிய குருமடத் திருவிழா





மன்னார் மறைமாவட்டத்தின் இதயம் என அழைக்கப்படும் மடுமாதா சிறியகுருமடத் திருவிழா கடந்த 12.10.2019. சனிக்கிழமை அன்று காலை 9:30 மணிக்குத் திருப்பலியுடன் ஆரம்பமானது. திருவிழாத் திருப்பலியை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. அன்ரனி விக்ரர் சோசை அடிகளார் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். திருப்பலியில் குருமடத்தின் முன்னைநாள் அதிபர்கள், பழைய மாணவர்கள், குருமட மாணவர்களின் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரும் இணைந்து கொண்டனர். ➡ 15



# மன்னார் மறைமாவட்ட இளைஞர்களுக்கான ஒன்றுகூடல்





மன்னார் மறைமாவட்ட இளைஞர்களுக்கான ஒன்றுகூடல் கடந்த 12.10.2019 அன்று குடும்பநலப்பணியகத்தில் நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி. கிறிஸ்துநாயகம் அடிகளாரின் வழிகாட்டலின் தலைமையில் ''இளைஞர்களின் சவால்களும் தலைமைத்துவமும்'' என்னும் கருப்பொருளில் 150இற்கும் மேற்பட்ட மறைமாவட்ட இளையோர் பங்கேற்புடன் நடைபெற்றது. இக் கருத்தமர்வின் வளவாளராக சென்னை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி அருட்பணி. குழந்தைசாமி அடிகளார் கலந்துகொண்டார். இவ் ஒன்றுகூடலின் நிறைவில் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யும் நிகழ்வு நடைபெற்றது. நிர்வாகசபைத் தலைவராக ஆட்காட்டிவெளியைச் சேர்ந்த P. மதன், உபதலைவராக சிலாவத்துறையைச் சேர்ந்த A. துலக்ஷன், செயலாளராக வங்காலையைச் சேர்ந்த B. மிதுஷினி, உபசெயலாளராக வவுனியாவைச் சேர்ந்த T. மேரி ஸ்ரலினா, பொருளாளராக கோமரசன்குளத்தைச் சேர்ந்த A. சரண் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் கலைகலாசாரக்குழுவின் மறைக்கோட்டப் பொறுப்பாளர்களாக D. K. அன்ரனிராஜ் வாஸ் மன்னார் மறைக்கோட்டம், J. ரஜேந்தினி மடு மறைக்கோட்டம், L. டிலான் முருங்கன் மறைக்கோட்டம், G. ஜெனின்ஷன் வவுனியா மறைக்கோட்டம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் விளையாட்டுத்துறைக்கான மறைக்கோட்டப் பொறுப்பாளர்களாக K. பிறைற்றன் மன்னார் மறைக்கோட்டம், E. ஹென்றி மடு மறைக்கோட்டம், M. கெவின் அன்ஸ்கர் முருங்கன் மறைக்கோட்டம், R. தனுசன் வவுனியா மறைக்கோட்டம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்நிகழ்வை மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. பி. கிறிஸ்துநாயகம் அடிகளார் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார். ●

# தேசிய மட்டத்திலான குறுநாடகப் போட்டிக்கான 3 நாள் வதிவிடப் பயிற்சிப் பாசறையும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஞானோதயத்தில் நடைபெற்றது.





கடந்த 20, 21, 22 ஆகிய தினங்களில் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சும், சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் தேசிய மையமும் இணைந்து மூன்று நாள் வதிவிடப் பயிற்சி பாசறையை மன்னார் ஞானோதயத்தில் மேற்கொண்டது. அன்று இறுதி நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்டர் சோசை அடிகளார் இவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தார்.

இப்பாசறையில் மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய மறைமாவட்டங்களில் இருந்து 35 கலைஞர்கள் பங்குபெற்றினர். அகதிகள் வாழ்க்கை, யுத்தத்தால் கல்வியின் பாதிப்பு, துஸ்பிரயோகம் ஆகிய தலைப்புக்கள் கொடுக்கப்பட்டு சொற்ப நேரத்திற்குள் அரங்கேற்றப்பட்டது. மன்னார் கிறிஸ்தவ மத திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. L. J. பிறின்சிலி அவர்களும், தேசிய திணைக்களத்தில் இருந்து துவிஷா, சுதத், மாதவி ஆகியோரும், வளவாளர்களாக யாழ் திருமறைக்கலா மன்றத்திலிருந்து திரு. மு.கரன்சன், திரு.சதீஸ்குமார் ஆகியோரும் கலந்துகொண்டனர். ●



# மறைமாவட்ட வழிபாட்டு ஆணைக்குழுவினால்

## முருங்கன் மறைக்கோட்டத்தில் பீடப்பணியாளர்களுக்கான பயிற்சிப் பாசறை







முருங்கன் மறைக்கோட்டத்தைச் சேர்ந்த முள்ளிக்குளம், சிலாவத்துறை, முத்தரிப்புத்துறை ஆகிய பங்குகளின் பீடப்பணியாளர்களுக்கான ஒன்றுகூடல் கடந்த 05.10.2019 அன்று சிலாவத்துறை பங்குப்பணிமனையில் சிறப்பாக மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. கிறிஸ்துநாயகம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது. ●

# கட்டைக்காடு புனித செபஸ்ரியார் முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் திறந்துவைக்கப்பட்டது



கட்டைக்காடு புனித செபஸ்ரியார் முதியோர் பகல் பராமரிப்பு நிலையத் திறப்புவிழா 12.10.2019 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்றது. அதிமேதகு ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் நில ஒதுக்கீட்டிலும் வட மாகாணத்தின் சமூகசேவைகள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டிலும் கட்டைக்காடு புனித செபஸ்ரியார் முதியோர் பகல் பராமரிப்பு நிலையக் கட்டிடம் வட மாகாண பிரதம செயலாளர் திரு. அ. பத்திநாதன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டு கட்டைக்காடு புனித செபஸ்ரியார் முதியோர் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது. ●

# முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலய அமுத விழா சிறப்பாக நடைபெற்றது





கடந்த 06.10.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு கிறிஸ்து அரசர் ஆலயத்தின் 80வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமுதவிழா நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. ➡ 15

# மடுறோட் புனித சிந்தாத்திரை அன்னை ஆலயத் திருவிழா





மடுறோட்டில் பயணங்களின் பாதுகாவலியாக இருந்து பாதுகாப்பு அருளும் புனித சிந்தாத்திரை அன்னை ஆலயத் திருவிழாத் திருப்பலி மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. கிறிஸ்துநாயகம் அடிகளார் தலைமையில் பல குருக்கள், துறவிகள் பங்குமக்களின் பங்களிப்போடு வெகு விமரிசையாக நடந்தேறியது. அன்னையானவள் சிந்தாத்திரை அன்னையாக பங்கு மக்களை மட்டுமன்றி அனைவரையும் தனது ஆசீரால் நிறைத்துவருகின்றாள். ●

வத்திக்கான் செய்திகள்

# உலக மறைபரப்புப்பணி நாள்

ஒக்ரோபர் 20ஆம் திகதி சிறப்பிக்கப்பட்ட உலக மறைபரப்புப்பணி நாளன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் தலைமையேற்று நடத்திய திருப்பலியில் மலை ஏறிச்செல்லுதல், அனைவரும் என்ற மூன்று சொற்களை மையப்படுத்தி தன் மறையுரையைப் பகிர்ந்துகொண்டார். மலைகள் இறைவனைச் சந்திக்கும் இடங்கள். மக்களை சந்திக்க இறைவன் மலைகளைப் பயன்படுத்தினார் என்பதை விவிலியத்தில் பல இடங்களில் நாம் காண்கின்றோம் என்று கூறியத் திருத்தந்தை கிறிஸ்துவின் வாழ்வில் பேறுபெற்றோர் அறிவுரைகள் வழங்கியது, தோற்றமாற்றம் பெற்றது, மற்றும் சிலுவையில் அறையப்பட்டது ஆகிய நிகழ்வுகள் மலைகள் மீது நடைபெற்றதைக் காண்கிறோம் என்று எடுத்துரைத்தார்.

மலைகள் நம்மை மேலே உயர்த்தி இறைவனைச் சந்திக்கவும், செபிக்கவும் வழிவகுக்கும் அதே நேரம், நாம் அனைவரும் இந்த உன்னத நிலைக்கு அழைக்கப்பட்டுள்ளோம் என்ற எண்ணத்தையும் உருவாக்குகின்றன என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் மறையுரையில் எடுத்துரைத்தார். நம் மறைபரப்புப்பணியும் மலையில் துவங்குகின்றது என்பதை வலியுறுத்திய திருத்தந்தை நாம் வாழ்வில்



எந்தெந்த மலைச்சிகரங்களை அடைவதற்கு அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை ஆய்வு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

➡ 15

# இறைவார்த்தையைப் பெறுகையில் இதயம் மகிழ்வால் நிரம்புகின்றது



இறைவார்த்தை நம்மை மகிழ்ச்சிப்படுத்துகின்றது இறைவார்த்தையைச் சிந்திப்பது நம்மை மகிழ்வால் நிரப்புகின்றது, இந்த மகிழ்வே நம் வலிமை. நமக்கு மகிழ்வூட்டும் இறைவார்த்தையைச் சிந்திப்பதற்கு நம் இதயங்களைத் திறந்து வைப்போம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருப்பலியில் விசுவாசிகளைக் கேட்டுக்கொண்டார்.

சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் ஒக்ரோபர் 3ஆம் திகதி காலையில் நிறைவேற்றிய திருப்பலியின் முதல் வாசகத்தை (நெகே.8:1-4 .5-6.7-12) மையப்படுத்தி மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறைவார்த்தையை ஒரு காதில் கேட்டு மறுகாதில் விட்டுவிடாமல் அதற்கு கவனமுடன் செவிமடுக்குமாறு அழைப்பு விடுத்தார்.

நெகேமியா நூலிலிருந்து வாசிக்கப்பட்ட இந்த முதல் வாசகம் இஸ்ராயேல் மக்கள் நாடுகடத்தப்பட்ட சூழலிலிருந்து திரும்பிவந்தது மற்றும் எருசலேம் ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்புவது குறித்த சூழலைக் கொண்டுள்ளது. மக்களுக்குத் திருச்சட்டத்தைக் கற்பித்த ஆளுனராகிய நெகேமியா குருவும், திருநூல் வல்லுநருமான எஸ்ரா, லேவியர் ஆகியோர், இந்த நாள் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட்ட நாள், இது ஆண்டவரின் புனித நாள், எனவே வருந்த வேண்டாம் என்று மக்களிடம் கூறினர். இந்தப் பகுதி இறைவார்த்தை இறைமக்களைச் சந்திப்பது பற்றிய கதையாக அமைந்துள்ளது மற்றும் இது மீள்கட்டமைப்பின் முழு வரலாற்றைக் கொண்டுள்ளது என்றுரைத்த திருத்தந்தை இஸ்ராயேல் மக்கள் திருநூலை வாசிக்கக் கேட்டபோது உணர்ச்சி மிகுதியினால் மகிழ்வால் அழுதனர். அங்கே விழா நடந்தது என்று கூறினார்.

### இறைவார்த்தைக்குச் செவிமடுத்தல்

நாம் இறைவார்த்தையைக் கேட்கும்போது நம் இதயத்தில் என்ன நடக்கின்றது? அதைக் கவனமுடன் கேட்கின்றோமா? அது நம் இயத்தைத் தொடுகின்றதா? அதைக் கேட்பதற்கு எப்படி நம் இதயத்தைத் தயார் செய்கின்றோம்? என்ற கேள்விகளால் மனதை ஆய்வு செய்வோம் என மறையுரையில் கூறிய திருத்தந்தை இறைவார்த்தையின்றி ஞாயிறு விழாவைப் புரிந்துகொள்ள முடியாது என்றும் கூறினார்.

நெகேமியா எஸ்ரா மற்றும் லேவியர் கூறிய இறைவார்த்தையை இஸ்ராயேல் மக்கள் புரிந்துகொண்டதால் உண்ணவும், குடிக்கவும் செய்து எஞ்சியுள்ளதை ஏழைகளுக்கு அனுப்பினர், ஏழைகள் எப்போதும் கிறிஸ்தவ விழாவின் பீடச்சிறார் என்றும் உரைத்தார் திருத்தந்தை.

### இறைவார்த்தை நம் வலிமை

இறைவார்த்தை நம்மை மகிழ்ச்சிப்படுத்துகின்றது இறைவார்த்தையைச் சந்திப்பது நம்மை மகிழ்வால் நிரப்புகின்றது இந்த மகிழ்வே நம் வலிமை என்றும் ஆண்டவரின் மகிழ்வே நமது வலிமை என்பதை நம்புவோம் என்றும் கூறியத் திருத்தந்தை இறைவார்த்தையைச் சிந்திப்பதால் கிடைக்கும் மகிழ்வின் விழாவை அஞ்சாமல் கொண்டாட ஆண்டவரின் அருளை மன்றாடுவோம் என மறையுரையை நிறைவு செய்தார். ●

# தீபாவளித் திருவிழாவுக்காக திருப்பீடத்தின் சிறப்புச் செய்தி



ஒளியின் திருவிழா இந்து நண்பர்கள் அனைவரின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் மகிழ்வு, அமைதி, செழிப்பு ஆகியவற்றைக் கொணரவேண்டும். ஒக்ரோபர் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறப்பிக்கப்பட்ட தீபாவளித் திருவிழாவுக்கென திருப்பீடத்தின் பல்சமய உரையாடல் அவை சிறப்புச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

பல்சமய உரையாடல் அவையின் தலைவர், கர்தினால் Miguel Ángel Ayuso Guixot அவர்களும் இந்த அவையின் செயலர் அருட்பணி. Indunil Janakaratne Kankanamalage அவர்களும் இணைந்து அனுப்பியுள்ள இச்செய்தி, 'மத நம்பிக்கையாளர்கள் உடன்பிறந்த நிலையையும் அமைதி நிறைந்த வாழ்வையும் கட்டியெழுப்புவோர்'' என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

➡ 15

# மறைபரப்புப் பணியில் செபத்தின் தேவை



கடவுளின் வார்த்தையை அறிவிப்பதில் ஒரு புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணமும் ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றன. புனித பவுல் திமெத்தேயுவுக்கு எழுதிய இரண்டாவது மடலில் உரைக்கும் இறுதி அறிவுரையை மையமாக வைத்து மூவேளை செப உரையை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ். திருப்பலியின் இரண்டாம் வாசகத்தில் காணப்படும் புனித பவுலின் அறிவுரைகளாகிய, 'கண்டித்து பேசு, கடிந்துகொள், அறிவுரை கூறு, மிகுந்த பொறுமையோடு கற்றுக்கொடு'' என்பதை எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனைத்துத் துறைகளிலும் கவனமாக இருந்து பொறுப்புடன் நற்செய்தி அறிவிக்க புனித பவுல் வலியுறுத்துவது நம் ஒவ்வொருவருக்கும் பொருந்துவதாக உள்ளது எனக் கூறினார்.

கடவுளின் வார்த்தையை அறிவிப்பதில் ஒரு புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணத்துடன் செயல்படுவதையும் திருமுழுக்குப் பெற்ற அனைவரின் ஒத்துழைப்பையும் நாம் கொண்டாடும் மறைபரப்புப்பணி எதிர்பார்க்கின்றது என்பதையும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நூறாண்டுகளுக்கு முன்னர் திருத்தந்தை 15ஆம் பெனடிக்ட் அவர்கள் மறைபரப்புப்பணியின் கடமையை வலியுறுத்தி வெளியிட்ட செய்தி இன்றும் ஏற்புடையதாக இருக்கின்றது என்றார்.

➡ 14

உலகத் திருச்சபைச் செய்திகள்

# சுவீஸ் ஆன்மீகப் பணியகத்தின் புனித அன்னை வேளாங்கண்ணி திருவிழா



சுவிஸ்லாந்து நாட்டின் லவுசான் மாநில தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் வருடாந்தத் திருவிழாவாகிய புனித அன்னை வேளாங்கண்ணி (ஆரோக்கிய மாதா) திருவிழாவானது சுவீஸ் ஆன்மிகப் பணியக இயக்குனர் அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளாரின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இத் திருவிழாத் திருப்பலியானது 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 14.30 (2:30) மணிக்கு லவுசான் புனித யோசேப்பு (St.Joseph, Avenue de Morges 66, 1004 Lausanne) என்னும் முகவரியில் அமையப்பெற்றுள்ள ஆலயத்தில் இடம்பெற்றது.

இத் திருவிழாத் திருப்பலியினை ரோம் நாட்டில் உயர்கல்வி பயிலும் சலேசியன் சபையின் குருவானவர் அருட்பணி. மெல்வின் அடிகளார் தலமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து அன்னையின் திருச்சுருவ பவனி வீதி வழியாக எடுத்துவரப்பட்டு சிறப்பாசீரும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இத் திருவிழா திருப்பலியில் அன்னைதிரேசா அருட்சகோதரிகளும் (sisters of missionaries of charity) ஏனைய சுவிஸ் மாநில இறைமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் இறையாசீரையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. ●

# சுவீஸ் ஓல்ரன் மாநிலத்தில் புனித செபமாலை அன்னையின் திருவிழா





அன்னை விரும்பும் செபமாலை எங்கள் மக்களை மீட்கும் அருள்மாலை அண்டிவரும் அனைவரையும் அரவணைத்து அருள் மழை பொழியும் சுவீஸ் நாட்டின் ஓல்ரன் தமிழ்க் கத்தோலிக்க மாநில இறைமக்களின் பாதுகாவலியாம் புனித செபமாலை அன்னையின் வருடாந்தத் திருவிழாவானது சுவிஸ்சலார்ந்து நாட்டின் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீக இயக்குனர் அருட்பணி. சூசைதாசன் டக்ளஸ் அடிகளாரின் தலமையில் இடம் பெற்றது.

இத் திருவிழாவானது 12.10.2019 சனிக்கிழமை அன்று பிற்பகல் 15:00மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பித்து திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இத் திருவிழாத் திருப்பலியை சுவீஸ் கத்தோலிக்க ஆன்மிக இயக்குனர் அருட்பணி. டக்ளஸ் அடிகளார் மற்றும் ஓல்ரன் வாழ் கத்தோலிக்கப் பணியகத்தினரின் ஒழுங்கமைப்பின் கீழ் மன்னார் மறைமாவட்ட அருட்தந்தை. ஜெகானந்தன் அடிகளார் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்து மறையுரை ஆற்றியதுடன் அருட்பணி. டக்லஸ் அடிகளார் மற்றும் கப்புசியன் அருட்தந்தை பவுல் அடிகளாரும் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்து சிறப்பித்திருந்தார்கள்.

அத்தோடு செபமாலை அன்னையின் திருவிழாத் திருப்பலியை சிறப்பாக நடாத்தி முடித்த ஓல்ரன் மாநில கத்தோலிக்க இறைமக்கள், பாடகர் குழாம், பீடப்பணியாளர்கள், வழிபாட்டு குழுவினர், மற்றும் ஏனைய மாநிலங்களில் இருந்து வந்து திருவிழாவை சிறப்பித்த இறைமக்கள், ஆன்மீகப் பணியக அங்கத்தவர்கள் அனைவருக்கும் பணியக இயக்குனர் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றார்.

அத்தோடு திருவிழாத் திருப்பலியை சிறப்பாக ஒப்புக்கொடுத்து மறையுரையாற்றி இறையாசீர் வழங்கிய மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர் ஜெகானந்தன் அடிகளாருக்கும், கப்புசியன் சபையின் அருட்பணியாளர் பவுல் அடிகளாருக்கும் கத்தோலிக்கப் பணியகம் சார்பாகவும், இறைமக்கள் சார்பாகவும் நன்றிகளை அருட்பணி. டக்ளஸ் அடிகளார் தெரிவித்து நிற்கின்றார். இறுதியில் திருப்பலி முடிவில் அன்னையின் திருச்சுருபப் பவணி வீதி வழியாக எடுத்து வரப்பட்டு இறுதி செபத்துடன் அருட்பணி. பவுல் அடிகளாரால் இறைமக்களுக்கு இறையாசீர் வழங்கப்பட்டு திருவிழாத் திருப்பலி நிறைவடைந்தது. ●

புதுப்பித்தல் ஆண்டு சிறப்புக் கட்டுரைகள்

## நான் உருவாக...

அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி

# வாழ்வுக்கு அர்த்தம் தரும் இலட்சியம்

மனித வாழ்வின் எண்ணங்களும் சிந்தனைகளும்தான் இலட்சியத்தை ஏற்படுத்துகின்றனவா அல்லது இலட்சிய வாழ்வினால்தான் எண்ணங்களும், சிந்தனைகளும் மாற்றம் பெறுகின்றனவா என்ற கேள்வி பொதுவாக எழுகின்றன. வாழ்வின் இலட்சியம் அல்லது குறிக்கோள் எல்லாம் நிகழ்காலத்தை அடிப்படையாகக் கொண்டு எழுவன அல்ல என்பதைப் புரிந்து கொள்வது அவசியமாகின்றது. பெரும்பாலும் இவையனைத்தும் கடந்தகாலங்களின் அனுபவங்களின் அடிப்படையிலும், எதிர்காலங்கள் பற்றிய ஒரு எதிர்பார்ப்புக் கண்ணோட்டங்களின் அடிப்படையிலுமே அமைக்கப்படுகின்றன என்றால் மிகையாகாது. நாம் வாழ்கின்ற இந்நிகழ்கால வாழ்வில் கடந்த காலங்களைப் பற்றி சிந்திப்பதும், அக்கால கட்டங்களில் நாம் அனுபவித்த கசப்பான, இனிப்பான, வேதனையான, விருப்பமான, மறக்க முடியாத, மன்னிக்கமுடியாத உணர்வுகளுக்கும் அனுபவங்களுக்கும், சிந்தனைகளுக்கும் உருவம் கொடுக்க முயற்சிப்பதே இலட்சியமாகும்.

இலட்சிய வாழ்வு என்பது றோசா மலர் நிறைந்த படுக்கை அல்ல மாறாக றோசா முட்கள் நிறைந்த படுக்கை. அது மென்மையான பாதை அல்ல மாறாக இன்னல்கள் நிறைந்த வாழ்க்கை. எனவே இலட்சிப் பிடிப்போடு வாழ்வோருக்கு வாழ்க்கையில் பல இடர்கள் வருவது வழக்கம். வாழ்க்கையில் இலட்சியத்தை மனத்திற் கொண்டு வாழ்ந்தவர்களின் வாழ்க்கைச் சரித்திரங்கள் அவர்களது உள்ள உறுதியையும், சகிப்புத்தன்மையையும், பிறரைப் புரிந்து வாழும் உயர்ந்த மனப்பான்மையையும், எமக்கு காட்டிய வண்ணம் உள்ளன. எனவே எதையும் தாங்கும் இதயத்துடன் வாழ்க்கைப் போராட்டங்களைச் சந்திக்க ஒவ்வொரு மனிதனும் தயாராக வேண்டும்.

ஒரு இலட்சியத்தோடு வாழ்கின்ற மனிதனின் வாழ்க்கையில் ***அன்ரு கார்ணிஜி*** எனும் அறிஞர் கூறும் பண்புகளைக் காண முடியும். எதிர்காலத்தில் நம்பிக்கை, வளைந்து கொடுக்கும் இயல்பு, விரைவாக தீர்மானத்துக்கு வரும் எண்ணம், புன்னகை செய்யும் முகம் என்பவையாகும். பொருத்தமான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசுதல், வெற்றியில் வெறி கொள்ளாமலும் தோல்வியில் சோர்ந்து விழாமலும் வாழுதல், திறன்களை விருத்தி செய்தல், பிறருதிறமைகளைப் பாராட்டுதல் என்பன ஒருவனை பெருமகிழ்ச்சியான வாழ்வுக்கு அழைத்துச் செல்லுமென்பதில் ஐயமல்லை.

### இலட்சியத்தின் அவசியம்

மனித வாழ்வுக்கு இலட்சியம் அவசியம். எங்கு போகின்றோம்? என்ற கேள்வி வாழ்வை ஒழுங்குபடுத்தும். போகிற திசை எதுவெனத் தெரிந்துவிட்டால் அந்த போக்குக்கு ஏற்றபடி வாழ்வும் அமைந்துவிடும். திசை தெரியாதவர்களுக்குத்தான் குழப்பம் அதிகம். எங்கே? எப்படி? ஏன்? என்ற கேள்விகளுக்கு இடமில்லாமல் போகின்ற போதுதான் வாழ்க்கை முரணாகின்றது. 'வெந்ததைத்தின்று விதிவந்தால் சாவு' என்ற தேக்கநிலை உருவாகிவிடுகிறது. வாழ்வின் ஒவ்வொரு அங்குலமும் சோர்வும், விரக்தியும் நிறைந்து விடுகின்றது. திசையற்ற வாழ்வு ஒரு தேங்கிக் கிடக்கிற குட்டை, அது சிதறிக்கிடக்கும். திசையுள்ள வாழ்வு ஓடுகின்ற நதி அங்கு தூய்மை இருக்கும். வாழ்வில் துள்ளலும், மலர்ச்சியும் இருக்கும். மனித வாழ்வு ஓர் இலட்சியப்பாதையில் நகரும்போது அவ்வாழ்வில் ஒரு அர்த்தம் பிறக்கும்.

### இலட்சியத்துடன் பயணிக்கும் வாழ்வு

திசை எதுவோ அந்தத் திசை நோக்கிப் பயணிக்க ஒரு விசை அத்தோடு கூடவரும். அடைய வேண்டிய இடத்தை அடைய சக்தி தானாக வரும். எவ்வளவு பசியோ அவ்வளவிற்கு உண்ணத் தோன்றுவது போல ஒரு இலட்சியத்தின் தன்மையைப் பொறுத்தே வாழ்வில் பயன் கிடைக்கும். மனித வாழ்வு என்பது எட்டுத் திசைகள் நோக்கிக் கட்டப்பட்டிருக்கும் ஒரு மாபெரும் இயக்கம். பின்னே முன்னே, வலம், இடம், உள்ளே, வெளியே, மேலே, கீழே என்கின்ற எட்டுத் திசைகளில் ஒவ்வொரு நொடிப் பொழுதும் நகர்ந்து கொண்டிருப்பதால் மனிதர் ஒரு இயக்கமாக இருக்கின்றார்கள். அவர்களது நகர்வின் தன்மையைப் பொறுத்தே வாழ்வு அமைகின்றது. அவர்களது நகர்வுதான் இலட்சியம். அவர்களுக்குள் இருக்கின்ற இலட்சியம் என்னும் விசை அவர்களை வாழ்வு என்கின்ற திசையை நோக்கி நகர்த்துகின்றது. அதனால் வாழ்வில் பலவற்றை சாதிக்க முடிகின்றது. திசையை விட்டு அதன் விசையைப் பிரிக்க முற்படும்போது அங்கே முரண்பாடு ஏற்பட்டு அழிவு உண்டாகின்றது.

### உணர்வுகளின் செல்வாக்கு

உணர்வுகளின் அடிப்படையிலேயே இலட்சியங்களின் தன்மையும், அதன் தாற்பரியங்களும் மாறுபடுகின்றன. ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பட்ட உணர்வுகள் காணப்படுவதனால் அவன் தன்னளவில் தனிப்பட்ட இலட்சியங்களோடு வாழ்வது கண்கூடு. ஆனால் இது எவ்வளவிற்கு சரியான பாதையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை ஒவ்வொருவரும் கவனித்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஒவ்வொருவருக்கும் உணர்வற்ற நிலை காணப்பட வேண்டும். உணர்வற்ற நிலை எனும்போது விருப்பு வெறுப்பு அற்ற நிலையைக் குறிக்கின்றது. எனவே ஒரு இலட்சியப் போக்கு எந்த வேளையில் எடுக்கப்படுகிறது என்பதனைப் பொறுத்தே அதன் முடிவு பெறப்படும் என்பது வெளிப்படை உண்மை. உணர்ச்சி வசப்பட்டு அல்லது உணர்வுகளின் தூண்டலுக்கு உட்பட்டு வகுக்கப்படும் இலட்சியப்பாதைகள் எவ்வளவு வெற்றியைத் தரும் என்பது வகுத்துக் கூற முடியாததொன்றாகும்.

### தனிமனித, சமூக இலட்சியம்

இலட்சியத்தினை தனிமனித இலட்சியம், சமுதாய இலட்சியம் என பிரித்து இனங்காண முடியும் என்பது பலரது கருத்தாகும். தனி மனித குறிக்கோள்கள் பெரும்பாலும் ஒரு சுயநோக்கோடு அணுகப்படுவது வழக்கம் இருப்பினும் அவை அம்மனிதனை சமூக மனிதனாக மாற்றுகின்றன என்பதே பேருண்மை. ஏனெனில் தனி மனிதர்கள் சேர்ந்துதான் ஒரு சமுதாயம் உருவாகின்றது. அதுபோல தனிமனித இலட்சியங்கள் பல சேர்ந்து சமூக இலட்சியங்களாகின்றன. ஆனால் தனித மனித இலட்சியங்களின் தன்மைகளைப் பொறுத்தே அது சமூகத்தால் அங்கிகரிக்கப்படுகின்றது. தனி மனிதனுக்கு மாறுபட்ட உணர்ச்சிகள் காணப்படுகின்றன. அவ்வாறிருக்க சமூகத்திற்கான ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தினை மாறுபடும் தனிமனித இலட்சியங்களிலிருந்து எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்ற கேள்வி எழுகின்றது. மாறுபட்ட உணர்வுகள் கொண்ட மனிதர்கள் காணப்படாவிடில் அங்கு மோதல் என்பது இல்லாமல் போய்விடும். மோதல் இல்லாவிடில் உண்மை என்பது இல்லாமல் போய்விடும். ஆகவே தனிமனிதனின் மாறுபட்ட உணர்வுகள் இறுதியில் உண்மையின் வடிவத்தை பூர்த்தி செய்யும். அதன் மூலம் சமூகத்திற்கான பொது இலட்சியம் உருவாகும்.

### இன்றைய மனிதனின் இலட்சிய வாழ்வு

இன்றைய மனிதன் அரசியல் பிரச்சினை, சமூகப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, உளவியற் பிரச்சினை போன்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியவனாக உள்ளான். இப்பிரச்சினைகள் ஏற்படுத்தும் தாக்கத்தினால் அவன் தான் எப்படியும் வாழலாம் என்று தன் மனம் போன போக்கில் வாழும் ஒரு குறிக்கோளற்ற வாழ்வைக் காண முடிகிறது.

அதனால் தன் வாழ்விற்கு ஒரு அர்த்தத்தைக் காண முடியாமல் நாளும் பல்வேறு துன்பச் சுமைகளைச் சுமந்தவனாக, வாழ்வே வேண்டாம் என்ற சாவை நோக்கி பயணிக்கும் நடைப்பிணமாக காட்சி தருகின்றான். காரணம் இலட்சியம் இல்லாத வாழ்க்கை முறை. இதன் விளைவு எமது சமுதாயத்தில் கொலையும், கொள்ளையும், இன ஒழிப்பும், தீ வைப்பும், வஞ்சகமும், சூதும், பொருளுழிப்பும் உயிர்ப்பறிப்புமாக பல அநியாயச் செயல்கள் காணப்படுகின்றன. அதனால் தன்னை அறிந்து கொள்ள தயாராக இல்லாத மனிதன், தன்னைப் புரிந்து கொள்ள விரும்பாத மனிதன் தனது வாழ்வுக்கு அர்த்தம் காண முற்படாத மனிதன் தனது இலட்சியப் பயணத்திற்கும் முற்றுப் புள்ளி வைப்பதையே இன்றைய சமுதாயத்தில் காணமுடிகின்றது.

### முடிவாக

வாழ்க்கையில் வளம்பெற ***'இப்பொழுது சிறு விடயங்களை செய் நாளடைவில் பெரிய விடயங்கள் உன்னை நாடி, நிறைவேற்றி வைக்கும்படி கேட்கும்'*** என்ற பாரசீகப் பழமொழிக்கேற்ப சிறிய அளவில் நாம் சிந்தித்தாலும் அதிலே ஒரு குறிக்கோளை இருத்தி அதற்கு செயல் வடிவம் கொடுக்கும் போது, எமது வாழ்விற்கு அர்த்தம் கொடுக்கும் என்னும் உண்மையை அறிந்து, வாழ்வில் ஒரு குறிக்கோளோடு வாழப் பழகிக்கொள்ள வேண்டும். இன்று வளரும் உலகில் வாழும் மனிதன் பல்வேறு முரண்பாடுகளை சந்திக்க வேண்டியவனாக இருந்தாலும், தனது வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்க அவன் வாழும் வரை போராட வேண்டியவனாக உள்ளான் என்பது கண்கூடு. ஒவ்வொரு மனிதனும் தனக்காக மட்டுமல்ல தன்னுடன் பயணிக்கும் சமூகத்திற்காகவும் வாழவேண்டுமென்ற கூட்டு பொறுப்பையும், சமூகக் கடமைகளையும் கொண்டிருப்பதனால் அவன் வாழ்வுக்குரிய வழிகளையும் திட்டமிட்டப் பழகிக்கொள்ள வேண்டும். எனவே நான் நானாக வளர, என்னை நான் இனம் கண்டு என்னில் ஒரு இலட்சிய வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.●

# அமைதி வாழ்வுக்கு அடிப்படை உண்மையும் நீதியும்

– அருட்சகோதரி இ.யோகா SCJM, வவுனியா –

சகல வல்லமை பொருந்திய இறைவனால் படைக்கப்பட்டு அவரால் நித்தியத்திற்கும் அன்பு செய்யப்படுகின்ற ஒவ்வொரு மனிதனும் மகிழ்வாக மாண்புடனும், அமைதியாக சுதந்திரத்துடனும் வாழ ஆசைப்படுவது அவன் இறைவனால் படைக்கப்பட்ட உண்மை இயல்பையே எடுத்துக்காட்டுகின்றது. இந்த அமைதி வாழ்வை வாழ, அனுபவிக்க, அதை ஏனையோருடனும் பகிர்ந்து கொள்ளவேண்டுமானால் அதற்கு அடிப்படையாக இருப்பது உண்மையும் நீதியும் என்றால் அது மிகையாகாது.

உண்மை என்றால் என்ன? உண்மை, அது ஒரு தனித்துவமான இறைவன் தரும் கொடை. இதை யாராலும் அழிக்கவோ அல்லது விலை கொடுத்து வாங்கவோ முடியாது. இது இறைவனால் இலவசமாக வழங்கப்படும் ஒரு உன்னத கொடை. இது இயேசு கிறிஸ்துவினாலேயே அருளப்பட்டது என்பார் நற்செய்தியாளரான புனித யோவான் தனது நற்செய்தியில் முதலாவது அதிகாரத்தில் 17வது வசனத்தில். இந்த உண்மையானது நாம் இயேசுவுக்குள் வாழும் போது ஒரு உன்னத கொடையாக அருளப்படுகிறது. இதனால்தான் பிலாத்துவுக்கு உண்மை என்றால் என்ன என்று இயேசுவிடம் கேட்க நேரிட்டது. இந்த உண்மையானது கடவுள் தரும் கொடையாயினும் இதைத் தேடிப்பெறுவது எமது கடமையாகிறது. யோவான் 8: 31-32 ல் நற்செய்தியாளர் கூறுவார், நாம் இயேசுவுக்குள் இணைந்திருக்கும் போது, அவரது வார்த்தையின்படி வாழும் போது உண்மையைக் கண்டறிய முடியும் எனவும், இந்த உண்மையானது நம்மை விடுதலையாக்கும் அல்லது சுதந்திரமடையச் செய்யும். ஆகவே இந்த உண்மையானது இறைவனுக்குள் நிலைத்திருப்போருக்கு மட்டுமே உரிய சொத்தாக கருதப்படுகின்றது.

'ஜுஸ்ரீசியா' எனும் இலத்தீன் சொல்லிலிருந்து, ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ் எனப்படும் இந்த நீதி அல்லது நியாயம் எனும் சொல் இன்றைய காலத்தில் எம்மவர் மத்தியில் அதிகம் பேசப்படும் ஒரு சொல்லாக காணப்படுகிறது. இச்சொல்லானது 12ம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியிலிருந்து பரவலாக பாவிக்கப்படுகின்ற ஒரு சொல் என்றால் அது மிகையாகாது. திருவிவிலியத்தின்படி நீதி என்பது ஒவ்வொரு மனிதரும் தமக்குரியதை, தேவையானதை, அவசியமானதை பெற்றுக்கொள்ளல். அதாவது, திருத்தந்தை 23ம் யோவான், 'பாச்செம் இன் தேறிஸ்' எனும் தனது சுற்று மடலில் 'மனிதனின் உரிமைகள்' பற்றி குறிப்பிடுகையில் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதருக்கும், தான் விரும்பியபடி, தகுதியான முறையில் அமைத்துக் கொள்ள, அதாவது உண்ண, உடுக்க, உறையுளை அமைத்துக்கொள்ள உரிமையுடையவனாக இருக்கிறான். மேலும், தான் விரும்பிய மதத்தைப் பின்பற்றவும், கல்வி கற்கவும், கலை கலாச்சாரத்தில் மேம்படவும் உரித்துடையவன். இது மட்டுமன்றி மனிதன் தனதாற்றலுக்கேற்ப சிந்திக்கவும், தனது ஆக்கபூர்வ சிந்தனைகளுக்கு செயலுருக் கொடுக்கவும், பேசவும் சுதந்திரமுடையவன். ஆக, ஒவ்வொரு மனிதனுக்குரிய உடல் ரீதியான, உள ரீதியான இதற்கும்பால் சமூக, சமய, அரசியல், பொருளாதாரமெனும் அம்சங்களில், சம உரிமை பெறவும் அவற்றை வழுவின்றி வாழவும் உரிமை அல்லது சந்தர்ப்பம் கிடைக்கப்பெறுவது அவனுக்குரிய நீதி அல்லது நியாயமானது எனலாம்.

இந்த இரு முக்கிய பண்புகளாகிய உண்மை, நீதி என்பன செயல் வடிவம் பெறுவது மனிதனும் இறைவனும், மனிதனும் மனிதனும் சந்திக்கின்ற வேளையே என்றால் அது மிகையாகாது. ஒவ்வொரு மனிதனும் உண்மை இறைவனைத் தேடி, அந்த உண்மைக்குள் தன் வாழ்வை அமைத்துக் கொள்ளாவிடின், அவனால் தனக்கோ, அல்லது தன் அயலவனுக்கோ நீதியானதைச் செய்வது சாத்தியமற்றுப் போகலாம். குறிப்பாக அதிகாரத்திலும் ஆட்சியிலுள்ளோரும் சரி ஏனையவர்களாலும் சரி, நீதி நேர்மையோடு நடக்காவிட்டால், அங்கு மனக் கசப்புகளும், குழப்பங்களும், சச்சரவுகள் பின்னர் கலகங்கள் போராட்டங்கள் என இறுதியாக அவை போராக வெடிக்கும் அபாயம் இருப்பதை எமது அன்றாட வாழ்விலும், எமது சமூக, நாட்டு, உலக வரலாறுகளில் தெளிவாகக் காண்கிறோம். யோவான் 8:31 – 32ன் படி உண்மை விடுதலை தரும். ஒருவரின் உண்மைத்தன்மை அவரது நடவடிக்கைகளை நியாயமானதான நடத்திச் செல்லும். இப்பண்பு தன்னையும், அயலவரையும், இறைவனையும் நேசிக்கவும் மரியாதை செய்யவும், அமைதியான வாழ்வை வாழவும் வழிவகுக்கும். எமது குடும்பங்களில், ஆலயங்களிலும், சமூகத்தில், நாட்டில் ஏன்! உலக தலைவர்களுக்குமே இறைவன் கூறுவது என்ன? இறைவாக்கினர் மீக்கா தனது நூலில் 6ம் அதிகாரத்தில் 8ம் வசனத்தில் இதனைத் தெளிவாகக் கூறுகிறார் : "ஓ மானிடா! நல்லது எது என அவர் உனக்கு காட்டியிருக்கிறாரே! நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும் உன் கடவுளுக்கு முன்பாக தாழ்ச்சியாடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கிறார்?" ஒவ்வொரு மனிதனும் நேர்மையுடனும், இரக்கத்தோடும், தாழ்ச்சியுடனும் வாழ்வதை இறைவன் விரும்புவது ஏனெனில், அதுவே உண்மை, நீதி எனும் பண்புகளில் வளர்ந்து, அமைதி வாழ்வை வாழ வழி வகுப்பதாகும் என்பதால்.

ஆகவே, ஒவ்வொரு மனிதரும் ஏதோ ஒரு விதத்தில் தலைவர்களாக செயற்பட அழைக்கப்பட்டிருப்பதால், 2ம் வத்திகான் சங்க ஏட்டில், 'திருச்சபை' எனும் கொள்கைத்திரட்டில் எண் 7ல் குறிப்பிடப்படுவது போல், நாம் அனைவரும் எமது தாலந்துகளை, திறமைகளை, ஒருவரொருவருக்கு பணி செய்வதற்காக பயன்படுத்த வேண்டும். இதன் மூலம், எமக்கு உண்மை அன்பும், பகிரும் நல் மனமும் இருக்கும் போது போட்டி பூசல்களினால் உருவாக்கப்பட்ட, சுயநலத்திற்காகவும், அற்கதனமான பதவி, பண ஆசைகளினாலும் எம் ஆன்மாவை சேதம் செய்யாமல், சகலருக்கும் சமமான, நீதி நியாயம் கிடைக்க உழைப்பதினால் அமைதியை வீட்டிலும், நாட்டிலும் இந்த உலகிலுமே நிலை நாட்டலாம். புனித பவுல் கலாத்தியருக்கு 3:28ல் குறிப்பிடுவதுபோல் நாம் அனைவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றே. ஆகையால், உண்மையும் நீதியும் நிலைக்கவும், மனிதன் மனிதனுடனும், மனிதன் இறைவனுடனும் நிம்மதியான வாழ்வை, சமாதானமான வாழ்வை வாழ உண்மையுள்ளவனாக, நியாயத்தை நிலைநாட்டுபவனாக வாழ வேண்டியவனாகிறான்.

➡ 14

மன்னார் மறைசாட்சிகள் - சிறப்புக்கட்டுரை

# மன்னார் மறைசாட்சிகள்

## மானிடவியல் கண்ணோட்டத்தில் சமூகவியல் வரலாற்று ஆய்வு

– அருட்பணி. ம.க. அருள்பிரகாசம் –

தொடர் – 4

### அத்தியாயம் : இரண்டு மன்னார் வேதசாட்சிகள்.

மன்னார்த்தீவிலே சைவ தமிழ் மக்கள் கத்தோலிக்க சமயத்தைத் தழுவி அந்த சத்திய வேதத்திற்காக தம்மையே அர்ப்பணித்த உண்மை வரலாறு இன்றும் எல்லோராலும் பேசப்பட்டு வருகின்றது. உள்நாட்டு மேலைத்தேச வாலாற்று அறிஞர்கள் இச்சரித்திர நிகழ்வைத் தமது வரலாற்று ஆய்வு நூல்களில் பொறித்து வைத்துள்ளனர். இது மறைக்கவோ மறுக்கவோ முடியாத சரித்திர நிகழ்வாகும்.

**2.1 போர்த்துக்கேயர் வந்த போது இலங்கையின் அரசியல் நிலை**

1505ஆம் ஆண்டு சித்திரை மாதம் டொன் லோறன்சோ டி அல்மேடாவின் தலைமையில் வந்த கப்பல் புயலினால் அலைக்களிக்கப்பட்டு இலங்கையை வந்தடைந்தது. அதேயாண்டில் வியாபாரம் செய்ய அவர்களுக்கு அனுமதி கிடைத்தது. இக்காலத்தில் மூன்று சகோதரர்களான புவனேகபாகு, றயிகமபண்டார, மாயாதுண்ண ஆகியோர் தமது மாமனைக் கொலை செய்து கோட்டை அரசைத் தமக்குள் பங்கிட்டுக்கொண்டனர். அப்போது திருகோணமலையும், மட்டக்களப்பும் ஒரு தமிழரசனால் ஆட்சி செய்யப்பட்டது. யாழ்ப்பாண இராட்சியம் சங்கிலி என்று அறியப்பட்ட 7ஆம் செகராசசேகரன் என்னும் தமிழரசரால் ஆளப்பட்டு வந்தது. இந்த யாழ்ப்பாண இராச்சியமானது மன்னார்த்தீவு, மாதோட்டத்தின் நெடுந்தீவு, ஏனைய அயல் தீவுகளையும் உள்ளடக்கியதாக இருந்தது. (Schurharmer: 1977: 372) யாழ்ப்பாண இராச்சியத்தின் சிங்கை அரச பரம்பரையினரும், முதலிமார்களும், குருகுலத்தவர்களும் அரசியலில் செல்வாக்குடையவர்களாக இருந்தனர். (Bastiampillai : Magazine : 58). போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையின் அரசியல் நிலை இவ்வாறு இருந்தது.

**2.2.1. மன்னார் தூதுக் குழுவினரும் புனித சவேரியாரும்.**

புனித பிரான்சீஸ் சவேரியார் 1544 ஆம் ஆண்டு ஆவணி மாதம் இந்தியாவில் கிறிஸ்தவ மறையைப் போதித்துக் கொண்டிருந்த போது மன்னார்த்தீவிலிருந்த மக்கள் தூதுக்குழுவினரை அவரிடம் அனுப்பி தமக்கு வந்து போதித்து ஞானஸ்நானம் தரும்படி அழைப்புவிடுத்தனர். புனித பிரான்சீஸ் சவேரியார் தூத்துக்குடியில் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்த படியினால் **மான்சில்காஸ்** என்னும் இயேசு சபைக் குருவை மன்னார்த்தீவுக்கு அனுப்ப முயற்சித்தார். இம்முயற்சி கைக்கூடாமற்ப் போகவே தமக்குப் பதிலாக பணிபுரிய நியமித்திருந்த பிரான்சீஸ் சவேரியார் என்ற தமது நாமத்தைக் கொண்டிருந்த திருத்தொண்டரை மன்னார்த்தீவுக்கு அனுப்பினார். Schurharmer: 1977: 460)

**2.3 திருத்தொண்டரின் வருகையும், மன்னார் மக்களின் மதமாற்றமும்.**

பிரான்சீஸ் சவேரியார் என்ற திருத்தொண்டர் புனித பிரானசீஸ் சவேரியாரின் அனுமதியுடனும், ஆலோசனையுடனும் மன்னார்த்தீவை அடைந்தார். மன்னார் மக்கள் அவரை மகிழ்ச்சியாக வரவேற்றனர். பின்னர் கத்தோலிக்கத் திருச்சபையின் வழக்கமான முறைப்படி மறைக்கல்வி அவர்களுக்குப் புகட்டினார். அதன் பின்னர் கிட்டத்தட்ட ஆயிரம் பேருக்கு மேல் ஞானஸ்நானம் கொடுத்தார். ஞானஸ்நானம் பெற அவர்களுக்கு இருந்த ஆர்வம் அவர்களின் கத்தோலிக்க விசுவாசத்தின் அடித்தளமாக அமைந்தது. திருத்தொண்டர் மன்னார் மக்களுக்கு கத்தோலிக்க திருச்சபையின் வழமையான முறைப்படி ஞானஸ்நானம் வழங்கினார். கொல்லப்பட்ட 600இற்கும் 700க்கும் இடைப்பட்ட வேதசாட்சிகளைத் தவிர ஏனையோர் பெருநிலப்பரப்பிற்கு தப்பியோடிவிட்டனர்.

**2.4 யாழ்ப்பாண அரசரும் மன்னார் மக்களின் சாட்சிய மரணமும்.**

மன்னார்த்தீவில் வாழ்ந்த சைவ மக்கள் கிறிஸ்தவ சமயம் மாறியதை அறிந்த "யாதவர்" என்ற திருக்கேதீஸ்வர சைவ குருக்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலை நகராக விளங்கிய நல்லூருக்குச் சென்று சங்கிலி மன்னனுக்கு அறிவித்தனர். உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் வெகு விரைவில் ஆட்சியை இழக்க நேரிடும் என்று கூறினர். (Queyroz : traslstion SJ Perara 1930: 243) மன்னார்த்தீவானது 1516 – 1561 வரை யாழ்ப்பாண அரசர் 7ஆம் செகராசசேகரன் என்னும் சங்கிலியின் அதிகாரத்தின் கீழ் இருந்தது. மன்னார் மக்களின் மதமாற்றத்தைக் கேள்விப்பட்டதும் அவர்களைப் பெரும்பாலும் பயப்படுத்துவதற்காக 5000 படைவீரர்களை மன்னார்த்தீவுக்கு அனுப்பினார். ஐயாயிரம் படைவீரர்களில் அரைவாசிப்பேர் யாழ்ப்பாண பட்டனத்திலிருந்தும் அரைவாசிப் பேர் பெருநிலப்பரப்பின் கரையோரத்திலிருந்தும் மன்னார்த்தீவுக்கு கொண்டு செல்லப்பட்டனர். **இவர்களது வருகையைக் கேள்விப்பட்ட கரையார் தமது வள்ளங்களில் தப்பியோடி விட்டனர் (Rayanna :1964: 44) இக்கலாபனையினால் சிதறுண்ட கிறிஸ்தவர்கள் சிலர் மாந்தை என்னும் இடத்திற்கு குடியேறி அங்கு தேவதாயாரின் பேரில் ஒரு தேவாலயத்தைக் கட்டினர். (சமுகஜோதி : 13 -15) சிலர் பட்டிக்காட்டில் அரசனின் போர்வீரர்களால் சுற்றி வளைக்கப்பட்டனர்.**

போர்வீரர்கள் எவ்வித இரக்கமும் காட்டாமல் வயது, பால், ஆண், பெண், குழந்தைகள் என்று பாராமல் "ஞானஸ்நானம் பெற்றேன்" என்று கூறிய அனைவரையும் வாழுக்கு இரையாக்கினார்கள். ஒவ்வொருவரிடமும் "நீ கிறிஸ்தவனா?" என்ற ஒரு கேள்வி மட்டுமே கேட்கப்பட்டது. "ஆம்" என்று கூறிய அனைவரையும் சிரைச்சேதம் செய்தார்கள். சிறுவர் குழந்தைகளுக்காகப் பெற்றோர் பதிலளித்தனர். இராணுவ வீரர்கள் பட்டித்தோட்டத்தில் 600க்கும், 700க்கும் இடைப்பட்ட கிறிஸ்தவர்களைக் கொன்றனர்.

இம் மன்னார் மக்களின் இந்த விசுவாசம் அதிசயிக்கத்தக்கதாகும். இவ்வாறு இம் மன்னார் மக்கள் கத்தோலிக்க விசுவாசத்திற்காகத் தம் உயிரை அர்ப்பணித்தனர். **இவ்வாறு மரித்த மன்னார்க் கிறிஸ்தவர்களைப் புனித பிரான்சீஸ் சவேரியார் "எங்களுடைய காலத்திலும் வேதசாட்சிகளுக்குக் குறைவில்லை"** எனக் கூறியுள்ளார். இக் கிறிஸ்தவர்கள் உண்மையாகவே கத்தோலிக்க விசுவாசத்திற்காகத் தம்மையே கையளித்த வேதசாட்சிகள் என்று உறுதி செய்யலாம்.

**2.4 இலங்கையில் புனித சவேரியார்**

புனித பிரான்சீஸ் சவேரியார் 1544, 1545, 1551, 1552 ஆகிய ஆண்டுகளில் இலங்கைக்கு வந்து சென்றுள்ளார் புனித பிரான்சீஸ் சவேரியாராகிய இயேசு சபைக் குருவானவர் 1545 ஆம் ஆண்டு மன்னார்த்தீவுக்கு வந்தார் என அறியக் கூடியதாக உள்ளது. இவர் மன்னார்த்தீவை அடைந்ததும் வேதசாட்சிகளின் நிலத்தை முத்தமிட்டார். (Gnanapragasar: 1924: 29) இவர் மன்னார் வந்தபோது மன்னார் மக்கள் கொள்ளை நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர். நாளாந்தம் 200-300 பேர் கொள்ளை நோயினால் இறந்து கொண்டிருந்தார்கள்.

அவர் தமது செபத்தினால் கொள்ளை நோயை முடிவுக்குக் கொண்டுவந்தார். (Martin: 1923 : 148-149) புனித சவேரியார் முதலில் கொழும்புக்கு வந்து பின்னர் மன்னார்த்தீவுக்குச் சென்று அங்கிருந்து நெடுந்தீவுக்குச் சென்றார். நெடுந்தீவிலிருந்து காரைதீவுக்குப் போய் அங்கிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குச் சென்றார். (Schurharmer: 1977: 547-548) ●

(அடுத்த இதழில் தொடரும்)

---

சகல புனிதர்கள் திருநாள் - கார்த்திகை 01

# சகல புனிதர்கள் திருநாள்

– அருட்சகோதரி. இ.யோகா scjm வவுனியா –

சகல புனிதர்கள் திருநாள் நெடுங்காலமாக திருச்சபையில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. சிறப்பாக கீழைத்தேசத்தில் அகில உலக வேதசாட்சிகள் தினமாக நினைவு கூறப்படுகின்றது. கி.பி 609இல் திருத்தந்தை *பொனிபேஸ் vi*, உரோமை மாநகரில் அன்னிய தெய்வங்களை வழிபட்ட *பெந்தயோன்* எனும் ஆலயத்தை கிறிஸ்தவ ஆலயமாக, தேவதாய்க்கும் சகல வேதசாட்சிகளுக்குமாக பிரகடனப்படுத்தினார். இவ்வாறு செய்ததினால், அன்னிய தேவதைகளை வைத்து வழிபட்ட இடமானது, சகல புனிதர்களின் இடமாகத் திகழ வேண்டும் என்று பாப்பரசர் விரும்பினார் என புனித பேட் கூறுவார்.

ஆங்கிலேயரான *அல்குயின்*, சகல புனிதர்கள் தினம் கார்த்திகை 1இல் கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமானது என்றார். இந்நாள் நினைவு கூறப்படும் விதத்தில் வளர்ச்சியைக் கண்டது வட இங்கிலாந்தில். இந்த நாள் தனிப்பட்ட புனிதர்களை மட்டுமல்லாது இறைவனுக்காகவும், இறைவார்த்தையின்படியும் வாழ்ந்து இறையாசீரைப் பெற்றுக்கொண்டு இறைபதம் அடைந்த அனைத்து நல்லான்மாக்களையும் நினைவு கூறும் நன்னாளாகத் திகழ்கின்றது. இறைவனை நிறைவாக சுவைத்து இறை பிரசன்னத்தில், இறைபுகழ் இசைத்து நித்திய வாழ்வு பெற்ற இவர்களின் இத்திருநாள், மறுநாள் நினைவுகூறப்படுகின்ற சகல ஆன்மாக்கள் திருநாளோடு முழுமையடைகின்றது. இவர்களும் தம் வாழ்நாளில் நல்லதோர் ஓட்டத்தை ஓடி, இறைவனின் நித்திய அன்பின் அழைப்பிற்காக பொறுமையாக உத்தரிப்பு ஸ்தலத்தில் காத்திருப்பவர்கள், ஆகையால்தான் "எனவே, திரண்டு வரும் மேகம் போல் இத்தனை சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து நிற்க எந்தச் சுமையையும், நம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் எந்தப் பாவத்தையும் உதறித்தள்ளிவிட்டு, நமக்கு குறிப்பிட்டுள்ள பந்தையத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக. நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களை பதிய வைப்போம்" *(எபிரே. 12- 1-2)* எனப்படுகின்றது.

"எமது பாதுகாவலர்களாக இருக்கும்படி சகல வேதசாட்சிகளையும் புனிதர்களையும் அழைப்போம்" என *புனித* ஜோன் கிறிஸோஸ்தம் கூறுகின்றார். மேலும் "இவர்களது திருநாளில் மட்டுமன்றி ஏனைய நேரங்களிலும் இவர்களை நம் உதவிக்கு அழைக்கலாம் ஏனென்றால், இவர்கள் உயிருடன் இருந்த போது கூறியதை விட, தம் மரணத்திலே கூறவல்லவர்கள், ஏனென்றால் கிறிஸ்துவின் காயங்களை அவர்கள் தற்போது தரித்திருக்கிறார்கள்". சகல புனிதர்களை முதல் நாளும், சகல ஆன்மாக்களை இரண்டாவதாக நாளுமாக நினைவு கூறப்படுகின்ற இந்த கார்த்திகை மாதமானது, சகல எம் உறவுகளின் ஆன்மாக்களுக்காக பிரார்த்திக்க திருச்சபைத் தாயானவள் எம்மை அழைத்து நிற்கின்ற அதே வேளை, கொடிய யுத்த அரக்கனின் கரங்களில் அகப்பட்டு, அகோரமாக உயிர் பறிக்கப்பட்ட எம் ஒவ்வொரு சகோதர சகோதரிகளின் ஆன்ம சாந்திக்காகவும் மன்றாட அழைக்கப்படுகின்றோம்.

இரத்தம் சிந்திய அத்தனை ஆன்மாக்களும் இறைவனின் திருமுகத்தை கண்டு களிப்புற்றிருக்க வேண்டுவோம். புனித அலோஸியஸ் கொன்சாக்கா கூறுவது போல் "விண்ணகத்தில் நாம் அனைவரும் மீண்டும் சந்தித்து மகிழ்வுடன் அனைவரும் ஒன்றாக, நம் மீட்பருடன் அவர் புகழ் பாடி, அவரது இரக்கத்தில் என்றென்றும் நிலைத்திருப்போம்" என்ற நம்பிக்கையில் வாழ்வோம், எம் வாழ்வை இறையாட்சிக்கேற்றவாறு வாழ முயற்சிப்போம்.

புனிதர்கள் யாவரும் பிறக்கும் போது சாதாரணமாக நம்மைப் போலவேதான் பிறக்கின்றார்கள். பின்னர் தம் வாழ்நாளில் ஒவ்வொரு நிமிடமும் இறைவனின் அன்பின் அழைத்தலுக்கு முழு மனதுடன் ஆம் என்று பதிலளித்து தினமும் தம் செப தப வாழ்வாலும் ஒறுத்தல் முயற்சியினாலும் இறைவனுக்கு ஏற்புடையவர்களாகின்றனர். இவர்கள் தம் வாழ்நாளிலும் இறப்பிலும் இறையன்பிற்கு சாட்சியம் பகர்ந்தவர்களானதினாலேதான், இன்று இவர்களை புனிதர்கள் என்று திருச்சபை அழைத்துச் சிறப்பிக்கின்றது.

ஆகையால், எம் திருச்சபையை காலத்திற்கு காலம், துய்மைப்படுத்த இறைவன் எமக்களித்த புனிதர்களுக்கும் அவர்களை புனிதத்துவத்தில் வளர அருள்பொழிந்த இறைதந்தைக்கும் புகழ் கூறி, இறந்த சகல ஆன்மாக்கள் இறை சாந்தி பெற வேண்டுவது பூவுலகில் வாழும் விசுவாசிகளாகிய நம் ஒவ்வொருவருடைய கடமையாகின்றது என்பதால் அவர்கள் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவதோடு, இறையன்பிற்கும் அவர்தம் அழைப்பிற்கும் பதில் கொடுப்பவர்களாக வாழ்வோராக மாற முயலுவோம்.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar

பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'

வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

---

இம்மாதப் புனிதர்

# திருத்தந்தை

## புனித இரண்டாம் அருள் சின்னப்பர்

திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பர் கத்தோலிக்க திருஅவையின் 264ஆவது திருத்தந்தை ஆவார். இவர் 26 ஆண்டுகள், 168 நாட்கள் கத்தோலிக்க திருஅவையின் திருத்தந்தையாக பணியாற்றினார். இதுவரை பணியாற்றிய திருத்தந்தையர்களில் போலந்து நாட்டைச் சேர்ந்த முதலாவது திருத்தந்தை இவராவார். இவர் 1920ஆம் ஆண்டு வைகாசி 18ஆம் திகதி போலந்தின் வாதோவிச்சில் பிறந்த கரோல் யோசேப் வொய்த்திவா என்ற பெயர் கொண்ட திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல், 1929இல் எமிலியா என்ற தமது தாயை இழந்தார். தமது ஒரே சகோதரரான எட்மண்ட் என்பவரை 1932இல் இழந்தார். இராணுவ அதிகாரியான தனது தந்தையை 1941இல் இழந்தார். ஜேர்மனிய நாஸ்திகர்களின் ஆக்கிரமிப்பால் போலந்தில் பல்கலைக்கழகம் 1939இல் முடப்பட்டது. எனவே ஜேர்மனிக்கு நாடு கடத்தப்படுவதைத் தவிர்க்கும் நோக்கத்திலும் தனது பிழைப்புக்காகவும் முதலில் சுண்ணாம்புக்கல் அகழ்விடத்திலும் பின்னர் சொல்வாய் நகரில் வேதித் தொழிற்சாலையிலும் வேலை செய்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் கல்விப்படிப்பை மீண்டும் தொடர்ந்த இவர் 1946இல் குருவானார். 1958ஆம் ஆண்டு புரட்டாதி 28இல் ஆயராக திருப்பொழிவு செய்யப்பட்டார்.

1964இல் கிராக்கோ பேராயராகவும் 1967ஆம் ஆண்டு ஆனி 26இல் கர்தினாலாகவும் உயர்த்தப்பட்டார். 1978ஆம் ஆண்டு ஐப்பசி 16ஆம் நாள் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் 1520க்குப் பின்னர் இத்தாலியர் அல்லாத ஒருவர் திருத்தந்தையானது இதுவே முதற்தடவை. இவர் 1340 பேருக்கு அருளாளர் பட்டமும், 483பேருக்குப் புனிதர் பட்டமும் அளித்துள்ளார். இவர் தமது 26 ஆண்டு பணிக்காலத்தில் 129 நாடுகளுக்கு பயணம் செய்துள்ளார். திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் அவர்கள் 2005 சித்திரை 02ஆம் நாள் இறையடி சேர்ந்தார். இவரைத் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற் 2009 மார்கழி 19ஆம் நாள் வணக்கத்துக்குரியவர் என்று அறிவித்தார். மேலும் 2011 வைகாசி 01ஆம் நாளன்று இவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார்.

போலந்தில் 45 அடி உயரமும் 5000 கிலோகிராம் எடையும் கொண்ட இவருடைய மிக உயரமான சிலை 2013 சித்திரை மாதம் திறந்து வைக்கப்பட்டது. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் 2014ஆம் ஆண்டு சித்திரை மாதம் 27ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களினால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் அவர்கள் உலக இளையோர் தினத்தின் பாதுகாவலராக விளங்குகின்றார். ●

விசேட மறைபரப்பு மாதம் - ஒக்ரோபர்

# ‘கடவுளே! உம் பெயர் வாழ்த்தப் பெறுக!

அருட்பணி. அ. கிறிஸ்ரி றூபன் பெர்னான்டோ,
உரோமாபுரி

“அவர்கள் ஆண்டவரின் பெயரைப் போற்றுவார்களாக அவரது பெயர் மட்டுமே உயர்ந்தது அவரது மாட்சி விண்ணையும், மண்ணையும் கடந்தது” (திபா 148:13).

## முகவுரை:

விவிலியத்தில் பெரும்பாலான நேரங்களில், ஒருவரின் பெயர் என்பது, அவரின் ஆழமான உண்மைத்தன்மையை உருவகப்படுத்துவதாகவும், எடுத்துக்காட்டுவதாகவும் உள்ளது. பழைய ஏற்பாட்டில் ஒருவரை பெயர்சொல்லி அழைக்கும் போது, அது அந்த நபரை இனம் கண்டு கொள்வதாக மட்டும் இருக்கவில்லை. மாறாக அது அந்த நபரின் அடையாளமுமாய் இருக்கின்றது. பல தடவைகள் ஒரு சிறப்பு பொருளும் அந்தப் பெயருடன் இணைக்கப்பட்டிருப்பதையும் காணலாம். பெயர்கள் வெறுமனே அடையாளம் காணும் நோக்கத்திற்கிடையில், அவை சிறப்பாக ஒரு விளக்க நோக்கத்தைக் கொண்டிருந்தன (எ.கா.‘நாபால்’ என்ற பெயரின் பொருள் ‘முட்டாள்’ தாவீதுக்கு அபிகாயில் ‘நாபல்’ என்ற மனிதரை குறித்து விளக்கம் கொடுக்கிறபோது, “என் தலைவரே, அந்தத் தீய குணமுடைய மனிதராகிய நாபாலைப் பொருட்படுத்த வேண்டாம் ஏனெனில் அவர் தம் பெயருக்கேற்ப ஒரு மூடர். நாபால் என்பது அவருடைய பெயர் அதன்படி மூடத்தனமும் அவருக்குண்டு. ஏனென்றால், அவருடைய பெயரைப் போலவே அவரும் இருக்கின்றார்”. 1சா 25:25).

திருவிவிலியத்திலே கடவுளை இஸ்ரயேல் மக்கள் பல பெயர்கள் கொண்டு அழைத்ததை பல இடங்களில் காண்கின்றோம். கடவுள் தம்முடைய பெயரால் தம் உடனிருப்பை அவர்களுக்கு வெளிப்படுத்துகின்றார். அவர் வெளிப்படுத்தும் இந்தப் பெயர்களைப் படிக்கும்போது கடவுள் உண்மையில் யார் என்பதை நாமும் நன்கு புரிந்துகொள்கின்றோம். அத்தோடு அன்று இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரைப் பெயர் சொல்லி அழைத்து, அவர் தங்களுக்கு அண்மையில் இருக்கின்றார் என்ற அவர்களது அந்த நாளாந்த வாழ்க்கை அனுபவம் நமதாகவும் மாறும். கடவுளின் பெயர்களுக்குப் பின்னால் உள்ள அர்த்தங்கள் அவற்றைத் தாங்கிய அவரின் மைய ஆளுமையையும், தன்மையையும் வெளிப்படுத்துகின்றன. கடவுளை அதிகம் தேடுகின்றவர்களுக்கு அவர் பெயர் முக்கியமானதே. கடவுளின் பெயர் தனித்துவமாக அவரை அடையாளப்படுத்துகின்றது. கடவுளின் தனித்துவமான பெயருடன் அவர் பிள்ளைகளின் பாதுகாப்பும், மீட்பும் இணைக்கப்பட்டுள்ளன என்பதை கடவுளின் மக்கள் திருவிவிலியத்திலே கடந்த காலத்தில் புரிந்துகொண்டதுபோல நாமும் அதை நமதாக்கிக் கொள்ளலாம்.

## கடவுளின் பெயரின் மேன்மை:

கடவுளின் பெயர் அவரை நாம் நம் மனக்கண்முன் உருவாக்கும் திறனை வெளிப்படுத்துகின்றது. மேலும் அவரது படைப்புக்கள் அவரது நோக்கத்தை அடைய தேவையானதாக மாற்றுகின்றது. கடவுளுக்கு மனிதர்கள் கொடுத்துள்ள பெயர்கள் அவரின் ‘கடவுள் நிலை’, ‘வல்லமை’ அல்லது ‘சக்தியை’ விவரிக்கக்கூடும் என்றாலும், அந்தப் பெயர்தான் கடவுளின் முழு அடையாளமே என்றாகிவிடாது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

கடவுளின் பெயர் நம்மீது அவரின் ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றது. அவரின் பெயரின் அர்த்தம் அவருடைய படைப்புடன் அவர் தொடர்ந்து இணைந்திருப்பதைக் குறிக்கின்றது. அதில் நம்மை உள்ளடக்கியுள்ளது. அவரது பிள்ளைகளாகிய நாம் அவரை அனுபவிக்கமுடியாத, தெளிவற்ற, தொலைதூர தெய்வமாக அல்ல மாறாக ஒரு உண்மையான நம் அன்றாட வாழ்விலே அருகிருக்கும் நபராக அவரை அணுக வேண்டும் என்பதையே கடவுள் விரும்புகின்றார். இஸ்ரயேல் மக்கள் எப்போதுமே “ஆண்டவர் பெயர் சொல்லிக் கூப்பிடும் அளவிற்கு நெருக்கமானவர்” என்ற நம்பிக்கையினை கொண்டிருந்தார்கள். இதுவே அவர்களின் நம்பிக்கையின் உச்சமாகவும் இருந்தது. “உம் பெயர் வாழ்த்தப் பெறுக!” என்று எப்போதெல்லாம் திருப்பாடல் சொல்கின்றதோ அப்போதெல்லாம் நாம் நினைத்துக் கொள்ள வேண்டியது எருசலேம் ஆலயத்தைத்தான். எருசலேம் ஆலயத்தில் யாவே இறைவனின் ‘ஆண்டவர்’ என்னும் பெயர் குடிகொள்வதாக இஸ்ரயேல் மக்கள் நம்பினர். ஆண்டவரின் பெயரிலே ஆண்டவரின் பிரசன்னத்தையே கண்டனர் அவர்கள். இதைத்தான் ஆண்டவரே தன் பெயரின் மட்டிலே அவர்களுக்கு வெளிப்படுத்துவதாய் திருப்பாடலிலே (திபா 91:15) “அவர்கள் என் பெயரை அறிந்துள்ளதால், அவர்களைப் பாதுகாப்பேன்: அவர்கள் என்னை நோக்கி மன்றாடும் போது, அவர்களுக்குப் பதிலளிப்பேன்: அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன்: அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப்படுத்துவேன்’ என்று அடிக்கடி இஸ்ரயேல் மக்கள் செபித்து ஞாபகப்படுத்திக் கொள்கின்றார்கள்.

நம் கத்தோலிக்க சமயத்திலிருந்து பிரிந்துபோன நம்முடைய சகோதர கிறிஸ்தவர்கள் அடிக்கடி தங்கள் பிரசங்கங்களிலே கடவுளைப் பழைய ஏற்பாடு எழுதப்பட்ட மூல மொழியாகிய ‘எபிரேய’ மொழியில் (ஒருசில புத்தகங்கள் அரேபிய மொழியிலும் எழுதப்பட்டுள்ளன), கடவுளை இஸ்ரயேல் மக்கள் அழைத்த பெயர்களால் இவர்களும் அழைத்து செபம் செய்கின்றபோது, நம்மில் பலர் இன்றும் கடவுளைக் குறிக்கும் அந்த பெயர்கள் எல்லாமே நம் கத்தோலிக்க சமயத்திலிருந்து பிரிந்துபோன நம்முடைய சகோதர கிறிஸ்தவர்களின் வேதாகமத்தையே சார்ந்தது என்று நினைப்பதும் உண்டு. அந்த வார்த்தைகளை ஏதோ நமக்கு முரண்பட்டதாகவே காண்கின்றோம். அது தவறான புரிதலாய் அமைந்துள்ளது. ஏனெனில் அந்தப் பெயர்களை நாம் நமது கத்தோலிக்க வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டின் மூலமொழியிலேயே (எபிரேயம்) காண்கின்றோம். ஆனால் நாம் அந்த வார்த்தைகளுக்கு சரியான மற்றும் தெளிவான புரிதலுடன் இன்னும் அதிகம் பழக்கப்படவில்லை.

## திருவிவிலியத்திலே கடவுளின் பெயர்கள்:

பழைய ஏற்பாட்டில் ‘ஆண்டவர்’ அல்லது ‘கடவுள்’ என்பது மட்டும் கடவுளுக்குக் கொடுக்கப்பட்ட பெயரல்ல. பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு நபர்கள் பல்வேறு பெயர்களில் கடவுளை அழைத்தனர். அந்தப் பெயர்கள் யாவை என்றும் அவை சொல்லும் அர்த்தம் என்னவென்றும் நாம் அறிந்துகொள்வது கடவுளை இன்னும் அதிகம் அன்புசெய்வதற்கும் போற்றுவதற்கும் உதவியாக இருக்கும் என்றால் அது மிகையாகாது.

**1. ‘எல்-சதாய்’ - எல்லாம் வல்ல இறைவன் (El-Shaddai - Almighty God)**

இந்தப் பெயர் முதல் ஏற்பாட்டில் 7 முறை வருகின்றது. முதலில் இது பயன்படுத்தப்பட்டது ஆபிரகாமால் தான் (காண். தொநூ 17:1). “எல்” என்றால் எபிரேய மொழியிலே “கடவுள்”. “சதாய்” என்றால் “மலை”. பழங்காலத்தில் மலை என்பது வல்லமை என்று கருதப்பட்டது. மலைக்குக் கீழ் ஓர் ஊர் இருப்பதாகவும் மலையின் வல்லமையால் அது மறைந்து போனது. ஆகையால் மலை நினைத்தால் யாரையும் அழிக்க முடியும் என்பது அவர்களின் கருத்து. “சதாய்” என்பதற்கு “பெண்ணின் மார்பகம்” என்றும் பொருள். அக்கடிய நாட்டுப் பெண் தெய்வத்தின் பெயர் ‘சதாத்’ என்று அந்த பாரம்பரியம் குறிப்பிடுகின்றது. ஒரு தாய் தன் குழந்தையை அன்பு சொரிய மார்போடணைத்து சீராட்டி வளர்ப்பதைப் போலவே கடவுளும் தன் பிள்ளைகளைத் தேற்றி அவர்களின் அனைத்துத் தேவைகளையும் வழங்குவதைக் இது குறிக்கின்றது.

அந்தப் பெயரை ஆபிரகாம் (காண். தொநூ 28:3 35:11 43:14 48:3) ஆண் கடவுளுக்குப் பயன்படுத்தினார் என்பதும் சிலரின் கருத்து. மேலும் இன்னும் அதிகமாக இஸ்ரயேல் மக்கள், கடவுள் மோசேயை சீனாய் மலையின் உச்சியில் சந்தித்து பத்துக்கட்டளைகளை கொடுத்ததினால் கடவுளை எல்லா வல்லமையும் நிறைந்த கடவுளாய் அந்த இடத்திலே அழைக்கத் தொடங்கினார்கள். அதாவது கடவுளின் வல்லமை மேலிட்டதை உணர்ந்தார்கள். இந்த இறை அனுபவத்தினால் கடவுளை ‘எல்-சதாய்’ (எல்லாம் வல்ல இறைவன்) என்றும் அழைக்கத் தொடங்கினர். (காண். விப 6:2-3 எசா 9:6) இந்த ‘சதாய்’ என்ற சொல் ‘எல்’ என்ற கடவுளுக்கான வார்த்தையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது பராமரிப்பையும், ஆசீர்வாதத்தையும் சுதந்திரமாகக் கொடுக்கும் எல்லா வல்லமையும் பொருந்திய கடவுளைக் குறிக்கின்றது.

**2. ‘எல்-எல் யோன்’ - உன்னத கடவுள் (El- El-yone - The Most High)**

“எல்யோன்” என்றால் “உயர்ந்த” அல்லது “உன்னதமான” என்பது எபிரேய மொழியிலே பொருள். முதல் ஏற்பாட்டில் 28 முறையும், இதில் திருப்பாடல்களில் 19 முறையும் ‘எல்-எல்யோன்’ என்று கடவுளைப் பெயர் சொல்லி அழைக்கும் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது (காண். தொநூ 14:18). ‘எல்’ என்ற சொல் ‘கடவுள்’ என்று மொழிபெயர்க்கப்பட்ட மற்றொரு பெயர். மேலும் கடவுளின் குணாதிசயத்தின் பல்வேறு அம்சங்களைக் குறிக்க வேறு சொற்களுடன் இணைந்து பயன்படுத்தப்படுகின்றது. “எல்யோன்” என்று கடவுளை அழைக்கும் இடங்களில் எல்லாம் இஸ்ராயேல் மக்கள் கடவுளின் அளவிட முடியாத மேன்மையினையே பறைசாற்றினார்கள் (காண். தொநூ 14:18, 19, 20, 22 திபா 57: 2 78:35)

**3. ‘அதோனாய்’ - ஆண்டவர், தலைவர் (Adonai - The Lord, The Master)**

“அதோன்” என்றால் “தலைவர்” என்றும் “ஆய்” என்றால் “என்னுடைய” என்றும் எபிரேய மொழியிலே பொருள் கொள்ளலாம். முதல் ஏற்பாட்டில் 434 முறை இந்த சொல் உள்ளது (காண். தொநூ 15:2). விவிலியத்தில் எங்கெல்லாம் “யாவே” என்று எழுதப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் இன்றும் நாம் “அதோனாய்” என்றே வாசிக்கின்றோம். “யாவே” என்ற பெயரை உச்சரித்தால் இறைவனின் மரியாதையைக் குறைப்பதாய் எண்ணி அந்த இடத்தில் ‘அதோனாய்’ என உச்சரிப்பது இஸ்ரயேல் மக்கள் மத்தியிலே இயல்பாய் இருந்தது. இந்த சொல்லின் பயன்பாடு எசேக்கியேலில் மட்டும் 200 முறை நிகழ்கின்றது. மற்றும் தானியேல் 9ஆம் அதிகாரத்தில் 11 முறை தோன்றுகின்றது. முதன் முதலில் “அதோனாய்” என்ற சொல் தொநூ 15:2இல் பயன்படுத்தப்படுகின்றது. “அதோனாய்” என்ற கடவுளைக் குறிக்கும் சொல் பன்மையிலேயே இருக்கின்றது. ‘அதோன்’ என்பதே ஒருமையாகும். வேதாகமத்திலே கடவுளைக் குறிக்கும் வகையில் ‘அதோனாய்’ என்ற பன்மையே பயன்படுத்தப்படுகின்றது. ஒருமை ‘அதோன்’ பயன்படுத்தப்படும்போது, அது பொதுவாக ஒரு ‘மனித ஆளைக்’ குறிக்கிறது. ஆண்களைக் குறிக்க ‘அதோன்’ 215 முறை திருவிவிலியத்திலே பயன்படுத்தப்படுகின்றது. எப்போதாவது மாத்திரமே, முக்கியமாக திருப்பாடல்களில், கடவுளைக் குறிக்க ‘அதோன்’ பயன்படுத்தப்படுகின்றது (காண். விப 34:23).

**4. ‘யாவே’ - ஆண்டவர், யெகோவா (Yahweh, Jehovah)**

முதல் ஏற்பாட்டில் கடவுளை அழைக்க அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ள பெயர் ‘யாவே’ ஆகும். இந்தப் பயன்பாடுகள் 6519 முறை திருவிவிலியத்திலே நிகழ்கின்றது (காண். தொநூ 2:4). இந்தப் பெயரைத்தான் தன் பெயராக கடவுள் மோசேக்கு வெளிப்படுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் அர்த்தம் “அனைத்தையும் ஆள்பவரே” ஆண்டவர் என்பதாகும். யூத பாரம்பரியத்தில் இந்த பெயர் உச்சரிக்கப்படும் போது மிகவும் புனிதமான கடவுளின் இந்த பெயர் உண்மையில் உயிரெழுத்துக்கள் இல்லாமல் ‘YHWH’ என்று உச்சரிக்கப்படுகின்றது. (இந்தப் பயன்பாடு டெட்ராகிராமட்டன் என்று குறிப்பிடப்படுகின்றது. இதன் பொருள் ‘நான்கு எழுத்துக்கள்’ என்பதாகும்). தொடக்க நூல் 2இல் ‘யாவே’ (YHWH) என்று கடவுளை அழைக்க இந்த சொல் பயன்படுத்தப்பட்டாலும், விடுதலைப் பயணம் அதிகாரம் 3 வரை கடவுள் தன்னை ‘யாவே’ ஆக வெளிப்படுத்தவில்லை. காலப்போக்கில் இந்த ‘யாவே’ (YHWH) என்ற சொல்லின் உச்சரிப்பிலே உச்சரிப்பை இலகுவாக்குவதற்காக உயிரெழுத்துக்களை வேதாகம நவீன மொழிபெயர்ப்புகளிலே (காண். KJV ஆங்கில மொழிபெயர்ப்பு, ஜெனிவா விவிலியம்) உள்ளடக்கிய போது ‘YHWH’ என்பதை பலர் ‘YaHWeH’ அல்லது ‘யெகோவா’ என்று உச்சரிக்கின்றனர்.

**5. ‘யெகோவா நிஸ்ஸி’ - ஆண்டவர் என் கொடி (Jehovah Nissi - The Lord is my Banner)**

அமலேக்கியரோடு போரிட்டு வெற்றி பெற்ற மோசே பலிபீடம் ஒன்றைக் கட்டி ஆண்டவரின் பிரசன்னத்தைப் ‘போர்க்கொடிக்கு’ ஒப்பிட்டு வழங்கும் பெயர்தான் இதுவாகும் (காண். விப 17:15). ஒரே முறைதான் இந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. ‘யெகோவா’ என்ற சொல் ‘இருப்பவர்’ அல்லது ‘இறைவன்’ என்று மொழிபெயர்க்கப்படுகின்றது.

‘யெகோவா’ என்ற சொல்லானது ‘ஹாவா’ (Havah) என்ற எபிரேய சொல்லிருந்து வருகின்றது. இதன் முக்கிய பொருள் ‘இருக்கின்றது’ என்பதாகும். எபிரேய மொழியிலே ‘நிஸ்ஸி’ என்றால் ‘பதாதை’ அல்லது ‘கொடி’ என்று பொருள்படுகின்றது. போரிற்குச் செல்லும் நாடுகள் தங்கள் நாட்டின் கொடிகளை போர்க்களத்திற்கு செல்லும் தங்கள் வீரர்களின் முன் வரிசையிலே ஒரு கம்பத்தில் பறக்க விடுவார்கள். இது அவர்களின் வீரர்களுக்கு நம்பிக்கையின் உணர்வையும் ஒரு மைய புள்ளியையும் தருவதாகும். கடவுள் நமக்கும் இதுவாகவே இருக்கின்றார். எங்களுக்கு நம்பிக்கையையும் ஒரு மைய புள்ளியையும் அளிக்கும் ஊக்கத்தின் கொடியாக நம் கடவுள் திகழ்கின்றார். ●

(தொடரும்….)

# படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்

அருட்சகோ. மேரி றுவீனா, திருக்குடும்ப மடம், நானாட்டான்

இவ்வருடம் ஐப்பசி மாதத்தை மறைபரப்புமாதமாகத் திருத்தந்தை பிரான்சிஸ் பிரகடனம் செய்துள்ளதை நாம் அறிவோம்.

தி.பா. 19:2-4 பிரபஞ்சங்கள் இரவும், பகலும் நற்செய்தியை அறிவிக்கின்றன. அவை உலகின் கடையெல்லைவரை எட்டுகின்றது. மாற் 16:15 இயேசு அவர்களை நோக்கி “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” என்று கூறினார். இந்த வார்த்தை, திருமுழுக்குப் பெற்ற அனைவருமே நற்செய்தியாகிய கிறிஸ்துவைப் பறைசாற்ற அனுப்பப்பட்டிருக்கின்றோம் என்பதை உணர்த்துகின்றது. இதற்காகப் பொறுப்புடன் நாம் செயற்பட ஐப்பசி மாதம் மறைபரப்பு மாதமாகத் தரப்பட்டிருக்கின்றது. மறைபரப்பு என்றால் நற்செய்தியாகிய கிறிஸ்துவை உலகின் கடையெல்லைவரை அறியச் செய்வதாகும்.

எமது நாட்டிலும், உலகமெங்கும் எத்தனையோ இடங்களில் கிறிஸ்துவை அறியாதவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் நற்செய்தியைப் போதனைகள் மூலமும், கிறிஸ்துவின் வாழ்வை குடும்பங்களில், பாடசாலைகளில், பொது இடங்களில் வாழ்ந்து காட்டுவதன் மூலமும் மறைபரப்பைச் செய்ய முடியும். இன்னும் மாணவர்கள், சிறுவர்கள் சிறு ஒறுத்தல் முயற்சியினால் சேர்க்கும் பணத்தை மறைபரப்புக்குக் கொடுத்துதவ முடியும். புனித சின்னத் தெரேசா, தன்னுடைய தியாகம், செபம், ஒறுத்தல் முயற்சியால் அதிகம் பேரை கிறிஸ்துவை அறிய மனமாற்றம் பெரச் செய்தாள். இதனால் அப்போஸ்தலர்களைப் போன்று பெரிய அப்போஸ்தலியாகத் திருச்சபையில் விளங்குகிறாள். சிறுவர்கள், மாணவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் தியாகம், ஒறுத்தல், செபத்தின்மூலம் மறையைப் பரப்பமுடியும். குடும்பங்களும் தங்கள் வருமானத்தில் சிறு பகுதியை மறைபரப்புக்கு அனுப்புவதன் மூலம் நற்செய்தி அறிவிப்புப்பணியில் பங்குகொள்கின்றார்கள் என்பதை உணர்ந்து இறைவனுடைய ஆசீரோடு மகிழ்ச்சியாக வாழ அழைக்கப்படுகின்றார்கள்.

குருக்கள், துறவிகள் தான் மறையைப் போதிக்க, உரிமை உடையவர்கள் என்றும், தங்களுக்குப் பொறுப்பு இல்லை என்றும் பொதுநிலையினர் நினைத்துப் பொறுப்பினின்றும் தப்பிவாழமுடியாது. கிறிஸ்துவைப் பின் பற்றிவாழ, திருமுழுக்குப் பெற்ற அனைவருமே பொறுப்புடன் கடமையைச் செய்ய அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். இறைவனின் அன்பின் படைப்புத்தான் பிரபஞ்சம் முழுவதும், பிரபஞ்சத்தில் வாழும் மனிதரும் இறைவனின் படைப்பு பிரபஞ்சம் நற்செய்தியை உலகின் கடையெல்லைவரை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றதென்றால் கிறிஸ்துவைப் பின்பற்ற திருமுழுக்குப் பெற்ற நாம் மறையை அறிவிக்க ஆவல், அக்கறை, கரிசனை அற்றவர்களாக வாழ்ந்து வந்தோமென்றால் எமது இறுதிநாள் தீர்ப்பில் (மத்.25:35-46) கிறிஸ்து எம்மிடம் கேட்கும் கேள்வி உதாரணம் நான் பசியாய் இருந்தேன் எனக்கு உணவு தந்தாய், அவர் கேட்கும் பல கேள்விகளுக்கு நாம் என்ன பதில் கூறமுடியும் என்பதை உணர்ந்து வாழ முயற்சிப்போம். இறைவன் தந்த காலத்தை, நேரத்தை விரயமாக்காமல் மறையை அறிவிக்க முன்வருவோம். (மாற். 16:15) “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” ●

# கற்கிடந்தகுளம் நற்கருணை வாசகப்பா

கடந்த 30.09.2019 அன்று கற்கிடந்தகுளம் பங்கின் "நற்கருணை வாசகப்பா" கற்கிடந்தகுளம் புனித சூசையப்பர் ஆலயத்தின் பின்புறத்தில் திறந்த அரங்கில் முருங்கன் மறைக்கோட்ட முதல்வரும், கற்கிடந்தகுளம் பங்கின் பங்குத்தந்தையுமாகிய அருட்பணி. சுரேந்திரன் றெவ்வல் அடிகளாரின் தலைமையில் சிறப்பான முறையில் ஆற்றுகை செய்யப்பட்டது. இந்நிகழ்விற்கு முதன்மை அதிதியாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் கலந்து சிறப்பித்தார்.

















# களிமோட்டை புனித தோமையார் வாசகப்பா

சிறுக்கண்டல் பங்கின் களிமோட்டை புனித அன்னை வேளாங்கண்ணி ஆலயப்பங்கு மக்களின் "சந்தொம்மையார் வாசகப்பா" கடந்த 06.09.2019 அன்று களிமோட்டை புனித அன்னை வேளாங்கண்ணி ஆலய வளாகத்தின் திறந்த அரங்கில் பங்குத்தந்தை அருட்பணி. L. ஞானாதிக்கம் அடிகளாரின் தலைமையில் ஆலயக் கலைஞர்களின் முழு ஒத்துழைப்போடும், ஆலய இறைமக்களின் ஆதரவோடும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் கலந்து சிறப்பித்தார். மேலும் சிறப்பு விருந்தினராக முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. சுரேந்திரன் றெவ்வல் அடிகளார் கலந்து கொண்டார்.












# பள்ளிமுனை புனித லூசியா நாடகம்

பள்ளிமுனைப் பங்கின் புனித லூசியா ஆலய மக்களின் இரு இரவு. “புனித லூசியா நாடக ஆற்றுகை” கடந்த புரட்டாதி மாதம் 12,13ஆம் திகதிகளில் பள்ளிமுனை புனித லூசியா மைதானத்தின் திறந்த அரங்கில் பங்குத்தந்தை அருட்பணி. ச. மரியதாசன் சீமான் அடிகளாரின் தலைமையில் ஆலய இறைமக்களின் முழு ஒத்துழைப்போடும், ஆலயக் கலைஞர்களின் முழுமையான ஈடுபாட்டோடும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு முதல்நாள் முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாரும், இரண்டாம் நாள் பிரதம விருந்தினராக மன்னார் மறைக்கோட்ட முதல்வரும், மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயப் பங்குத்தந்தையும், பள்ளிமுனைப்பங்கின் முன்னைநாள் பங்குத்தந்தையுமாகிய அருட்பணி. ஞானப்பிரகாசம் அடிகளார் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

















# தாழ்வுபாடு புனித சூசையப்பர் வாசகப்பா

தாழ்வுபாடு பங்கின் பங்குத்தந்தை அருட்பணி. பி. யேசுராஜா அடிகளாரின் தலைமையில் புனித சூசையப்பர் ஆலய இறைமக்களின் முழுமையான ஆதரவோடும், ஆலயக் கலைஞர்களின் சிறப்பான ஈடுபாட்டோடும் இரு , ப “புனித சூசையப்பர் வாசகப்பா” கடந்த புரட்டாதி மாதம் 20,21ஆம் திகதிகளில் தாழ்வுபாடு மன்/ புனித வளனார் மகாவித்தியாலய மைதானத்தின் திறந்த அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு முதல்நாள் முதன்மை அதிதியாக மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கலந்து சிறப்பித்தார். இரண்டாம் நாள் விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் கலந்து கொண்டார்.










மன்னார் திருஅவையின் கற்கிடந்தகுளம்பங்கு “நற்கருணை வாசகப்பா” , சிறுக்கண்டல்பங்கின் களிமோட்டை “சந்தொம்மையார் வாசகப்பா” , பள்ளிமுனைப்பங்கு “புனித லூசியா நாடகம்” , தாழ்வுபாடுபங்கு “புனித சூசையப்பர் வாசகப்பா” ஆகிய நாடகங்களை ஆற்றுகை செய்து கத்தோலிக்க கலைவடிவங்களை பாதுகாத்து வருகின்றமைக்காக கற்கிடந்தகுளம், சிறுக்கண்டல், பள்ளிமுனை, தாழ்வுபாடு ஆகிய பங்குகளின் பங்குத்தந்தையர்களையும், அவர்களோடு ஒத்துழைத்த அண்ணாவிமார், ஆர்வத்தோடு ஈடுபட்ட கலைஞர்கள், இதற்குப் பலமாக இருந்த பங்கு இறைமக்கள் அனைவரையும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா பாராட்டி மகிழ்கின்றது. தொடர்ந்து கலைவழி இறைவழி செல்ல வாழ்த்துகின்றோம்.



# மாணவர் மன்னா



## விவிலிய வினாவிடைப் போட்டி இல: 15
## [2கொரிந்தியர் 1முதல் 13 முடிய]

### போட்டி விதிகள்

1. விடைத்தாளிலே விடைகளை எழுதி அனுப்புதல் வேண்டும்.
2. உங்கள் விடைகளை 01.11.2019ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஷ்டசாலிகளுக்குப் பரிசுத்தொகை அனுப்பிவைக்கப்படும்.
3. மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம். (தரம் - 3 முதல் தரம் 12 வரை)
4. முழுமையாக சரியான விடைகளை எழுதுவோரின் பெயர்கள் மட்டும் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
5. உங்கள் விடைப் பத்திரத்தில் பெயர், கல்விகற்கும் தரம், பங்கு, விலாசம் குறிப்பிடுதல் வேண்டும்.
6. பங்குத்தந்தையின் கையொப்பம் பெறல் வேண்டும்.
9. “விவிலிய வினாவிடைப் போட்டி - 15”, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, ‘MANNA’
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

### விவிலிய வினாக்கள்

01. கடவுள் எப்படிப்பட்டவராய் இருக்கின்றார் என்று புனித பவுலடியார் குறிப்பிடுகின்றார்?
02. ஆனால் ஆண்டவர் பால் திரும்பினால் என்ன அகற்றப் படும் என்று புனித பவுல் குறிப்பிடுகின்றார்?
03. எங்கள் உடல் அழிந்து கொண்டு இருந்தாலும் நாளுக்குநாள் புதுப்பிக்கப்படுவது எது?
04. வாழ்வோர் இனி தங்களுக்கென வாழாமல் வேறு யாருக்காக வாழவேண்டுமென புனித பவுல் குறிப்பிடுகின்றார்?
05. துயருற்றோர் எனத் தோன்றினாலும் தாங்கள் எப்போதும் எப்படியான மனநிலையோடு இருப்பதாக புனித பவுல் குறிப்பிடுகின்றார்?
06. கடவுளுக்கு ஏற்புடைய முறையில் தாங்கிக் கொள்ளப்படும் மனவருத்தம் எத்தகைய விளைவை ஏற்படுத்துகின்றது?
07. ஒருவர் ஏழைகளுக்கு வாரி வாரி வழங்கும் போது அவரில் என்றென்றும் நிலைத்திருப்பது யாது?
08. பெருமை பாராட்ட விரும்புகின்றவர் எதைக்குறித்து பெருமை பாராட்டவேண்டும்?
09. புனித பவுல் வலுமின்மையிலும், இகழ்ச்சியிலும், இடலிலும் இன்னலிலும், நெருக்கடியிலும், யாரை முன்னிட்டு அகமகிழ்கின்றார்?
10. புனித பவுலடியார் 2 கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் எப்படியான மனநிலையில் இருக்கும்படி கேட்டுக்கொள்கின்றார்?

### விவிலிய வினாவிடைப்போட்டி இல. 13 இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
சை. யேசுதாசன்,
கட்டைக்காடு பங்கு,
நானாட்டான்

**இரண்டாம் பரிசு:**
யோ. யோண் சந்தனராஜ்,
தோமஸ்புரி,
வங்காலைப்பங்கு.

**மூன்றாம் பரிசு:**
அ. பவுஸ்ரீனா,
பள்ளிமுனைகிழக்கு,
பள்ளிமுனைப்பங்கு.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 68 பேர். சரியான விடைகளை எழுதியோர் 62 பேர்.**

01. S. டெல்சினா, கட்டைக்காடுபங்கு.
02. ம. டெஸ்மன், கிளிநொச்சிப்பங்கு.
03. ந. நியோமி, கட்டைக்காடுபங்கு.
04. வோ. தறியோ பியூறியன், அளவக்கைபங்கு.
05. வோ. ஆன் சியாளின் மிர்ஷா, அளவக்கைபங்கு.
06. ம. டிலோஷன், வங்காலைப்பங்கு
07. செ. டெப்னி லெம்பேட், வங்காலைபங்கு.
08. இ. மேரி அனுஷா, அளவக்கைபங்கு.
09. வி. ராஜினி, கோமரசன்குளம்பங்கு.
10. செ. டனுசியா, அளவக்கைபங்கு.
11. து. ஜெயந்தி நிலோசிக்கா, கட்டைக்காடுபங்கு.
12. வி. அனாமெலிஷா, அளவக்கைபங்கு.
13. வி. அன்றோ ஜோயல், அளவக்கைபங்கு.
14. அ. றொஷாணி, கிளிநொச்சிப்பங்கு.
15. இ. அக்ஷயா, எழுவைதீவுப் பங்கு
16. ம. அம்பிகா, கிளிநொச்சிப்பங்கு
17. அனற் ஜீவிதா, முல்லைத்தீவுப்பங்கு
18. சுபேத்திரா, கட்டையடம்பன் பங்கு
19. வி. அகல்யா, புங்குடுதீவுப்பங்கு
20. ம. றெபேக்கா, பாசையூர்ப்பங்கு
21. ம. சுபாஷினி, கிளிநொச்சிப்பங்கு
22. ம. நொய்லின், திருகோணமலைப்பங்கு
23. ரா. நிசாந்தினி, பாசையூர்ப்பங்கு
24. நி. அன்ரன் கபிஸ், குருநகர்ப்பங்கு
25. நி. புஸ்பாகரன், யாழ்.பெரியகோவில்பங்கு
26. ம. ஆன்மேரி றகுலா, விடத்தல்தீவுப்பங்கு
27. ம. லுமின்சலா, குருநகர்ப்பங்கு
28. க. இவோன்சிகா, முத்தரிப்புத்துறைப்பங்கு
29. அ. வினிதா, நானாட்டான்பங்கு
30. அ. நிசாந்தன், முருங்னக்பங்கு
31. ம. டக்சாயினி, வேப்பங்குளப்பங்கு
32. ந. மதுமிதா, எழுவைதீவுப்பங்கு
33. ம. அன்ரன் மரியதாஸ், கொழும்புத்துறைப்பங்கு
34. ம. நந்தினி, முருங்கன்பங்கு
35. நி. சுவேதா, கொச்சிக்கடைப்பங்கு
36. அ. மதுசன், கொச்சிக்கடைப்பங்கு
37. அன்ரனி றொமோள்சன், மட்டக்களப்புப்பங்கு
38. ம. டிலோஜினி, நீர்கொழும்புப்பங்கு
39. அ. அக்ஷிதா, கொச்சிக்கடைப்பங்கு
40. ம. சுபாசினி, நீர்கொழும்புபங்கு
41. ந. அக்மிதா, மட்டக்களப்புப்பங்கு
42. லக்சிகா, குஞ்சுக்குளப்பங்கு
43. சுவேத்தா மோகன்ராஜ், மாதகல்பங்கு
44. பேடின் லக்ஷாயினி, பருத்தித்துறைப்பங்கு
45. அ. சர்மிலன், தலைமன்னார்பங்கு
46. கி. சத்திறாஜ், முல்லைத்தீவுப்பங்கு
47. எ. டக்சிகா, குஞ்சுக்குளப்பங்கு
48. அன்ரன் அருள்றாஜ், கன்னாட்டிப்பங்கு
49. ம. அக்ஸ்லின், வேப்பங்குளப்பங்கு
50. லக்சாயினி, தலைமன்னார்ப்பங்கு

# இலங்கைத் திருச்சபை வரலாற்றில் ஒருசில முதற்படிகள்

**- அருட்பணியாளர். A.A. நவரெட்ணம், முதுநிலை விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம் -**

- இலங்கையில் முதலாவது ஆயராகத் தெரிவு செய்யப்பட்டவர் இந்தியாவின் ஓரத்தோரியன் சபையினைச் சார்ந்த அருட்பணி வின்சென்ட் டி றொசாரியோ (Vincent de Rosayro) ஆவார். இவர் 1838ஆம் ஆண்டில் இலங்கையில் முதலாவது திருத்தூது நிர்வாகியாக (Vicar Apostolic) நியமிக்கப்பட்டார்.
- இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஐரோப்பிய ஆயர் இத்தாலிய ஓரத்தோரியன் சபையினைச் சார்ந்த அருட்பணி. ஓராசியோ பெற்றக்கினி ஆவார். இவர் 1846ஆம் ஆண்டில் இலங்கையின் இரண்டாவது திருத்தூது நிர்வாகியாக கடமையாற்றிய ஓரத்தோரியன் சபையினைச் சார்ந்த பேரருட்திரு கயித்தானோ அன்டோனியோ (Caetano Antonio) என்பவருக்கு இணை ஆயராக (Coadjutor) நியமிக்கப்பட்டார்.
- பேரருட்திரு பெற்றக்கினி ஆண்டகை அவர்களே இலங்கையில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட முதலாவது நபராவார். இவர் 08.02.1846இல் கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்தில் பேரருட்திரு கயித்தானோ அந்தோனியோ என்பவரால் திருநிலைப்படுத்தப்பட்டார். அதற்கு முந்திய ஓரத்தோரியன் சபையினைச் சார்ந்த ஆயர்களாகிய பேரருட்திரு வின்சன்ட் டி றொசாரியோ மற்றும் கயித்தானோ அந்தோனியோ ஆகிய இருவரும் இந்தியாவில் ஆயர்களாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள்.
- 1849ஆம் ஆண்டில் இலங்கை வடபகுதியின் (யாழ்ப்பாணம்) முதலாவது திருத்தூது பிரதிநிதியாக பேரருட்திரு ஓராசியோ பெற்றக்கினி ஆண்டகை அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.
- இலங்கை கொழும்பு பிரதேசத்தின் முதலாவது ஐரோப்பிய நாட்டு திருத்தூது பிரதிநிதியாக பேரருட்திரு யூசேப்பே பிராவி அவர்கள் பேரருட்திரு கயித்தானோ அந்தோனியோ அவர்களைத் தொடர்ந்து 1857ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்கள்.
- அமலமரித் தியாகிகள் சபையிலிருந்து முதலாவது ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டவர் பேரருட்திரு ஸ்ரீபன் செமேரியா (Stephen Semeria) ஆண்டகையாவார். அவர் அன்றைய யாழ்ப்பாண திருத்தூது பிரதிநிதியாகக் கடமையாற்றிய பேரருட்திரு ஓராசியோ பெற்றக்கினி ஆண்டகை அவர்களுக்கு இணை ஆயராக 1856ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.
- 1862ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த ஆறு திருக்குடும்ப கன்னியர்களே (Holy Family Sisters) இலங்கைக்கு முதலில் வருகைதந்த கத்தோலிக்க துறவற சபைக் கன்னியராவர்.
- உரோமையிலுள்ள விசுவாசப் பரம்புதல் சபைக் (Propaganda College) கல்லூரியில் கல்வி கற்ற முதல் இலங்கையர் மாணவர் கொர்னேலியுஸ் யுஸ்ரஸ் பிரான்ட் பெர்னாண்டோ ஆவார். இவர் 1843 – 1851 ஆம் ஆண்டுகள் காலப்பகுதியில் அங்கு கல்வி பயின்றார். இலங்கையின் முதலாவது சுதேச அமலமரித் தியாகி அருட்சகோதரர் போல் ஸ்ரீபன் புவரே (Paul Stephen Poorey) ஆவார். அவர் 1861 இல் காலமானார்.
- இலங்கையின் முதலாவது சுதேச இயேசுசபைத் துறவி அருட்பணி. S.G. பெரேரா (1905) ஆவார். அதேவேளையில் கொழும்பில் பிறந்தவரான போர்த்துக்கேய இம்மானுவேல் கொஸ்தா என்பவர் 1608இல் இயேசுசபையில் இணைந்து 1620ஆம் ஆண்டில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.
- கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் முதலாவது பேராயராக நியமிக்கப்பட்டவர் பிரான்ஸ் நாட்டு அமலமரித் தியாகியாகிய பேரருட்திரு கிறிஸ்ரோபர் பெஞ்சமின் (Christopher Benjamin) ஆண்டகையாவர். இவர் 1887ஆம் ஆண்டில் பேராயராக நியமிக்கப்பட்டார்.
- இலங்கையின் முதலாவது சுதேச ஆயராக ஆசீர்வாதப்பர் துறவற சபையினைச் சார்ந்த பேரருட்திரு பீட் பீக்மேயர் (Bede Beekmeyer) ஆண்டகையவர்கள் 1911ஆம் ஆண்டில் கண்டி மறைமாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டார்.
- இலங்கையின் முதலாவது ஆயராக நியமனம் பெற்ற சிங்களவர் அமலமரித் தியாகிகள் துறவற சபையினைச் சார்ந்த பேரருட்திரு எட்மண்ட் பீரிஸ் (Edmund Pieris) ஆண்டகையாவர். இவர் 1940ஆம் ஆண்டில் சிலாபம் மறைமாவட்டத்தின் முதலாவது ஆயராக நியமிக்கப்பட்டார்.
- இலங்கையின் முதலாவது ஆயராக நியமனம் பெற்ற தமிழர் அமலமரித் தியாகிகள் துறவற சபையினைச் சார்ந்த பேரருட்திரு J. எமிலியானுஸ்பிள்ளை (J.Emilianuspillai) ஆண்டகையாவர். இவர் 1949ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் இணை ஆயராக நியமிக்கப்பட்டு, 1950ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் ஆயரானார்.
- இலங்கையில் முதலாவது மூன்றாம் நிலைக் கல்வியாகிய (Tertiary Education) உயர்நிலைக் கல்வியினை வழங்கிய கத்தோலிக்க நிறுவனமானது போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் இயேசு சபையினரால் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டதாகும். அங்கு குருக்களுக்கான அறநெறி இறையியல் (Moral Theology) கற்பிக்கப்பட்டது.
- இலங்கையின் முதலாவது உள்ளூர் சுதேச துறவற சபையானது சூசையப்பர் அருட்சகோதரர்கள் (Brothers of St. Joseph) எனும் பெயரில் யாழ்ப்பாணத்தின் திருத்தூது பிரதிநிதியாகவிருந்த பேரருட்திரு ஸ்ரீபன் செமேரியா ஆண்டகையின் காலத்தில் அருட்பணி கிறிஸ்ரோபர் பெஞ்சமின் அவர்களின் நெறிப்படுத்துதலுடன் 17.04.1864இல் ஆரம்பிக்கப்பட்டது.
- இலங்கையின் முதலாவது திருச்சபையின் குருமடமானது (Ecclesiastical Seminary) 1869ஆம் ஆண்டில் வடக்கின் திருத்தூது பிரதிநிதியாகவிருந்து பேரருட்திரு கிறிஸ்ரோபர் பெஞ்சமின் ஆண்டகையால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதுவே பிற்காலத்தில் புனித மடுத்தீனார் (St. Martin’s Seminary) குருமடமானது.
- இலங்கையின் முதலாவது உயர் பட்டமளிக்கும் பல்கலைக்கழகமாக கண்டியில் திருப்பீடத்தால் (Holy See) பாப்பிறைக் குருமடம் (Papal Seminary) திருச்சபை கற்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டது. இக்குருமடத்திற்கு 1926ஆம் ஆண்டில் கலாநிதிப் பட்டப்படிப்பினை வழங்கும் தகுதியும் வழங்கப்பட்டது. 1940ஆம் ஆண்டில் கண்டி திருப்பீட நிறுவனம் (Pontificium Athenaeum Kandiense – Pontifical Institute of Kandy) எனும் உயர் கௌரவமும் வழங்கப்பட்டது.
- கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் முதலாவது சுதேச பேராயராக 1947இல் நியமனம் பெற்றவர் அமலமரித் தியாகிகள் துறவற சபையினைச் சார்ந்த பேரருட்திரு தோமஸ் பெஞ்சமின் குரே (Thomas Benjamin Cooray) ஆவார். இவர் 1965ஆம் ஆண்டில் இலங்கையின் முதலாவது கருதினாலாகவும் நியமனம் பெற்றார்.
- இலங்கையின் முதலாவது சுதேச மறைமாவட்டக் குருக்களிலிருந்து ஆயராகியவர் பேரருட்திரு அந்தோனி டி சேரம் (Antony de Seram) ஆண்டகையாவர். இவர் 1963ஆம் ஆண்டில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராக (Auxiliary Bishop) நியமிக்கப்பட்டார்.
- இலங்கையுட்பட கிழக்கிந்திய நாடுகளுக்கு திருத்தூதரக பிரதிநிதியாக (Apostolic Delegate) முதன் முதலில் பேராயர் அந்தோனியோ அலியார்டி (Antonio Agliardi) என்பவர் 1884ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்.
- கொழும்பினை வதிவிடமாகக்கொண்டு இயங்கக்கூடிய இலங்கைக்கு மாத்திரமான திருத்தூதரக பிரதிநிதியாக பேராயர் லூசியானா ஸ்ரோரேரோ (Luciano Storero) என்பவர் 1969ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்.
- இலங்கை நாட்டின் முதலாவது திருத்தூதரக திருத்தந்தையின் பிரதிநிதியாக (Apostolic Pro-Nuncio) பேராயர் கார்லோ கூரிஸ் (Carlo Curis) அவர்கள் 1976ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்.


## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம்:** கறுப்பு வெள்ளை 4,500/=, கலர்7,500/=

சிறப்புக் கட்டுரைகள்

# சுக நல சேவையில் 90 ஆவது அகவைக்குள் காலடி எடுத்து வைக்கும் இலங்கைத் திருச்சிலுவைக் கன்னியர்

**அருட்சகோதரி விக்ரீன் ஜேம்ஸ்**
**திருச்சிலுவைக் கன்னியர் சபை**

14 செப்ரெம்பர் 2019 அன்று இலங்கை திருச்சிலுவைக் கன்னியர் சபையினர் திருச்சிலுவையின் மகிமை விழாவை தமது சபையின் பெருவிழாவாகக் கொண்டாடும் வேளை இலங்கையில் திருச்சிலுவைக் கன்னியர் சபையினர் சுகநல சேவை பணியில் 90ஆண்டு (1930 - 2019) நிறைவு செய்வதையும், திருச்சிலுவைக் கன்னியர் சபை சுவிற்சலாந்து நாட்டில் மென்சிங்கன் கிராமத்தில் 17 ஒக்ரோபர் 1844 ஸ்தாபிக்கப்பட்ட 175ஆவது ஆண்டு நிறைவையும் மகிழ்வோடும் கொண்டாடுகின்றனர். இந்த மகிழ்வான நேரத்தில் இலங்கையில் திருச்சிலுவைக் கன்னியர் சபையின் வாழ்வையும், பணியையும் அலசுகிறது இவ்வாக்கம்.

கப்புச்சின் சபையைச் சேர்ந்த தியோடோசியஸ் அடிகளாரால் அருட்சகோதரிகள் பேர்னாடா ஹெய்ம்காட்னர், பெலிசியானா கிராமர், கொர்னேலியா ஆகியோருடன் சுவிற்சலாந்து நாட்டில் மென்சிங்கன் கிராமத்தில் 17 ஒக்ரோபர் 1844ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட திருச்சிலுவைக் கன்னியர் சபையானது இன்று 175ஆவது ஆண்டு நிறைவில் உலகின் நான்கு கண்டங்களில் உள்ள 18 நாடுகளில் பரந்து பணியாற்றுகின்றது. மூன்று சுவிஸ் அருட்சகோதரிகளுடன் 1930ஆம் ஆண்டு இலங்கை ஊர்காவற்துறையில் சுகநல சேவை பணியை ஆரம்பித்த திருச்சிலுவைக் கன்னியர் சபை 90 ஆண்டுகளின் நிறைவில் இன்று இலங்கையின் ஒன்பது மறைமாவட்டங்களிலும் பாகிஸ்தானில் ஓர் மறைமாவட்டத்திலும் தன் கிளைகளைப் பரப்பி சேவையை ஆற்றும் ஓர் விருட்சமாகவும் திகழ்கின்றது.

### திருச்சிலுவைக் கன்னியர் சபையின் மாகாணத் தலைவி அருட்சகோதரி றொபினா அவர்களின் ஆசிச்செய்தி

திருச்சிலுவைக் கன்னியர் சபையின் மாகாணத் தலைவி அருட்சகோதரி றொபினா அவர்கள் தமது ஆசிச்செய்தியில் திருச்சிலுவைக் கன்னியர் சபையானது கிராமப் புறங்களில் வாழும் பெண்களின் கல்வியை கருத்திற் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட போதும் எமது நிறுவுனரின் விருதுவாக்கான காலத்தின் தேவைக்கேற்ப பணி புரிவதே இறை சித்தம் என்பதற்கேற்ப ஆசிரியப்பணியில் அக்கறை செலுத்தினர். 1930இல் ஏற்பட்ட தேவைக்கேற்ப இலங்கையின் வட மாகாணத்திலுள்ள ஊர்காவற்துறை என்னும் தீவில் சுகநலப் பணியை ஆரம்பித்தனர். நாம் பாக்கியம் பெற்றவர்களாக கடவுளின் இரக்கம் நிறைந்த அன்பையும், குணப்படுத்தலையும், முழுமையையும் அளித்து எல்லோரும் ஒன்றாக இணைந்து புதுப்பிக்கும் நம்பிக்கையுடன் கூடிய உற்சாகம் நிறைந்த இறையன்பைத் தாங்கிச் செல்லும் தூதுவர்களாக பயணிப்போம் எனத் தெரிவிக்கின்றார்.

### யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆசிச்செய்தி

யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தமது ஆசிச்செய்தியில் 1938 ஆம் ஆண்டு யாழ் அரசாங்க பொது வைத்தியசாலையில் பணிகளைத் தொடங்கிய இவர்கள் 25 ஆண்டுகள் அங்கு பணியாற்றியுள்ளனர் என்பது பலரும் அறியாத உண்மையாகும். யாழ் மறைமாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கை முழுவதிலும் இவர்களின் பணி இன்று பரவியுள்ளது என்பது பாராட்டப்பட வேண்டியதாகும்.

இலங்கை மண்ணில் சுகநலப்பணிகள் முதன்மை பெற்று பணி புரிபவர்களில் திருச்சிலுவைக் கன்னியரும் இடம் பெறுகின்றனர் என்பதில் ஐயமில்லை. திருச்சிலுவைக் கன்னியர் சுகநலசேவைகளில் சிறப்புப் பெற்று ஆற்றி வரும் சுகநலப்பணிகள் இனிதே தொடர இறையாசீர் வேண்டி வாழ்த்துகின்றோம் என வாழ்த்துகின்றார்.

### 1844இல் திருச்சிலுவைக் கன்னியர் சபை சுவிற்சலாந்து நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டது

பிரெஞ்சுப் புரட்சியை அடுத்து ஏற்பட்ட துன்பகரமான அல்லது வேதனைக்குரிய சூழ்நிலையிலே புதிய ஒரு துறவற சபை அடித்தளமிடுவதற்கு நல்ல ஒரு உறுதியான நிலத்தைப் பெற்றுத் தந்தது என்று கூறினால் அது மிகையாகாது. சுவிற்சலாந்தில் கத்தோலிக்க திருச்சபையானது பல இடர்களைச் சந்தித்தது. இப்படியான சூழ்நிலையிலே தூரநோக்குடன் சிந்தித்த கப்புச்சின் சபையைச் சேர்ந்த அருட்தந்தை தியோடோசியஸ் அவர்கள் மக்கள் மத்தியில் வழிப்புணர்வை ஏற்படுத்த விரும்பினர். 1844 ஐப்பசி 16ஆம் திகதி அருட்சகோதரிகளான பேர்னாடா ஹெய்ம்காட்னர், பெலிசியானா கிராமர், கொர்னேலியா ஆகியோர் தமது முதலாவது அர்ப்பண வாக்குறுதியை அளித்தனர்.

### 1906இல் ஆசிரியப் பணியினைச் செய்த அருட்சகோதரிகள் இந்தியாவில் தாதியராக மாறினர்

தென்னிந்திய குயிலோன் மறைமாவட்ட ஆயர் அலோசியஸ் பென்சிகர் ஆண்டகை கல்வி கற்பிக்கும் திருச்சிலுவைக் கன்னியர்களை தாதியர்கள் அல்ல என்று அறிந்தும் தாதிப்பணிக்காக இந்தியாவிற்கு அழைத்தார். "அர்ப்பணிப்புடன் கூடிய அறிவு டிப்ளோமாவிலும் சிறந்தது" என்று அவர் நம்பினார். அருட்தந்தை தியோடோசியஸ் எங்கும் எப்போதும் எத்தேவையிலும் முன்னிற்கும் கன்னியர்களாகத் தமது சபையை நிறுவினார். எமது அருட்சகோதரிகள் தாதிச் சேவையை குயிலோன், திருவனந்தபுரம் ஆகிய இரண்டு மாவட்ட அரசாங்க வைத்தியசாலைகளில் பொறுப்பெடுத்து அதனை நிரூபித்தார்கள்.

### 1930இல் தாதிய அருட்சகோதரிகள் ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைக்கப்பட்டனர்

1930ஆம் ஆண்டு அருட்சகோதரிகள் பெனடிற்ரா ஸ்ரொக்கர் ஒத்மா குறுன்ர், மரியா கரோலா ஆகிய மூன்று அருட்சகோதரிகளும் தம் தலைமைச் சகோதரி லியோனியுடன் ஊர்காவற்துறை படகு துறையை வந்தடைந்தனர். இதனைத்தொடந்து அருட்சகோதரிகள் தமது தாதியப் பணியினை ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலையில் ஆரம்பித்து தொடர்ந்து 32 வருடங்கள் பணியாற்றினர்.

### 1934 கொழும்புத்துறையில் முதியோர் இல்லம்

அருட்சகோதரிகள் ஊர்காவற்துறையை வந்தடைந்த குறுகிய காலத்தினுள் அரசிற்கும் ஆயர் கியோமர் அவர்களிற்கும் இடையே ஏற்பட்ட பேச்சு வார்த்தையின் அடிப்படையில் மூன்று திருச்சிலுவை அருட்சகோதரிகள் கொழும்புத்துறையில் தயார் நிலையில் இருந்த கட்டடத்தில் இருந்த 40 முதியோரை பராமரிக்கவென வருகை தந்தனர். யாழ் மறைமாவட்டத்திற்குரிய இவ்வில்லம் இன்று வரை திருச்சிலுவை அருட்சகோதரிகளால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது.

### 1938 யாழ் அரசாங்க பொது வைத்தியசாலையில் தாதிய அருட்சகோதரிகள்

அருட்சகோதரிகள் ஊர்காவற்துறை வைத்தியசாலையில் சேவையாற்ற ஆரம்பித்ததிலிருந்து யாழ்ப்பாணத்து மக்கள் இவ்வருட்சகோதரிகளை தமது யாழ் அரசாங்க வைத்தியசாலையிலும் பணியாற்ற வேண்டுமென வேண்டிக்கொண்டிருந்தார்கள். எனவே எட்டு வருடங்களின் பின் எதிர்பாராத விதத்தில் ஒரு சாத்திய நிலை உருவாகியது. பயிற்சியும் நல் அனுபவங்களும் நிறைந்த ஏழு அருட்சகோதரிகள் 1938 ஆவணி 10 இல் வைத்தியசாலையின் வேலைத்திட்டத்தினை பொறுப்பேற்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

### 1954இல் குருநகரில் சுகநல நிலையம்

நகரசபையின் வேண்டுகோளிற்கிணங்க குருநகர் மக்களின் சுகநலத் தேவைகளை கவனிக்கவென அருட்சகோதரி ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் வீட்டு தரிசிப்புக்களை நடத்தி மக்களிற்கு சுகநல கல்வியினையும் அளித்து சிறிய நோய்களையும் குணப்படுத்தி சேவையாற்றினார். தற்போது இது கன்னியர் இல்லமாக பேணப்பட்டு வருகின்றது.

### 1982 திருச்சிலுவை சுகநல நிலையம் - கடற்ரை வீதி, யாழ்ப்பாணம்

1933 முதல் இந்தியாவில் மிஷனரி தாதிய அருட்சகோதரியான ஜேர்மனியைச் சேர்ந்த அருட்சகோதரி எட்முண்டா பவர் கொட்டியம் குயிலோன் திருச்சிலுவை மருத்துவமனையில் 28 ஆண்டுகள் பிரதம தாதியாக சேவையாற்றிய பின் 1982ம் வருடம் மாசித் திங்கள் 27ம் நாள் அருட்சகோதரி இசபெல்லுடன் எமக்குரித்தான வைத்தியசாலையொன்றை நிறுவும் சிறப்பு பணி நோக்குடன் இலங்கைக்கு வருகை தந்தார்.

சுகநல நிலைய கட்டடமானது அனுபவம் நிறைந்த அருட்சகோதரி இசபெல்லாவின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு கார்த்திகை மாதம் 17ம் நாள் திறந்து வைக்கப்பட்டது. அரச மருத்துவமனைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் திருச்சிலுவை அருட்சகோதரிகளுக்கென ஒரு மருத்துவமனை வேண்டும் என்னும் நீண்டகால விருப்பம் நிறைவேறியது.

### 2005 திருச்சிலுவை விஞ்ஞான பாடசாலை - யாழ்ப்பாணம்

தாதியர் பாடசாலை 2005ம் வருடம் புரட்டாதித் திங்கள் நான்காம் நாள் யாழ்ப்பாணத்திலுள்ள திருச்சிலுவை வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் மூன்று ஆண்டு கால டிப்ளோமா பயிற்சியை ஆங்கிலத்தில் நிறைவு செய்த பின் அவர்கள் வேறு தனியார் வைத்தியசாலைகளில் தாதியப் பணியை மேற்கொள்ள வாய்ப்பாக அமைவதோடு குடும்பங்களுக்கும், சமூகத்திற்கும் முக்கிய பங்களிப்பிற்கு வழிவகுக்கின்றது.

### 1987-2012 நடமாடும் சுகாதார பராமரிப்பை ஆரம்பித்தல்

திருச்சிலுவை சுகநல நிலையமானது அந்நேரத்தில் காணப்பட்ட தேவையை நிறைவேற்றுவதற்காக புதிய திட்டத்தை ஆரம்பித்து கிராமப் புறங்களுக்கான ஒரு நடமாடும் சுகாதார பராமரிப்பு சேவையை கியூடெக் போன்றவற்றின் நிதியுதவியுடனும் யாழ்ப்பாணத்தின் மருத்துவபீட பல்கலைக்கழக சமூக சுகாதார உதவியுடனும் சகோதரிகள் வடமாகாணத்தின் தொலைதூர கிராமங்களை இந்திய அமைதி காக்கும் படை ஆக்கிரமித்த போதும் அங்கு சென்று தம் சேவையை வழங்கினர். பின்னர் நடமாடும் சுகாதார அலகுகள் கிளிநொச்சி, திருகோணமலை, முருங்கன், மடு போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட்டன.

### 1989-2009 இடம் பெயர்ந்தவர்களிடையே சுகாதாரப் பாதுகாப்பு

யாழ்பாண தீபகற்பத்தில் மக்கள் இடம்பெயர்வின் போது பல்வேறு இன்னல்களை அனுபவித்த காலத்தில் திருச்சிலுவை சுகநல பராமரிப்பு நிலையமும் இடம்பெயர்ந்து பூநகரி, வவுனியா, கிளிநொச்சி, பரந்தன், முருங்கன் ஆகிய இடங்களிற்கு தம் சேவையை வழங்கியது. அக்காலங்களில் பயத்துடனும் ஏக்கத்துடனும் தமது சேவையினை பல்வேறு இடங்களில் வழங்கிய திருச்சிலுவைக்கன்னியர் பின்வரும் இடங்களில் தமது சுகநல பணியினை விரிவுபடுத்தினர்.

1. 1992 – மறைமாவட்ட வைத்தியசாலை 'சிலோம்' மட்டக்களப்பு
2. 1995-2001- 'கனறா' வவுனியா நோர்வேயின் உதவியுடன் இடம்பெயர்ந்த கிராமங்களில் 18 நல நிலையங்களில் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான ஊட்டச்சத்து உணவுத்திட்டம்
3. 1998 – தியோடோசியஸ் சுகாதார நிலையம், கற்கிடந்தகுளம், வவுனியா

கிராம சுகாதார ஊழியர்களுக்கான பயிற்சியையும் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களுக்கு நடமாடும் சுகாதார சேவையையும் CORDAID மற்றும் மெமிசா நிதி உதவியுடன் முருங்கனில் ஆரம்பித்து பின்னர் அதனைச் சுற்றியுள்ள ஏறக்குறைய பத்து கிராமங்கள் வரை சென்றடைந்தது. இச்சுகாதார நிலையமானது தொடர்ந்தும் இற்றை வரை மருத்துவ உதவியினை கிராம மக்களுக்கு ஆற்றி வருகின்றது.

### 4.2003 - மருதமடு அன்னை யாத்திரை திருத்தலம்

இத்திருத்தலத்துடன் இணைக்கப்பட்ட சிறிய வைத்தியசாலையானது யுத்த காலத்தில் MSF என்னும் அரச சார்பற்ற நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் மடுவைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்தது. காலப்போக்கில் மடுப்பிரதேசத்தை விட்டு வெளியேறிய போது திருச்சிலுவை அருட்சகோதரிகளிடம் ஒப்படைத்தது. யாத்திரிகர்களின் சுகாதார பராமரிப்பிற்கும் மேலாக சகோதரிகள் கிராமங்களுக்கான நடமாடும் சேவையையும் நடத்தி வருகின்றனர்.

### 5.2005 - திருச்சிலுவை சுகநல நிலையம் - பரந்தன்

சகோதரிகள் கிளிநொச்சி மருத்துவமனை, மல்லாவி, ஜெயபுரம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் MSF உடன் இணைந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு குறுகிய காலத்திற்கு பணியாற்றியதுடன் பின்னர் வெளிநோயாளர் பிரிவை ஆரம்பித்து பரந்தன் பகுதியை சுற்றி நடமாடும் சுகாதார சேவையையும் ஆரம்பித்தனர். தற்போது மருத்துவ வசதிகள் கொண்ட சுகநல நிலையமாக விருத்தியடைந்துள்ளது.

### 6.2007 – புனித சூசையப்பர் சுகநல நிலையம், 'ஸ்ரெலா மாறிஸ்' திருகோணமலை

1995இல் யாழ்ப்பாண வயோதிபர் இல்லத்திலிருந்த வயோதிபர்கள் இடம் விட்டு இடம் மாறி பல்வேறு இடங்களுக்கு சென்ற பின்னர் அவர்களின் புகலிடமாக திருகோணமலையிலுள்ள 'ஸ்ரெலா மாறிஸ்' என்னும் இல்லம் அமைந்தது. இவ்வில்லம் சுனாமியின் போது வெளிநாட்டு வைத்தியர்களுடன் இணைந்து தேவையான அத்தியாவசியத் தேவைகளை வழங்கியதுடன் தொடர்ந்தும் சேவையை வழங்குவதற்கு அவ்வளாகத்திலே சுகாதார நிலையத்தையும் அமைத்துள்ளது.

1930ஆம் ஆண்டு இலங்கை வந்த திருச்சிலுவைக் கன்னியர் சபையானது இன்று இலங்கையின் ஒன்பது மறைமாவட்டங்களிலும் பாகிஸ்தானில் ஓர் மறைமாவட்டத்திலும் சேவையை ஆற்றுகின்றது. பணி தொடர வாழ்த்துவோம். ●

**ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்**

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்.

*- மன்னா நிர்வாகம் -*

**ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்**



காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள்.

தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

# மன இறுக்கம் ஏன் வருகின்றது?



மன இறுக்கம், மனப் புழுக்கம் அல்லது மன உளைச்சல் என்பது (Mental Stress) நம்மில் பலருக்கு வருகின்றது. தூக்கமின்மை முதல் மாரடைப்புவரை பல நோய்களுக்கு இது காரணம் என்பது மருத்துவ உண்மை. மன உளைச்சல் ஏன் வருகின்றது? சமுதாயத்திடமிருந்து நாம் தேடும் சில தவறான எதிர்பார்ப்புகள் தான் இதற்குக் காரணமானவற்றைப் பட்டியலிட்டே சொல்லலாம்.

- நான் மிகவும் முக்கியமானவன். மற்றவர்கள் எனக்குக் கீழ்ப்படிந்து என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டியது அவர்கள் எல்லோருடையவும் கடமை.
- மற்றவர்கள் எல்லோரும் என்னிடம் மிகவும் மரியாதையாக நடந்து கொள்ளவேண்டும்.
- மற்றவர்களிடம் நான் என்ன எதிர்பார்க்கின்றேன் என்பதை அவர்களாகவே புரிந்துகொண்டு செயல்படவேண்டும்.
- நான் எப்படி நடந்து கொண்டாலும் மற்றவர்கள் என்னிடம் நன்றியுடையவர்களாக நடந்து கொள்ள வேண்டும்.
- நான் குற்றமே அற்றவன், மற்றவர்கள் என்மேல் குற்றம் கண்டுபிடிக்கவே கூடாது.
- நான் நினைத்ததெல்லாம் நினைத்தபடியே நடக்கவேண்டும். மற்றவர்கள் அதற்குத் துணை நிற்கவேண்டும்.

இது எப்படி நடக்கும்? ஏமாற்றமும் மனஉளைச்சலும் நோயும் நம்மைத் தாக்காமல் என்ன செய்யும்? என்று நாம் நினைத்ததே நடக்கவேண்டும். நம் விருப்பம்போல் எல்லோரும் நடந்து கொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பது தான் மன இறுக்கம் சார்ந்த நோய்களுக்குக் காரணம்.

# மன இறுக்கத்தைக் குறைக்க

மற்றவர்களும் நம்மைப் போன்றவர்கள் தான். அவர்களுக்கும் நம்மைப்போல் எதிர்பார்ப்புகள் உண்டு. எல்லோருடைய எதிர்பார்ப்புகளையும் ஒரே நேரத்தில் நிறைவேற்றிவிட முடியாது. மற்றவர்களுக்கும் நம்மைப் போன்ற விருப்பங்கள் தான் இருக்கும் என்ற அடிப்படைப் பார்வையை வளர்த்துக் கொண்டால் மன உளைச்சலை நாம் பெருமளவு தவிர்க்கலாம். அவ்வகையில்,

- மற்றவர்களின் சொல்லை நான் கேட்டால் அவர்களும் என் சொல்லைக் கேட்பார்கள்.



- மற்றவர்களை மகிழ்விக்க நான் முயன்றால் அவர்களும் என்னை மகிழ்விக்க முயல்வார்கள்.
- நான் மற்றவர்களிடம் மரியாதையாக நடந்துகொள்ள முயன்றால் அவர்கள் என்னிடம் மரியாதையாக நடந்து கொள்வார்கள்.
- மற்றவர்கள் எதிர்பார்ப்பதை நான் செய்தால், நான் எதிர்பார்ப்பதை அவர்கள் எனக்குச் செய்வார்கள். மனிதர்கள் எல்லோரும் எப்போதும் நன்றியுடையவர்களாக இருப்பதில்லை. மற்றவர்களுக்கு உதவும்போது அவர்கள் எல்லோரும் நன்றி காட்டுவர் என்று எதிர்பார்க்க முடியாது.
- மற்றவர்கள் என் குறைகளைச் சுட்டிக்காட்டினால் நான் அதைக் கோபப்படாமல் கேட்பேன். தவறு இருந்தால் திருத்திப் பயனடைவேன்.

நம் முயற்சிகள் எல்லாம் உடனே நிறைவேற வேண்டியதில்லை. நிறைய முயற்சிகள் செய்வோம். ஒரு சிலமுயற்சிகள் அவ்வப்போது வெற்றி பெற்றால் போதும். இந்த மனநிலையை வளர்த்துக் கொண்டால் மனஉளைச்சலுக்கு வேலையே இல்லை. ●

# சமையல் குறிப்பு

## மைசூர் பாக்



### தேவையானவை:

| | |
|---|---|
| கடலை மாவு | - 1 கப் |
| சீனி | - 2 கப், |
| நெய் | - 3 கப் |
| சமையல் சோடா | - 1 சிட்டிகை |
| தண்ணீர் | - 1கப் |
| பால் | - 1 மேசைக் கரண்டி |

### செய்முறை :

கடலைமாவை சலித்து, சிறிது நெய்விட்டு வாசம் வரும்வரை வறுக்கவும். பின் தனியாக ஆறவிடவும், ஒரு அடுப்பில் நெய்யை சிறிய தீயில் காய்ச்சவும், அடுத்த அடுப்பில் அடி கனமான பாத்திரத்தில் சீனி மூழ்கும் வரை தண்ணீர் ஊற்றி கொதிக்கவிடவும். கொதித்து வந்தவுடன் பாலை ஊற்றவும் சீனியில் உள்ள அழுக்கு வரும், அதைத் தனியாக கரண்டியால் நீக்கவும், கம்பிபதம் வரும்வரை காய்ச்சவும், பதம் வந்தவுடன் சிறிது சிறிதாக மாவை சேர்க்கவும், கட்டி வராமல் சேர்க்கவும், நெய்யையும் சிறிது சிறிதாக ஒரு கரண்டியால் சுற்றி சேர்க்கவும். விடாமல் கிளறி வரவேண்டும் சிறிது நேரத்தில் நெய் பொங்கிவரும் அதுதான் சரியான பதம். சிறிது சமையல் சோடா சேர்த்து கிளறி ஒரு நெய் தடவிய தட்டில் கொட்டி சிறிது நேரத்தில் வெட்டவும். ●

# மருத்துவக் குறிப்புக்கள்



- இரவில் மூக்கடைப்புக்கு மின் விசிறியின் நேர் கீழே படுக்க வேண்டாம். சற்று உயரமான தலையணை பயன்படுத்தவும். மல்லாந்து படுக்கும்போது மூக்கடைப்பு அதிகமாகும். பக்கவாட்டில் படுக்கவும். காலையில் பல் தேய்க்கும்போது நாக்கு வழித்து விட்டு மூன்று முறை மூக்கைச் சிந்தவும். சுவாசப் பாதையைச் சுத்தப்படுத்த நமது முன்னோர் காட்டிய வழி இது.
- வெண்டைக்காயை உணவில் அடிக்கடி சேர்த்து வந்தால் நரம்புகள் வலிமை பெறும். மூளையின் இயக்கத்தைச் செம்மைப்படுத் துவதுடன் நல்ல ஞாபக சக்தியையும் உண்டாக்கும்.
- சுக்கு, மிளகு, திப்பிலி, தாமரைஇதழ், வெல்லம் சேர்த்து தண்ணீரில் விட்டுக் கொதிக்க வைத்து வடிகட்டி இரவில் ஒரு டம்ளர் சாப்பிடுவதால் மாரடைப்பைத் தடுக்கலாம்.
- வெள்ளைப் பூசனிக்காயை பூந்துருவலாக துருவி, உப்பு சேர்த்து இஞ்சி, பச்சை மிளகாய், கொத்தமல்லி, கருவேப்பிலை, கடுகு, தாளித்து தயிரில் கலந்து தயிர்ப் பச்சடியாக சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும். பூசணிக்காய் ரத்தக்கொதிப்பு, கொலஸ்ட்ரோல் தலைச்சுற்றல் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும்.
- கை சுளுக்கு உள்ளவர்கள் நீரில் மிளகுத் தூளும், கற்பூரத்தையும் போட்டுக் கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரைத் துணியில் நனைத்துச் சுளுக்கு உள்ள இடத்தின் மீது போடுங்கள். அல்லது டர்ப்பன்டைன் எண்ணெயைத் தடவினாலும் சுளுக்கு விட்டு விடும்.
- அறுகம்புல் சாறை மோருடன் குடித்தால் நீரிழிவு குறையும். உலர் திராட்சைப் பழத்தை வெது வெதுப்பான தண்ணீரில் அரை மணி நேரம் ஊறவைத்து காலையில் அருந்தினால் இதய நோய் தீரும்.
- புடலங்காயின் இலைச்சாறு, காலையில் குழந்தைகளுக்குத் தருவதால் கக்குவான், இருமல் குணமாகும். மலச்சிக்கல் நீங்கும். புடலங்காய் சமைத்து உண்பதால் தேவையில்லாத உடல் பருமன் குறையலாம்.
- கேரட் சாறும், சிறிது தேனும் பருகி வந்தால் கர்ப்பிணிப் பெண்களுக்கு வாந்தி மட்டுப்படும். எலுமிச்சை பழச் சாற்றில் ரசம் செய்து சாப்பிட்டால் உஷ்ணம் குறையும். கடுகை அரைத்து வலியுள்ள பகுதியில் போட்டால் வலி குறைந்து விடும்.
- நுரையீரல் சம்பந்தமான நோய்கள் குணமாக வெற்றிலைச் சாற்றில் இஞ்சி சாற்றைச் சேர்த்து குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். எள்ளில் இருந்து வரும் நல்லெண்ணெய்யைக் கொடுக்க உடல் இளைத்துக் காணப்படுபவர்கள் தேறி, உடல் எடை அதிகரிக்கும். ●

# கொஞ்சம் சிரிங்க



**அஜந்தன்:-** ஒரே ஒரு துணியைக் கிழிச்சா என்ன ஆகும்?
**முட்டாள் :-** ரெண்டாகும்
**அஜந்தன் :-** அதையே பத்துத் தடவை கிழிச்சா?
**முட்டாள் :-** பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இடம் கிடைக்கும்.

............................

**சொங்கி :-** அந்த மந்திரவாதி ஏற்கனவே ஆட்டோ டிரைவரா இருந்தாருன்னு எப்படிச் சொல்றா?
**மங்கி :-** பேயை ஓட்டனும்னு சொன்னா, மீட்டருக்கு மேல் எவ்வளவு போட்டுக் கொடுப்பேன்னு கேட்டாரு.

............................

**கணவன்:** அடியேய், மரியாதையா கிரிக்கெட் மேட்ச் போடு..
**மனைவி:** முடியாது, என்ன பண்ணுவே??
**கணவன்:** பாத்துக்கிறேன்...
**மனைவி:** என்ன பாத்துக்கிறேன்???
**கணவன்:** நீ எந்த சேனலை போடுறியோ அந்த சேனலை.

............................

**கணவன்:** 30 வருசத்துக்கு அப்புறம் இப்பேதான் உன் சாப்பாட்டுல மாறுதல் தெரியுது..
**மனைவி:** அப்படியா..?
**கணவன்:** அப்போ கருப்பு முடி கிடக்கும், இப்போ வெள்ளை முடி கிடக்குது.

............................

**முத்து:** பூக்களைப் பறிக்காதீர்கள் அப்படினு தோட்டத்துல போர்டு வச்சியே! இப்ப எப்படி இருக்கு?
**வடிவேலு:** நாதரிப்பசங்க தொட்டியோட தூக்கிட்டு போயிட்டாங்கப்பா! தூக்கிட்டு போயிட்டாங்க!
**முத்து:** ???

............................

**மனைவி:** என்னங்க ஏதாவது விலங்குகள் பூங்காவிற்கு கூட்டிட்டுப் போங்க.
**கணவன்:** சரி கிளம்பு..
**மனைவி:** எங்க போகலாம்?
**கணவன்:** உங்க வீட்டுக்குத்தான்...

# அழகுக் குறிப்புக்கள்



- கூந்தலை அலசும்போது கடைசியில் சிறிதளவு வினிகரை ஒரு கப் தண்ணீரில் கலந்து அலசினால், கூந்தல் பளபளப்பாகும்.
- இரவில் தூங்கச் செல்லும்முன் முகம், கை மற்றும் கால்களை நன்றாகக் கழுவி சுத்தம் செய்யவும். கை மற்றும் கால்களில் சிறிதளவு பாதாம் எண்ணெய் அல்லது மாய்ஸ்சரைசரைக் கொண்டு மசாஜ் செய்தால் மென்மையாகவும், நல்ல நிறமாகவும் இருக்கும்.
- பாலில் சிறிதளவு மஞ்சள் மற்றும் கடலை மாவைக் கலந்து குளித்து வந்தால் நல்ல நிறம் கிடைக்கும். கை முட்டிகளில் உள்ள கருமை நீங்க, எலுமிச்சைப்பழத்தின் சாறைத் தேய்க்க வேண்டும்.
- உருளைக்கிழங்கின் சாறை முகத்தில் தடவினால், பிளீச்சிங் செய்த பலன் கிடைக்கும். கண் இமைகளில் பாதாம் அல்லது விளக்கெண்ணெயை இரண்டு துளிகள் விட்டுத் தூங்கினால், கண் இமை கருப்பாக நீண்டு வளரும்.
- குளித்தபின் கைகளில், கிளிசரின் மற்றும் பன்னீர் கலந்து தடவினால் கைகள் மென்மையாக மாறும்.
- உதடுகளில் பாலாடையைத் தடவி வந்தால், வறண்டு போன உதடுகள் மென்மையாக மாறும்.
- களைப்படைந்த கால்களை மிதமான உப்புக் கலந்த சுடுநீரில் 5 நிமிடம் ஊறவைத்து, பின் சிறிதளவு தேங்காய் எண்ணெயைத் தடவி விட்டு தூங்கினால் இரவில் ஆழ்ந்த உறக்கம் வரும். ●

# மன்னா விளம்பரப் பலகை

தியானம், பக்தி, தர்மத்தில் ஈடுபாடு, ஒழுக்கம் இவையெல்லாம் நம் மனதில் இருக்குமானால் இருக்கும் இடமே புனிதமாகிவிடும்.

பின்னாடி பேசுபவர்களுக்கு நாம் காது கொடுத்தால், நம்ம வாழ்க்கையில் நாம முன்னாடி போக முடியாது.

......................

மனித வாழ்க்கை ஒரேயோரு நொடிதான். ஒவ்வொரு நொடியிலும், முழுமையான வாழ வேண்டும்.

......................

வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். ஆனால் அதில் அச்சுப் பிழைகள் ஒவ்வொரு பக்கத்திலும் ஏராளம்.

உறவுகளோடு இருக்கும்போது இறைவனின் பார்வை உன்மீது இருக்கின்றது என்று மகிழ்ச்சியாக இரு. தன்னந்தனியாக நிற்கும்போது இறைவனே உன்னோடு இருக்கின்றார் என்று நம்பிக்கையோடு இரு.

தனக்காக வாழ்வது என்பது இறகை விட இலேசானது. பிறருக்காக வாழ்வது மலையை விடப் பளுவானது. அந்த பளுவைச் சுமக்கத் தயாரானவரே சவாலான வாழ்க்கையை வாழ்கின்றான்.

......................

நன்மையோ தீமையோ அவரவர் செய்யும் செயல்களுக்கு உண்டான பலனை இன்று இல்லையானாலும் என்றாவது நிச்சயம் அனுபவித்தாக வேண்டும்.

......................

நீங்கள் எதை செய்தாலும் உங்கள் உள்ளத்திற்கும் உலகத்திற்கும் உண்மையாகவே நடந்து கொள்ளுங்கள்

புரிந்து கொண்டால் கோபம்கூட அர்த்தம் உள்ளதாய் தெரியும். புரியவில்லை என்றால் அன்புகூட அர்த்தம் அற்றதாய் தெரியும்.

# கலை இலக்கியச் சாளரம்

## அ. ஜஸ்மின் ஷறோனின் கவிதைகள்

### விலை பேசப்படும் விதவைக்கோலம்

விசாலமாய் விரிந்து நின்று விரைந்து வரும் களைதீர!
விசும்பிய காற்றலையால் வருடிச் செல்லும்
வீரமான மரமாம் ஆலமரம் போல
விசாலமாய் கிளை பரப்ப வேண்டிய – பெண்ணினம்
விதவை" எனும் பட்டம் சூட்டி
விலை பேசப்படுவது எதற்காக...? – பெண்ணினம்
கெட்டளியவா..! இல்லை கொட்டகைக்குள் முடங்கிவிடவா..!

கையிலே ஒரு பிள்ளை மடியில் ஒரு பிள்ளையைச் சுமந்து
கவனிக்க கணவன் இன்றி கதி கலங்கி நின்ற பெண்ணை
காமுகன் கண்வைத்து தன் வலைக்குள்
வழித்தெடுக்கின்றானே...!
மதிகெட்ட அவன் மாற்றானின் மனைவியை கதிகலங்க
வைக்கின்றானே - பெண்மையின் மேன்மைதான் என்னவோ...!

நல்ல காரியம் நடந்தாலும் நாடு சுதந்திரம் அடைந்தாலும்..!
நாயகன் அல்லாப் பெண்ணை நடுவீட்டிற்குள்
தள்ளிவிடுகின்றாரே!
நாளை தானும் இந்நிலை ஆனால் என்னாகுமோ...!
பூவில்லை, பொட்டில்லை இவள் முகத்தில் விழித்தால்...
பாரில் எம் வாழ்வு பாழ்பட்டுப் போகுமே..!
மனிதம் சீறி எழுகின்றதே...!

வட்டமான கடிகாரத்தில் சத்தமிட்டபடி
நொடிப் பொழுதைத் தாண்டும் கடிகாரம் போல..
காவலனை இழந்த கண்மணி நொடிப்பொழுதும்
கவலையோடும் ..நடுக்கத்தோடும் தாண்டுகிறாளே...!
பெண்மையின் மென்மை தான் என்னவோ...?

வேண்டாம்.. அடைபட்டு.. அலைக்கழிக்கப்படுவது..!
குலைபட்டு.. குடிசைக்குள் முடங்குவது...!
இவர்களையும்.. வாழ விடுங்களேன்...!
பெண்மை மதிக்கப்படட்டும்..! பெண்ணினம் போற்றப்படட்டும்..!
பெண்மையைப் பேணிப் பாதுகாக்க பெருவருட்சமாகப்
புறப்படுவோம்...! - வாழ்க பெண்ணினம்.. வளர்க பெண்மை..
உயர்க பெண்ணினம்.. உருவாகட்டும் பெண்தலைமுறை...! ●

### அநாகரிகமான அகதி வாழ்க்கை...!

ஐயோ.. பசிக்கிது அம்மா.. அம்மா..!
தண்ணி தவிக்கிது தாங்க முடியலையே...
அழுது புரண்ட பிள்ளைகளை – தாய்
அரவணைத்து கொள்கின்றாள் அடக்க முடியாக் கண்ணீரோடு...!

படுக்க இடமில்லை.... உறங்கப் பாயில்லை....!
நிரந்தர வீடில்லை... உறவுகளைக் காணவில்லை..!
மனைவியைக் காணவில்லை... பிள்ளையைக் காணவில்லை...!
ஐயோ... சாவதைத் தவிர வேறு வழியில்லை...!

கந்தல் துணியோடு வந்த வழியில் வழுக்கி விழுந்து...
ஆடையெல்லாம் அறுபட்டுப் போக நிர்வாணக்கோலத்தில்...
நிர்க்கதியானோமே... நிம்மதி இழந்தோமே...
கவனிக்க யாருமில்லை... கலியுலகப் பாதையிது...

யார் செய்த பாவமோ... யான் செய்த புண்ணியமோ...
உடமைகள் போனாலும் உயிராவது மிஞ்சிற்றே...
உயிரே... வேண்டாம் செத்தால் தான் நிம்மதி...
பெருமூச்செறிந்தான் வீட்டுத் தலைவன்...!

அகதி வாழ்க்கையின் அல்லலைப் பார்த்தால் ...
அன்புக்கு ஏங்கி... ஆதரவுக்கு ஓடி
கூண்டில் அடைபட்ட கிளிபோல...
அந்தரித்து அவதியுற்ற மானிட வர்க்கத்தின்
அடக்க முடியா வடுக்கள் என்று தீருமோ...!

இனியும் வேண்டாம் இந்த வாழ்க்கை...!
இனங்களில் பிரிவின்றி... சாதி மத பேதமின்றி...
இனிதாக வாழ்வோம்...! இன்பமாய் வாழ்வோம்...!
இருளின் இருப்பில் இருந்து ஒளியை நோக்கி விரைவோம்..!
அருள் வாழ்வு வாழ ஆவலுடன் புறப்படுவோம்....! ●




## வெற்றிப்படி.

அனைவருக்கும் பொதுவாகத்தான்
ஒவ்வொரு நாளும் மலர்கின்றது
அனைவரது கனவும் நிறைவாய் விடிகின்றது
எல்லோராலும் முடியும்
துணிந்து எதையும் எதிர் கொண்டால்...!

இனிய உதயம் ஒவ்வொரு நாளும் கிழக்கில் மலரும்
விழித்து எழுந்தால் வாழ்க்கை விடியும்
புன்னகை சிந்திப்பார் இதயம் கனியும்!
எண்ணப்படிதான் வாழ்க்கை அமையும்

ஒவ்வொரு நொடியும் இரசித்து மகிழ்
உறுதியாய் செயற்பட்டு ஒவ்வொரு நாளையும் ஒளிமயமாக்கு
படிப்படியாக உயர்ந்து வாய்ப்புகளை எட்டிப்பிடி
இறுதிப்படிகளின் மீதும் ஏறி நின்று ஒவ்வொருவரும்
அசைக்க வேண்டும் வெற்றிக்கொடி..!

நேற்று இன்றாகாது இன்று போல் நாளை அமையாது
கடந்தகாலம் என்பது முடிந்து போனது
நிகழ்காலம் மட்டும்தான் மகிழ்ச்சிகரமானது – ஆதலால்
இந்நாளும், எந்நாளும் நன்னாள்தான்
ஒவ்வொரு விடியலும் புதுமையானதுதான்

உழவனின் உழைப்பு விவசாயத்தின் மதிப்பு
வியர்வை சிந்தாமல் மண்ணிற்கேது செழிப்பு?
எண்ணத்தின் சிறப்பு இன்பத்தின் பிறப்பு
வாழ்க்கை மலர வண்ணத்தை நிரப்பு
மனிதனை சக மனிதன் மதிக்கவில்லையென்றால்
ஆண்டின் முதல் நாளை மட்டும் கொண்டாடுவதால்
மகத்துவம் அடைவோமா.. சொல்?
ஒவ்வொரு நாளையும் அனுபவித்துச் செல்! ●




---

செபமாலை அன்னையின் மாதம் - ஒக்ரோபர்

# "தினமும் செபமாலை செபிப்போம்"

## இ. பற்றீசியா பீரிஸ், வங்காலை

செபமாலை எமது கத்தோலிக்கத் திருச்சபையின் விலைமதிக்க முடியாத சொத்து. படித்தவன் முதல் படிக்காதவன் வரையில் செபிக்கும் விசுவாசத்தின் வெளிப்பாடே இந்த செபமாலை. இன்றும் எமது கத்தோலிக்க மக்களின் மனதில் இடம் பிடித்த செபத்தியானம் என்றாலும் மறுப்பதற்கில்லை. மேலும் நமது விசுவாச வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ள செபமாலையின் தேவ இரகசியங்களின் பொருளை அறிவது காலத்தின் கட்டாயமாகும். இயேசுவின் மறையுண்மைகளை சிந்திக்க வைக்கும் சிறந்த கருவி இந்த செபமாலை. இது நற்செய்தியின் சாரம், மீட்பு வரலாற்றின் சுருக்கம் என்றால் அது மிகையாகாது. செபமாலையின் நிகழ்வுகளை நற்செய்தியின் ஒளியில் தேடிய திருஅவை இயேசுவின் மனுவுரு, பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பு ஆகியவற்றைத் தந்து இயேசுவின் வாழ்வில் நடந்த உண்மை நிகழ்வுகளைத் திருச்செபமாலையில் சேர்த்து 153 மணிச் செபத்தை முழுமையாக்கியது. அத்துடன் புனித திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அவர்கள் இயேசுவின் வாழ்வில் நடந்த புதுமைகள், உண்மை நிகழ்வுகளையும் செபமாலையுடன் சேர்த்து 203 மணிகளாக கொடுத்துள்ளார். அதுதான் இயேசுவின் வாழ்வில் நடந்த ஒளியின் மறையுண்மைகளாகும். இறைவார்த்தைக்கு செவிசாய்த்து அதன்படி நடந்து வாழ்வை வளமாக்கியவள் இறை அன்னை மரியா!, தூய ஆவியின் வல்லமையால் இறைமகன் இயேசுவைப் பெற்றாள். மரியன்னைக்கு தினமும் செபமாலையை நாம் ஒப்புக் கொடுத்து மகிழும் போது தூய ஆவியின் வரங்கள் நம் இல்லங்களிலும், உள்ளங்களிலும் பொழியப்படும் என்பது எமது நம்பிக்கை.

அன்னை மரியாவையும் இயேசுவையும் வாழ்த்திப் போற்றுகின்ற செபமே செபமாலை. இதில் பரலோக மந்திரம் இயேசு நமக்குக் கற்றுக் கொடுத்தது. அருள் மிகப் பெற்றவரே என்று விண்ணகத்தந்தை வாழ்த்திய செபம், மூவொரு இறைவனை வாழ்த்துவது கொரிந்தியர் திருமுகத்திலும் உள்ள ஆழமிகு வார்த்தைகளாகும்.



ஓ... என் இயேசுவே என்ற செபம் பாத்திமாவில் மரியன்னை மூன்று சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுத்த முக்கியமான செபம். இது அன்னை நமக்குக் கற்றுக் கொடுத்த செபம். செபமாலை சொல்லும் மரியன்னையின் குடும்பங்கள ஆசீரைப் பெறும் இல்லங்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. மரியன்னை அழகுற அமைத்த இந்த செபமாலை தியானம் கிறிஸ்தவ மக்களை இறைவார்த்தையில் ஆழப்படுத்தவும், இறை அழைத்தலுக்கு செவிசாய்க்கவும் நம்மைத் தூண்டுகின்றது. ஒவ்வொரு இல்லங்களிலும் "மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே.." என்ற வாழ்த்தொலி ஒலிக்கச் செய்து செழிப்புள்ள அழகான கிறிஸ்தவ குடும்பங்களாக வாழுவோம். மரியன்னையின் நிறைவான ஆசீரைப் பெறுவோம். மரியே! வாழ்க! ●

# செபமாலை அன்னையின் மகிமை

## அருட்சகோ. மரிய மனோகரி சீலி C.R, பட்டித்தோட்டம், மன்னார்.

பாரெங்கும் போற்றும் செபமாலை அன்னை எம் அம்மா. திருச்சபையின் வரலாற்றில் மிகவும் இறைதிட்டத்திற்கு தன்னைக் கையளித்த பெண் ஒருவர் என்றால் எம் செபமாலை அன்னை என்பது மிகையாகாது. செபமாலைக் கன்னியர்களாகிய நாங்கள் எங்களது சபையின் பெயரைத் தாங்கியிருப்பது இந்த செபமாலை அன்னையின் மகிமையாலாகும். நாங்கள் செபிக்கும் நம் மீட்பின் கருவியான செபமாலை, இந்த முழு உலகையும் அன்னையின் பால் திசை திருப்புகின்றது. அன்றைய பாப்பரசர் 13ம் கிரகோரியார் செபமாலை அன்னையின் விழாவை ஆண்டு தோறும் ஐப்பசி மாதம் 07ம் திகதி கொண்டாடும்படி கட்டளையிட்டார். அதன்படி இன்று வரை அன்னைக்கு மகிமை சேர்க்கும் வகையில் அன்றைய தினம் நினைவு கூரப்படுகின்றது.

செபமாலைப்பக்தியின் திருத்தந்தை எனப்படும் 13ம் சிங்கராயர் கூறுகின்றார். "செபமாலைப்பக்தி முயற்சியில் நாம் பங்கெடுக்கும் போது மரியன்னையின் அரவணைப்பில் நாம் இருக்கின்றோம்" என்றார், என்றும் புனித குழந்தைத் தெரேசாள் கூறுகிறார் "செபமாலை செபிக்கும் நேரம் மரியாளின் தோழமையுடன் மூவொரு இறைவனுடன் கொள்ளும் ஒன்றிப்பு பொழுதாகும்." நாம் வாழும் இந்த அறிவியல் தொழில்நுட்பம் நிறைந்த உலகில் திருச்செபமாலையின் பக்தியும் விசுவாசமும் வளர்ந்து கொண்டிருக்கின்றது என்பதற்கு செபமாலைக் கன்னியர்களாகிய நாங்களும் இதற்கு ஒரு சான்றாக இருக்கின்றோம். அன்று அன்னை மூன்று சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்து சொன்னது, செபமாலை செபியுங்கள் உலகத்தில் காட்டாறு போல பாவம் நிறைந்த வெள்ளம் பெருகிக் கொண்டு இருக்கின்றது. இதற்கு தேவையான ஒன்றாக இருப்பது செபம், தபம். ஆகவே செபமாலை செபியுங்கள் என்று கூறினார். அதன் பிரகாரம் "அருள் நிறைந்த மரியே வாழ்க " என்ற செபம் தான் மீட்புத் திட்டத்தின் அடிக்கல்.

அன்னை என்றுமே எங்களுக்காக இறைத்தந்தையிடம் பரிந்து பேசிக் கொண்டிருக்கின்றார். அவளின் நாமத்தில் வாழும் நாங்கள் அன்னையை எம் தாயாகக் கொண்டு வாழ்கின்றோம். நாங்கள் எல்லா வேளைகளிலும் செபமாலை செபிக்கின்றோம். எல்லா வேளைகளிலும் செபிக்கக்கூடிய செபம் புனித செபமாலை என்றும் செபமாலை மாதா துறவறசபையை நிறுவிய எம் இறையடிகளார் B.A தோமஸ் O.M.I அடிகளார் கூறியுள்ளார். இவ்வாறு வரலாற்றிலும், வாழ்க்கை அனுபவத்திலும் திருச்செபமாலையின் மேன்மையும், புனிதமும் போற்றுதலுக்குரியதாக இருக்கின்றது. தற்போது நவீன உலகில் மக்கள் இந்த பரம இரகசியங்களை மறந்து கணனி யுகத்தில் வாழ்கின்றார்கள். இவர்களின் வாழ்வு மலர இவர்களுக்காக செபமாலைக் கன்னியர்களாகிய நாங்கள் மரத்திற்கு அடியில் போடப்படும் உரமாக மறைவாக இருந்து செபிக்கின்றோம். வேதனை, இழப்புக்கள், பிரிவினைகள், வறுமை, வெறுமை ஆகியவற்றில் தள்ளாடி வாழ்க்கையின் விரக்தியின் விளிம்புகளில் வாழுகின்ற அனைவருக்காகவும் திருச்செபமாலை மூலமாக அன்னையின் பரிந்துரையையும், அவளது தயவையும் நாடுகின்றோம்.

14

# மரியன்னையின் செபமாலைப் பக்தியை பரப்புவோம்

## - இ. பற்றீசியா பீரிஸ் வங்காலை -

செபமாலையை ஒவ்வொரு நாளும் பக்தியோடு செபிக்கும் மக்களுக்கு தூய மரியன்னை கொடுத்த வாக்குறுதிகள், செபமாலைப் பக்தி நித்திய வாழ்வின் முன் அறிகுறி, செபமாலையைத் தொடர்ந்து செபிப்பதன் மூலம் எனக்கு ஊழியம் செய்பவர்கள் சிறப்பான அருளைப் பெறுவார்கள். தேவ இரகசியங்களைத் தியானித்து பக்தி உருவாக்கத்துடன் செபமாலை செபிப்பவன் அகால மரணத்திற்கு ஆளாக மாட்டான் இறைவன் அவனை தண்டிக்க மாட்டார். செபமாலைப் பக்தியைப் பரப்புகின்றவர்கள் என்னிடமிருந்து தங்கள் தேவைகளில் உதவியைப் பெற்றுக் கொள்வார்கள். செபமாலை செபிப்பவர்கள் அனைவரும் எனது மக்கள். எனது ஒரே மகன் இயேசுக் கிறிஸ்துவின் சகோதரர்கள். செபமாலைப்பக்தியைப் பரப்புகின்றவர்களுக்கு வாழ்நாளிலும் மரண வேளையிலும் அவர்களுக்காக பரிந்து பேச எனது தெய்வ மகனிடமிருந்து உத்தரவு பெற்றுள்ளேன். செபமாலையில் உண்மையான பக்தி கொண்டிருப்பவன் திருச்சபையின் திருவருட்சாதனங்களைப் பெறாமல் சாகமாட்டான்.

15

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.207

**யோபு (அதிகாரம் 34 முதல் 42 முடிய)**

உங்கள் விடைகளை டிசம்பர் மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | 02 | | |
| | | 03 | | | | | ✡ | | | |
| | | ✡ | | | | | 04 | | | |
| | 05 | | 06 | | | | | | 07 | |
| | | | 08 | ✡ | | | | 09 | | |
| 10 | | | | | 11 | | | | | 12 |
| | | 13 | | | | | 14 | ✡ | | |
| | | | ✡ | | | | 15 | | | 16 |
| 17 | | | | | | ✡ | 18 | | | |
| | 19 | | ✡ | 20 | | | | 21 | ✡ | |
| 22 | | | | | 23 | | | | 24 | |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(– என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. மண்ணகத்திற்கு நான் .......... இடும்போது நீ எங்கு இருந்தாய்?
3. இதோ தொடுவோர் ................ தொலைந்துபோம்.
5. பின்பு அதன்முன் ................த் துணிபவர் யார்?
6. ஆனால் இப்பொழுது என் ............ உம்மைக் காண்கின்றன.
10. நான் ............. இருந்தும் என்னைப் பொய்யனாக்கினார்.
11. நீர் ............ போல் அவர் இறைவனை இகழ்கின்றார். (இறுதி 3 எழுத்துக்கள் மாறியுள்ளன)
17. ஏனெனில் ஒருவரின் செயலுக்கேற்ப அவர் .......... செய்கின்றார்.
18. .................. மூடுபனியை ஈன்றெடுப்பவர் யார்?
22. எனக்கு என்ன ............. என நீர் கேட்கின்றீர்.

### மேலிருந்து கீழ்

1. குறித்த ............. விடிவெள்ளியைக் கொணர்வாயோ?
2. வீறுகொண்ட .......... கட்கு வேந்தனும் அதுவே.
4. இவ்வாறு யோபு முதுமை அடைந்து பல்லாண்டு ....... இறந்தார்.
7. அறிவில்லாமல் ஆலோசனையை ..................... எவன்?
11. அவரும் ஒடுக்கப்பட்டவர் ...........க் கேட்டார்.
13. வார்படக் கண்ணாடியை ஒத்த திண்ணிய விசும்பை அவரோடு ........... விரிக்கக்கூடுமோ?
16. அவர் ............... ஒருதலைச் சார்பாய் நடத்தமாட்டார்.

### வலமிருந்து இடம்

2. அப்போது வைகறை .................. ஒன்றிணைந்து பாடின.
4. அதன் ............... தீப்பிளம்பு கிளம்பி வரும்.
8. ஊதுகொம்பு ............... ஓய்ந்து நிற்காது.
9. நேர்மை எதுவோ அதை நமக்குநாமே ................... கொள்வோம். (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
14. வானத்துப் புள்ளினங்களைவிட நம்மை ஞானி ஆக்குகின்றவரும் ...........?
15. அவர்.........ப் புகழ்வதில் கருத்தாயிரும்?
21. பாழ்வெளிக்கும் வறண்ட நிலத்திற்கும் நீர்பாய்ச்சிப் ............. புல்முளைக்கச் செய்தவர் யார்?
23. விசும்பின்கீழ் மின்னலை ....................ச் செய்கின்றார்.
24. தீர்ப்பும் .................. உங்களைப் பற்றிப்பிடித்தன.

### கீழிருந்து மேல்

5. அச்செடி தன் ................ அதை மறைக்கும்.
7. ஏனெனில் .................. அது தன் முட்டையை இடும்.
12. விரித்துச் ............... எழும்பொழுது பரியோடு அதன் வீரனையும் பரிகசிக்குமே.
16. உண்மையில் நீதியை வெறுப்பவரால் ........... செய்ய இயலுமா?
19. அவர் வல்லமையும் ............... கொண்டவர். (இறுதி எழுத்து 2வதாக உள்ளது)
20. எல்லா மனிதரும் அவரது கைத்............. அறிய எல்லா மாந்தரின் கையையும் கட்டிப்போடுவார்.
21. ஏனெனில் உறை .................. "மண்மிசை விழு" என்பார்.
22. யோபின் புதல்வியரைப்போல் அழகு வாய்ந்த ............. நாடெங்கும் இருந்ததில்லை.
23. ...............த் தம் கைக்குள் வைக்கின்றார்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 205 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:




**முதலாம் பரிசு:**
A. கொன்சிக்கா குரூஸ்,
சின்னப்பண்டிவிரிச்சான்,
மடுக்கோவில்.

**இரண்டாம் பரிசு:**
அ. அமலினா,
ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு:**
ம. டன்சியா
பள்ளிமுனை,
மன்னார்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 95 பேர். சரியான விடைகளை எழுதியோர் 66 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 205ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. க. ஜக்லின் ஜினுவிக்கா, உமநகரி, நானாட்டான்.
02. யோ. ஜெனோன்சி லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
03. ஜெகநாதன், இலக்கம்: 161, மடுக்கரை, நானாட்டான்.
04. அ. மேரி டொறோதியா குரூஸ், 6ம் வட்டாரம், வங்காலை.
05. J. யூடி டலிமா, தோமஸ்புரி, வங்காலை.
06. செ. மரிஸ்ரெலா, குளக்கட்டு வீதி, அடம்பன்.
07. டெபோறா மோனக்ராஜ், தபாலக வீதி, மன்னார்.
08. ஞா. வினோதர்சி, முதலைகுத்தி, உயிர்த்தராசன்குளம்.
09. M. பிளன்ரீனா, கன்னியர்மடவீதி, மன்னார்.
10. A. யனோஷிகா, பெரியகுளம், பறப்பாங்கண்டல்.
11. வி. தனுப்பிரியன், உயிர்த்தராசன்குளம், பறப்பாங்கண்டல்.
12. வி. மேரி றெஜினா, சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோவில்
13. பு. அனற் ஜீவிதா, பாப்பாமோட்டை, மன்னார்.
14. நி. அனற்லீன், பாப்பாமோட்டை, மன்னார்.
15. செல்வி. வயலட்யோண், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
16. பு. அனற் செறோண், பாப்பாமோட்டை, மன்னார்.
17. J. மேரி சாமினி, கற்கிடந்தகுளம், முருங்கன்.
18. J. சந்தோஷ் லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
19. S. அசுந்தா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
20. S. டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.
21. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
22. V. கெலன் தர்ஷிகா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
23. V. பிரசாந்தன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
24. அ. ஒசின் சோபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
25. ஜேம்ஸ் இலக்கியன், தோட்டவெளி, மன்னார்.
26. அ. டிலோஜன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
27. J. மேரி சாலினி கொடுதோர், கற்கிடந்தகுளம், முருங்கன்.
28. அருள் அனுஷா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
29. R. ஜொனா கிறிஷ் குலாஸ், கெபிவீதி, பேசாலை.
30. அருள் அலைக்சாந்திரியா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
31. ஜெனிங்ஸ் அபிஷானி, குழந்தையேசுபுரம், மன்னார்.
32. ச. மரிய கொண்சிக்கா குரூஸ், சிலாவத்துறை.
33. J. ஜெயலுக்சி, திருநாவற்குளம், வவுனியா.
34. A. அன்றியா காத்தான்குளம், நானாட்டான்.
35. சந்தாம்பிள்ளை செலஸ்ரினா, நாகதாழ்வு.
36. அ. ஜஸ்மின் ஷறோண், ஆவணம், நானாட்டான்.
37. B. டிவைனா குரூஸ், வளனார்புரம், தாழ்வுபாடு.
38. பா. நிஷாந்தினி, உயிர்த்தராசன்குளம்.
39. S. வரதன் குரூஸ், வளனார்புரம், தாழ்வுபாடு.
40. J. யேசுராணி லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
41. றெபேக்கா பற்றிக், சின்னக்கடை, மன்னார்.
42. இசக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
43. S. றெமோனா பறுனாந்து, 8ம் வட்டாரம், பேசாலை.
44. ப. எஸ்தர், ஓலைத்தொடுவாய், பேசாலை.
45. J. ஆரணா லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
46. எ. நிறொன்சன், பாப்பாமோட்டை, மன்னார்.
47. வி. வேஜின் டிலைக்சனா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
48. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
49. தேவிகா பத்மராஜா, பெரியகடை, மன்னார்.
50. S. செபமாலை 7ம் வட்டாரம், பேசாலை.

## மன்னார் மறைசாட்சி.....

### 01ஆம் பக்கத் தொடர்ச்சி.

மன்னார் மறைசாட்சிகளின் 475ஆவது ஆண்டு நிறைவு விழாவை நினைவுகூருகின்ற வேளையில் மன்னாரில் 1544ஆம் ஆண்டு கத்தோலிக்க விசுவாசத்திற்காக இன்னுயிர் ஈர்ந்த இம்மறைசாட்சிகளை நினைவு கூர்ந்து அவர்களைக் கத்தோலிக்க திருஅவையின் மரபுக்கேற்ப புனிதர்களாக உயர்த்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

475ஆவது ஆண்டு நிறைவு விழா சிறப்புத் திருப்பலியைத் தொடர்ந்து யூபிலி மலர் வெளியீட்டு நிகழ்வு இடம் பெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் "வித்துக்கள்" யூபிலி மலரை அனைவருக்கும் முன்பாக உயர்த்திக் காட்டி வெளியிட்டு வைத்தார். மன்னார் மறைசாட்சிகளின் புனித மரணம் கத்தோலிக்க விசுவாசத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது. இம் மறைசாட்சிய புனித மரணம் இன்றும் கத்தோலிக்க திருஅவையில் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. ஆகவே கத்தோலிக்க விசுவாசத்தின் எடுத்துக்காட்டாக இருக்கின்ற மன்னார் மறைசாட்சிகளின் மரணம் இறையருளால் புனிதமடைய, மன்னார் மறைசாட்சிகள் புனித நிலைக்கு உயர்த்தப்பட அனைவரும் ஒன்றிணைந்து செபிப்போம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இந்நிகழ்வில் கூடியிருந்த அனைவரிடமும் வேண்டுகோள் விடுத்தார்.●

## அமைதி..

### 05ஆம் பக்கத் தொடர்ச்சி.

போரில்லா நிலையல்ல அமைதி வாழ்வு. மாறாக, ஒவ்வொரு தனி மனிதனும் தனது சுதந்திரத்தை, திறமைகளை, நன்மையானவற்றிற்கு, சுத்த கருத்துடன் பாவிக்கின்ற போது, சுயநலமின்றி பிறர் நலம் தேடுகின்ற போது, அங்கு அன்பும், உண்மையும், நீதியும், நியாயமும் நிலைக்கும். ஒருவர் தனது திறமைகளை பிறர் நலனுக்காக பயன்படுத்துகின்றபோது ஏனையோர் அவரில் பொறாமைகொள்ளாது தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தி நன்மைத் தனங்கள் பெருக உதவிசெய்து ஒருவருக்கொருவர் உறுதுணையாயிருப்பது கிறிஸ்த விழுமியங்களில் ஒன்று. ஆக, விண்ணரசின் பண்புகளான உண்மையும் நீதியும், மனிதரை அமைதி வாழ்வுக்கு இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை. ●

## செபமாலை...

### 13ஆம் பக்கத் தொடர்ச்சி.

தொடர்ந்து நாம் அனைவரும் எம் செபமாலை அன்னையினதும், திருக்குடும்பத்தின் பாதுகாவலரான புனித சூசையப்பரினதும் உருக்கமான பரிந்துரையால் தம் வாழ்வையே செபமாக மாற்றிய நம் ஆண்டவராகிய இயேசுவின் திரு இருதய பக்தியில் ஊறித்திளைக்கவும் தனித்து, விழித்திருந்து செபிக்கும் அருளைப் பெற்றுத் தரும்படியாக மன்றாடுவோம். ●

## மறைபரப்புப்பணி...

### 04ஆம் பக்கத் தொடர்ச்சி.

அதிகார மோதல்கள் போருக்கு வித்திடுவதால் துன்பங்களை அனுபவித்துவரும் இன்றைய உலகில் கருணை, அன்பு, நம்பிக்கை, உடன்பிறந்தநிலை ஆகியவற்றை உள்ளடக்கிய இயேசுவின் அமைதிச் செய்தியை அறிவிக்கவேண்டிய ஒவ்வொரு கிறிஸ்தவரின் கடமையை வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மறைபரப்புப்பணியில் முழுமையான ஈடுபாட்டுடன் செயல்படுவதற்கு செபத்தின் தேவையையும் தன் மூவேளை செப உரையின்போது எடுத்துரைத்தார் திருத்தந்தை.●

## வாழ்வால்...

### 02ஆம் பக்கத் தொடர்ச்சி.

தொண்டராக இருக்கத் தயாராக இருக்க விரும்புபவர்தான் பெரியவராக இருக்க முடியும். என் விருப்பமல்ல உமது விருப்பப்படி நடக்கட்டும் என்று அன்று இயேசுபிரான் இவ்வாறு தெரிவித்ததையும் நமக்குத் தெரியும். தியாகம் என்பது அடிப்படையில் நமக்குப் பிடித்தது ஒன்று மற்றவர்களுக்காக இழக்கத் தயாராக இருப்பது. ஆனால் அதையும் தாண்டி இன்னுமொரு ஆழமான அர்த்தம் இருக்கின்றது. இந்தத் தியாகம் என்பது ஒருவரை புனிதப்படுத்துவதாகும். நாம் எந்தளவுக்குத் தியாகம் செய்ய முன்வருகின்றோமோ அந்தளவுக்கு நம்மையும் மற்றவரையும் புனிதப்படுத்துகின்றோம் என அர்த்தமாகும். மன்னார் மறைமாவட்டத்தில் தாங்கள் சிந்திய இரத்தத்தால் மன்னார் மண்ணை மட்டுமல்லாமல் வட மாகாண மண்ணை மட்டுமல்லாது ஒட்டு மொத்த மனித குலத்தையே புனிதப்படுத்தியுள்ளனர் என நாம் சொல்லலாம். எமது தியாக வாழ்வால் எம்மையும் மற்றையவர்களையும் புனிதப்படுத்த முன் வருவோம். எமது நாட்டிலே மன்னாரில் 600க்கும் மேற்பட்ட ஆண், பெண் சிறுவர்கள் மறைசாட்சிகளைப்போல் யாழ் மாவட்டத்திலும் பலர் உயிர்த் தியாகம் செய்துள்ளார்கள்.

டச்சுக் காலத்திலும் எத்தனையோ பேர் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். கடந்த முப்பது வருட காலத்திலே பல்லாயிரக்கணக்கான மக்களும் தங்கள் உயிர்களை இழந்துள்ளனர். இவ்வருட பாஸ்கா விழாவின்போது ஏற்பட்ட குண்டுத் தாக்குதலில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். அவர்களின் அந்த உயிர்த் தியாகங்களின் வழியாக நாமும் புனிதப்படுத்தப்பட வேண்டும் என இறைவனிடம் மன்றாடுவோம். பரிசுத்த பாப்பரசர் தனது ரியூட்டர் செய்தியில் மறைசாட்சிகள் அன்பின் இடமான சக்திக்கும் தூய ஆவியானவரின் குரலுக்கும் விசுவாசமாக இருந்தவர்கள். மறைசாட்சிகளின் வீரத்துவ வாழ்வு ஒவ்வொரு நாளும் நற்செய்தியின்படி வாழ்வதற்கு எவ்வாறு உதவி செய்கின்றது என்பதை சிந்திக்குமாறு திருத்தந்தை எம்மை கேட்டுக் கொண்டார். ஆகவே நாமும் மன்னார் மறைசாட்சிகள் விரைவில் புனிதர்கள் பட்டம் பெற மன்றாடுவோம். இதற்காக வத்திக்கானிலும், உரோமாபுரியிலும் செயல்படுவோர்களுக்காகவும் இவர்களுக்கு தூய அவியானவரின் தூண்டுதல் பெறவும் நாம் மன்றாடுவோம். பரிசுத்த பாப்பரசரின் வேண்டுகோளுக்கிணங்க 2019 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தை மறைபரப்பு மாதமாக நாம் அனுசரிப்போம்.

நாம் எமது மறைமாவட்டத்தில் புதுப்பித்தல் ஆண்டாக இவ் ஆண்டில் செயல்படும் வேளையில் எமது வாழ்வால் மற்றவர்களை எவ்வாறு புனிதப்படுத்த முடியும் என சிந்தித்து செயல்படுவோம் என இவ்வாறு தனது மறையுரையில் தெரிவித்தார். ●

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# நீங்காத நினைவுகள்

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 10 1937



உதிர்வு 18 10 2018

### திரு. அந்தோனி இராசேந்திரம் அருளப்பு

(பெரியகுஞ்சுக்குளம்)

"ஆண்டவரே உம் கூடாரத்தில், தங்கிடத் தகுதியுள்ளவர் யார்! உம் திருமலையில் குடியிருப்பவர் யார்"

அன்பின் சிகரமாய், பண்பின் இலக்கணமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம்மைப் பெற்று
வளர்த்த எம் தந்தையே, ஆண்டு ஒன்றாகியும்
உம் நினைவு எம்மை விட்டகலவில்லை
உம் ஆன்ம இளைப்பாற்றிக்காக என்றும்
இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 04 1948



உதிர்வு 14 09 1999

### திருமதி. ஜெராட் அன்னம்மா ராஜேஸ்வரி

(லலிதா - மடு)

"அம்மா என்று அழைக்காத உயிரில்லையே!
அம்மாவை வணங்காது உயர்வில்லையே!"
இறைவன் தான் எல்லா இடமும் இருக்க முடியாது
என்பதற்காகத்தான் தாயைப் படைத்தார்.
"பால் குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ?
கருத்தாங்கினவள் தன் பிள்ளைமீது இரக்கம்
காட்டாதிருப்பாளோ?" (எசாயா. 49:15)
எம்மைவிட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் சென்றாலும் - உம்
நினைவுகள் எம்மைவிட்டு அகலவில்லை.
உம் ஆன்மா சாந்திபெற வேண்டி நிற்கின்றோம்.

பிரிவால் நினைந்துருகும் :
ஜோய் குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 25 02 1949



உதிர்வு 22 09 2019

### திரு. ச. அதிரியாம்பிள்ளை (அப்பையா)

(ஆத்திக்குளி, முருங்கன்)

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிகவும் மதிப்பிற்குரியது" (திரு.116.5)

பாசத்தின் பிறப்பிடமே! - எம்
குடும்பத்தின் குல விளக்கே!
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே!
நானிலத்தில் உம் உயிர் பிரிந்து
முப்பத்தொரு நாட்கள் ஆனதே!
நாடோடிபோல் எம் மனது
உம் முகமதை தேடுகிறது!
உமது ஆன்மா ஆண்டவரின் அடியில் இளைப்பாற கண்ணீர்
பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும், குடும்பத்தினர்.

## 06ஆம், ஆண்டு, 01ஆம் ஆண்டு நினைவஞ்சலிகள்





திரு. ஹே. அ. ஞானப்பிரகாசம் — திருமதி. ஞா. திரேசா

தாழ்வுபாடு வீதி, மன்னார்

மலர்வு : 05 - 10 - 1930
உதிர்வு : 12 - 10 - 2013

மலர்வு : 24 - 04 - 1929
உதிர்வு : 24 - 02 - 2018

ஈருடலும் ஒருயிரும் இணைந்தொன்றாய் வாழ்ந்தவர் நீர்
இனிய மக்கள் எமை ஈன்று இன்பமுடன் வாழ்ந்தவர் நீர்
பார்வியக்க பரமனடி தொழுது நிதம் வாழ்ந்தவர் நீர்
பண்பாலே அனைவரிலும் பாசமதை சொரிந்தவர் நீர்
நேர் கொண்ட பார்வையுடன் சேவை செய்து வாழ்ந்தவர் நீர்
நினைவெல்லாம் பிள்ளைகளெம் - உயர்வை
எண்ணி வாழ்ந்தவர் நீர்
வேராக நின்று வையமதை காத்துவரும்
வளந்திகளும் தேவனுமை இணைத்தருள வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்:
பாசமிகுந்த பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 01 1944



உதிர்வு 01 10 2007

### திருமதி. அ. கிறகோரியம்மா (தங்கம்)

(விடத்தல்தீவு)

ஓயாத சேவையினால் அனைவரையும் கவர்ந்து நின்று
உள்ளமதில் நீங்காத இனியதொரு இடம் பிடித்து
நீயாக முன் வந்து அன்பகலாப் பணி செய்து
நாளும் பொழுதுமெமைக் கண்மணிபோற் காத்து நின்று
தாயாக அனைவரையும், கருணையுடன் நோக்கி என்றும்
கனிவான புன்சிரிப்பால், கவலையெலாம் கரைத்து நின்றாய்
சேயாக மாறிச் செபமாலை தினம் செபித்த
ஆசைமிகுந்த அம்மா, இறைவனுடன் இணைந்திடுக!

பிரிவால் நினைந்துருகும்:
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

## மடுமாதா...

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

திருப்பலியின் முடிவில் குருமடத்தின் கேட்போர் கூடத்தில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து பழைய மாணவர்களின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், திருவிழா மதிய போசனமும் மாலை நிகழ்வாக குருமட மாணவர்களோடு பழைய மாணவர்கள் உதைப்பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொண்டு அன்றைய நாளை சிறப்பித்திருந்தார்கள். திருவிழாவின் ஒழுங்குகளை இயக்குனர் தந்தை அருட்பணி. நேசரெட்ணம் அடிகளாரும் உதவி இயக்குனர் அருட்பணி. தயாளன் அடிகளாரும் அழகாக ஒழுங்குபடுத்தியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

## மரியன்னையின்...

13ஆம் பக்கத் தொடர்ச்சி.

பிரமாணிக்கத்துடன் இவ்வுலக வாழ்விலும் மரண வேளையிலும் இறைவனின் இரக்கத்தையும் அவரது ஒளியையும் காண்பார்கள். செபமாலை செபிக்கும் வழிகளில் மிகச் சிறந்தது என்றார் புனித பிரான்சிஸ் சவேரியார். செபமாலை சாத்தானை விரட்டிவிடும் சாட்டை என்றார் திருத்தந்தை ஆறாம் அதிரியான், செபமாலை மிகச் சிறந்த ஆயுதம் என்றார் ஐந்து திருக்காய வரம்பெற்ற அருட்திரு. பியோ சுவாமிகள், அன்னை மரியாளை அதிகமாக நேசிக்கும் இயேசுவின் திரு இருதயத்தை தொடுவதற்கு மிகச் சக்தி வாய்ந்த ஆயுதம் செபமாலை என்றார் புனித லூயிஸ் மரிய தெமோன்போட். ஆகவே கிறிஸ்தவ வாழ்வின் சக்தி வாய்ந்த ஆயுதமாகிய செபமாலையை கையிலேந்துவோம். தியானிப்போம். இறைசக்தி வாய்ந்த மனிதர்களாக மாறுவோம்.

## தீபாவளித்...

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

மதங்களுக்கிடையிலும், கலாச்சாரங்களுக்கிடையிலும் உரையாடல்களும், கூட்டுறவு முயற்சிகளும் வளர்ந்துவரும் இக்காலத்தில் வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றுவோரிடையே வெறுப்புணர்வும் அக்கறையற்ற மனநிலையும் வளர்ந்து வருகின்றன என்ற கவலை இச்செய்தியில் வெளியிடப்பட்டுள்ளது.

உண்மையான மதங்கள் வலியுறுத்தும் பண்புகள் ஒவ்வொரு மனிதரின் அடிப்படை மாண்பையும் மனிதர்கள் அனைவரையும் சகோதர சகோதரிகளாக நோக்கவேண்டிய பண்பையும் அனைத்து உண்மையான மதங்களும் வலியுறுத்துகின்றன என்று எடுத்துரைக்கும் இச்செய்தி அனைத்து மதத்தவரும் அமைதியை உருவாக்க அழைக்கப்பட்டுள்ளனர் என்று கூறுகிறது.

ஒரு சில எதிர்மறையான செய்திகளே தலைப்புச் செய்திகளாக ஊடகங்களை நிறைத்தாலும் உடன்பிறந்த உணர்வை விதைக்கும் நன்மைத்தனம் மனிதர்கள் மத்தியில் கடலென பெருகியுள்ளது என்ற நம்பிக்கையில் நாம் அமைதியைக் கட்டியெழுப்பவேண்டும் என்று இச்செய்தி அழைப்பு விடுக்கின்றது.

உண்மை, அன்பு, அகிம்சை ஆகிய உயர்ந்த இலட்சியங்களுக்கு சாட்சியாக வாழ்ந்த மகாத்மா காந்தி அவர்களின் 150வது பிறந்தநாள் நினைவு ஒக்ரோபர் மாதத்தின் ஆரம்பத்தில் கொண்டாடப்பட்டது. நமக்கு நல்லதொரு நினைவுறுத்தலாக விளங்குகின்றது என்று கூறும் இச்செய்தி காந்தி அவர்களின் வாழ்வு நம் அனைவருக்கும் உந்துசக்தியாக விளங்கவேண்டும் என்ற வாழ்த்துடன் நிறைவு பெறுகின்றது.●

## உலக...

04ஆம் பக்கத் தொடர்ச்சி

'ஏறிச்செல்வதற்கு' அழைக்கப்பட்டுள்ளோம் மலையோடு தொடர்புடைய ஒரு முக்கியமான வினைச்சொல், 'ஏறிச்செல்லுதல்' என்பதை தன் மறையுரையின் இரண்டாவது கருத்தாக பகிர்ந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாம் இவ்வுலகைச் சார்ந்த சாதாரண விடயங்களிலிருந்து மேலெழுந்து இறைவனைச் சந்திக்க ஏறிச்செல்வதற்கு அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை வலியுறுத்திக் கூறினார்.

ஏறிச்செல்லுதல் என்பது கடினமான ஒரு செயல் எனினும், அந்த முயற்சியை மேற்கொள்ளும்போது இறைவனைச் சந்திக்கவும் இவ்வுலகைக் குறித்து பரந்துபட்ட கண்ணோட்டம் பெறவும் நம்மால் இயலும் என்று திருத்தந்தை எடுத்துரைத்தார். இவ்வுலகம் சார்ந்த விடயங்கள் என்று பார்த்தால் நாம் தரையிலேயே தங்கிவிடுகிறோமா, அல்லது, இந்த பாரங்களை இறக்கிவைத்துவிட்டு, இறைவனைச் சந்திக்க நம்மையே உயர்த்திக்கொள்கின்றோமா என்ற கேள்வியை ஓர் ஆன்ம ஆய்வாக மேற்கொள்ளும்படி, திருத்தந்தை தன் மறையுரையில் விண்ணப்பித்தார்.

மறைபரப்புப்பணி நாளின் முக்கிய சொல் - 'அனைவரும்' உலக மறைபரப்புப்பணி நாளன்று நாம் சிந்திக்கவேண்டிய முக்கியமானதொரு சொல், 'அனைவரும்' என்பதை, தன் மறையுரையின் மூன்றாவது கருத்தாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பகிர்ந்துகொண்டார்.

'எல்லா மக்களினங்கள்' (எச. 2:2) எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் (மத். 28:19) எல்லா மனிதரும் மீட்புப் பெற (1திமொ 2:4) என்று விவிலியத்தின் பல இடங்களில் மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் சொற்களைக் காண்கின்றோம் என்பதைக் குறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை நம்மை நாமே மையப்படுத்தும் போக்கிலிருந்து விடுதலை பெற்று அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையைப் பெறுவதற்கு உலக மறைபரப்புப்பணி நாள் நம்மை அழைக்கின்றது என்று கூறினார். உலகெங்கும் சென்று மக்களை சீடராக்குங்கள் என்று இயேசு பணித்தபோது மக்கள் அனைவரையும் இறைவனின் இயேசுவின் சீடர்களாக்க பணித்தார் என்பதை மறந்துவிடக்கூடாது என்று மறைபரப்புப்பணி நாளன்று வழங்கிய மறையுரையின் இறுதியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.●

## முருங்கன்...

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

அமுதவிழா சிறப்புத் திருப்பலி, கலைநிகழ்வுகள், அமுதவிழா சிறப்பு மலர் வெளியீடு போன்ற நிகழ்வுகள் இதன் போது இடம்பெற்றன. இச்சிறப்பு நிகழ்விற்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் கலந்து கொண்டு இறையாசீர் வழங்கினார்.●

## மன்னார் மறைசாட்சிகளின் 475ஆம் ஆண்டு யூபிலி மலர்







# மன்னார் கத்தோலிக்க அச்சகம்

**கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார்**

**அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் துரிதமாகவும், நியாயமான விலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.**

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- பில் புத்தகங்கள்
- விளம்பரங்கள் (நோட்டீஸ்)
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

Offset Printing, Notice
Colour Print

**மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்**

தொடர்புகளுக்கு:
மன்னார் கத்தோலிக்க அச்சகம்,
கலையருவி
மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம்,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
T.P. No: 023-3233276
mannarcatholicpress@gmail.com


# நீங்காத நினைவுகள்

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 17 05 1958



உதிர்வு: 28 10 2006

### திரு. ஞானப்பிரகாசம் அமிர்தநாதன் (அமுதம்)
**(இல:114, மில்வீதி, வவுனியா)**

**“படைகளின் ஆண்டவரே! உமது உறைவிடம் எத்துணை அருமையானது” தி.பா. 84:1**

ஜனனம் தொடங்கி மரணம் வரையில்
மனிதனுக்கு தொடுக்கப்படுகின்ற வினாக்களோ பலவகை
எல்லாவற்றுக்கும் பதில் கொடுத்து
குறுகிய வயதானாலும் - பல
வழிகாட்டலினூடாக - எம்மை வழிநடத்தி வழிநடக்க
பல எடுத்துக்காட்டுக்களை எமக்கு விட்டுச் சென்ற - எம்
அன்புத் தந்தையே இறைவன் பதம் அமைதியுடன் இளைப்பாறி
எம்மவர்க்காய் வேண்டிட - உம் பதம் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,** என்றும் உங்கள் நினைவில் குடும்பத்தினர்

## 09ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 30 06 1988



உதிர்வு: 06 10 2010

### செல்வன். த. சில்வஸ்ரன்
**(பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்)**

அன்பின் இருப்பிடமே!
பாசத்தின் உறைவிடமே!
குடும்பத்தின் ஒளிச் சுடரே!
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள்
ஒன்பது ஆனதையா!
ஆறவில்லை எம் துயரம்
நித்தம் நித்தம் உன் நினைவு அலைகள்
எம்மை வேதனையில் ஆழ்த்துகின்றது!
உம் ஆன்ம சாந்திக்காக இறைவனிடம் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:**
குடும்பத்தினர்,

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 27 06 1955



உதிர்வு: 26 10 2017

### திருமதி. றொசாறி ஜெனிற்றா றோச்
**(பள்ளிமுனை, மன்னார்)**

இரண்டு ஆண்டுகள் சென்றதம்மா நீங்கள் இல்லறம் விட்டுப் பிரிந்து. வைத்தியசாலையில் சுகம் பெற்று வருவீர்கள் என்று காத்திருந்த வேளையிலே.. கதிகலங்க வைத்ததே உங்கள் துயரச் செய்தி. தாலாட்டுப்பாடி உனை உறங்க வைக்க முடியாது என்றா? உங்கள் தாய்மடி தேடி உறங்க பறந்து விட்டீர்கள். உங்கள் சேய்கள் நாங்கள் பரிதவிக்கின்றோமே அம்மா.
கண் எதிரே கண்ட முகம் கனவாகி போய்விட்டதே இனி நாங்கள், உங்கள் மடிதேடி வரும் வரை கனத்த இதயங்களுடனும் பனித்த விழிகளுடனும் கதிகலங்கி நிற்கின்றோம். எமக்காய் இறைவனிடம் வேண்டுங்கள். உங்கள் ஆன்மா நித்திய சாந்தியில் இளைப்பாற தினம் தினம் இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:** கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 12 01 2011



உதிர்வு: 07 10 2018

### செல்வன். பாலசிங்கம் நிலுக்ஷன்
**(உயிர்த்தராசன்குளம்)**

ஆண்டொன்று கடந்தும் - வற்றவில்லை விழிநீர்
பிஞ்சு வயதில் - எம்மை பதற வைத்துச் சென்றாயே மகனே
காலங்கள் சுழல்கின்ற - வேகத்தில்
உன் நினைவுகள் மட்டும் பசுமரத்தாணியாய்
முத்தே எங்களின் சொத்தே
உனை எப்போது காண்போம் - இனி
என்று உள்ளம் ஏங்குதையா
ஆழாத் துயரில் நாமிருந்தாலும்
நாளும் நீ ஆண்டவன் சந்நிதியில் இளைப்பாற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
அப்பா, அம்மா, தம்பி, உற்றார் உறவினர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 21 10 1965



உதிர்வு: 15 09 2019

### திருமதி. வலன்டினா சாந்தினி பெனடிக்ற்
**(8ஆம் வட்டாரம், பேசாலை)**

நினைவழுந்தி மனம் அழுகிறது சாந்தி!
துன்பச் சுனை நீங்காதோவென...!
மங்குவதோ உன் நினைவு தாங்காதே நின் இழப்பு...!
உற்ற உறவு நாமிருக்க
விட்டு விலகி ஓடுவதோ
பட்ட துன்பம் போதுமென்றோ
கடவுளை நீ நாடிச் சென்றாய்!
ஆண்டவனின் பாதமதில்
அடியவள் நீ சென்றாலும்
கண்கலங்கும் எமக்காக
வேண்டி நிதம் உறைந்திருப்பாய்...!

**பிரிவால் நினைந்துருகும்,** குடும்பத்தினர்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 19 01 1926



உதிர்வு: 11 10 2018

### திருமதி. யாக்கோப்பு திரேசம்மா துரம்
**(பேசாலை)**

அன்புமுகம் மறைந்தாலும்
அழியாது உங்கள் நினைவலைகள்
ஆறாத் துயர் எம் நெஞ்சை
அலையாய் சுடுகிறதே
இதயம் இத்துயர் சுமந்து ஈரமாறா துயரத்தில்
எம் இதயம் கனக்கின்றது.
உங்கள் நினைவலைகள் எம் உயிரோடு
உணர்வோடு கலந்து இதயத்தில் என்றும் நீங்கள்
எங்களோடு வாழ்கின்றீர்கள்.

**பிரிவால் நினைந்துருகும்,** பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்